

கல்கி
KALKI
20·10·1963
30
காசு



அம்மா ஆ ஆ ஆ ஆ

அவனுடைய வேதனையைப் போக்கி அவனைச் சிரிக்கச் செய்யுங்கள், உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் கொடுப்பதன் மூலம். இப்பொழுது ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் குழந்தைகள் (லட்சக்கணக்கில்) வாயு, வயிற்றுக் கோளாறு மற்றும் பல் முளைக்கும் போதுள்ள வேதனைகள் முதலியவைகளிலிருந்து நிவாரணம் அடைந்திருக்கின்றன. இத்தகைய நிவாரணத்தை உடவர்ட்ஸ் மட்டுமே அளிக்கிறது. தலைமுறை தலைமுறையாகத் தாய்மார்கள் செய்தது தவறாகவே இருக்கமுடியாது!

உட்வர்ட்ஸ்
'கிரைப் வாட்டர்'

100 வருஷங்களுக்கு மேலாக உலகெங்கிலும் உபயோகிக்கப்படுகிறது.



அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: ஹெர்பர்ட்ஸன்ஸ் லிட். பம்பாய், கல்கத்தா, & லக்னோ ● டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ், எம். ஜி. ஷஹானி & கோ. (டில்லி) பிரைவேட் லிட்., டில்லி.

Aiyars AT. 357-TM. A

கல்கி

பொருளடக்கம்

சோபகிருது, ஐப்பசி 3 ★ அக்டோபர் 20௳

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




பட விளக்கம் 67ம் பக்கம் பார்க்க

புகைபிடிக்கும் இங்கிதம்

பெண் மனம் புண்படா வண்ணம்...

மாதர்களோடு புழங்குகையில். இன்றியமையாதபோது மட்டுமே புகைபிடியுங்கள்—அதுவும் பெண் மனம் நோகாத வண்ணம். புகை பிடிக்கையிலே பெண்மணிகளை எதிர்ப்பட்டால். முகமன் கூறுவதற்கு முன் சிகரெட்டை அகற்றிக்கொள்வதே நலம். அவர்களைக் கடந்து சென்ற பிறகே தொடர்ந்து புகை பிடிப்பது நாகுக்கு.



உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனமா



இழுக்க இழுக்க இன்பம்- இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்.
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 617. TAM. Greaves' Advtg.



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 12

வெறும் பேச்சு எதற்கு?

விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? நமது பிரதமர் அவர்களுக்கு இந்தக் காரிய - காரண நியதி அவ்வப்போது மறந்து போய்விடுகிறது. இந்த 'மறதி'யை மீண்டும் நிரூபித்திருக்கிறார் அவர்.

திட்டக்கமிஷன் என்பது நேரு அவர்களின் சோஷலிஸத்தில் உதித்த சிருஷ்டி. பார்லிமெண்டுக்குக் கட்டுப்படாமலே, சோஷலிஸம் என்ற பெயரில் யதேச்சாதிகாரம் செய்யும் ஒரு தனிச் சர்க்காராகத் திட்டக் கமிஷன் வளர்ந்து வந்திருக்கிறது. அது சர்க்காருக்கும் மேம்பட்ட ஒரு ஸ்தாபனமாகியிருக்கும் அநியாயத்தைச் சுதந்திரக் கட்சியினரும், இதர எதிர்க் கட்சியினரும் பல முறை எடுத்துக் காட்டியதுண்டு. அப்போதெல்லாம் பிரதமரவர்கள் இந்த முறையின்மையைப் பற்றிக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தனது குழந்தை வளருவதைக் கண்டு ஒரு தாய் எப்படிப் பெருமைப்படுவாளோ அப்படியே தமது செல்லக் குழந்தையாகிய திட்டக் கமிஷனின் வளர்ச்சியைக் கண்டு உள்ளூறப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார் ஸ்ரீ நேரு அவர்கள்.

இப்படிப்பட்டவர் சென்ற வாரம் இந்திய ஸயன்ஸ் மகாநாட்டைத் திறந்து வைக்கும் போது ஒரு போடு போட்டார். "சர்க்காருக்கு ஆலோசனை சொல்லும் ஒரு சிலர் அடங்கிய குழுவாகத் திட்டக் கமிஷன் ஆரம்பித்தது. இப்போது அது சர்க்காருடைய எல்லா இலாகாக்களுக்கும் இணையான பிரிவுகள் கொண்ட ஒரு பிரம்மாண்டமான போட்டி ஸ்தாபனமாகி விட்டது. அதைக் கண்டாலே பயமாயிருக்கிறது; அதன் அலுவலகத்தைக் கண்டாலே பயமாயிருக்கிறது" என்றெல்லாம் பேசியிருக்கிறார்.

தெரிந்து செய்த ஒரு காரியத்தைக் கண்டு பயம் எதற்கு? திட்டக்கமிஷன் தோன்றிய நாளாக நேருஜிதான் அதன் தனிப்பெரும் தலைவராகவும், குருவாகவும், ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். நேருஜி சொன்னதே சட்டம் என்ற முறையில் திட்டக்கமிஷன் அவரது விருப்பங்களை சிரஸால் வகித்து நிறைவேற்றியிருக்கிறது. ஆயிரம் தலைப்பாம்பு போல் அது நாள்தோறும் பெருகி வந்தது அவருடைய மேலான அநுக்கிரகத்திலும், கண்காணிப்பிலும்தான். இவ்வாறிருக்க, தாம் ஏதோ திட்டக்கமிஷனின் காரியக்கிரமத்திலேயே தொடர்பற்றவர் போலவும், தமது ஆணையின் கீழ் அது இயங்காதது போலவும், திட்டக்கமிஷனின் முறையற்ற விஸ்தரிப்பைப் பிரதமர் இவ்வளவு காலம் கழித்துக் கண்டித்துப் பேசியிருப்பது அதிசயமாகத்தான் இருக்கிறது.

நேருஜி பேசியிருப்பதிலிருந்து சுதந்திரக் கட்சிக்கும், மற்ற எதிர்க் கட்சிகளுக்கும் சுவாரஸ்யமான விஷயம் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு மட்டுமின்றி சித்தத் தத்துவ நிபுணர்களுக்கும்கூட அதில் ருசிகரமான சரக்கு இருக்கிறது! ஒரே மனிதரின் உள்ளம் பல கூறாகப் பிரிந்து, அவர் நானாவிதச் சூழ்நிலைகளில் நானாவிதமாக முரண்பட்டு நடப்பதைப் பற்றி ஆராயும் சித்தப் பண்பு அறிஞர்கள் நம்முடைய பிரதமரின் நடவடிக்கைகளில் விசேஷ உண்மைகளைக் காண்பார்கள்.

காரண - காரிய நியதிதான் ஸயன்ஸின் மூலாதாரம். ஸயன்ஸ் மகாநாடு ஒன்றில் திட்டக்குழுவுக்குக் காரணமான பிரதமர் அதன் விளைவான காரியத்தை எதிர்த்துப் பேசி, அங்கு கூடிய விஞ்ஞானிகள் வியக்கக்கூடிய ஒரு விந்தையைப் புரிந்துவிட்டார்!

இந்த விந்தையை நாம் அடிக்கடி கண்டு வருகிறோம். திடீர் திடீரென்று பிரதமரோ இதர மந்திரிகளோ சர்க்காரின் சில குறைகளைத் தாங்களே வெளிச்சம் போட்டுக் காட்டுவதைச் சமீபகாலத்தில் கண்டு வருகிறோம். அதன்பின் மீண்டும் பழைய ஊழல்கள் பழையபடியே சொஸ்தமாக நடைபெறுகின்றன. அவற்றைக் கண்டித்த தலைவர்களும் வாய்மூடி மௌனியாகி விடுகிறார்கள். இதற்கு ஒரு காரணம்தான் கூற

முடியும். தாங்கள் சத்தியசந்தர்கள் என்பது போன்ற ஒரு பிரமையை மக்களிடம் உண்டாக்கவே காங்கிரஸ் தலைவர்கள் இப்படி ஒரு தந்திரத்தைக் கையாண்டு வருகிறார்கள். 'ஆகா, இவர்கள் தங்களுடைய குற்றத்தையே ஒளிக்காமல் ஒப்புக்கொள்ளுகிறார்களே!' என்று மக்கள் மயங்கிப் போக வேண்டுமென்றே உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றுமாகப் பேசுகிறார்கள். ஆனால் மக்கள் எத்தனை காலம்தான் ஏமாறிப் போவார்கள்? குற்றத்துக்குப் பரிகாரம் செய்யும் சக்தி படைத்தவர்கள் அவ்வாறு திருத்த நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வெறும் வாய்ப் பேச்சுடன் நின்று விடுவதை மக்கள் பார்த்து வருகிறார்கள்.

சிந்தனை ஒன்று; சொல் இன்னொன்று; செயல் வேறொன்று என்ற முறையில் பிரதமர் நடக்கிறார் என்ற அபக்கியாதியை அவர் மேன்மேலும் வளர்த்துக் கொள்வது பரிதாபத்துக்குரிய விஷயம்.

சட்ட விரோதம்

முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் ஆலோசனையின் மீது ராஜ்ய கவர்னர் அந்தந்த ராஜ்யத்து மந்திரி சபையை அங்கீகரிக்க வேண்டுமென்பது அரசியல் சாஸனத்தின் விதி. முதன் மந்திரி தமது சகபாடிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைத் தாமே பூர்ணமாகப் பெற்றிருக்கிறார் என்பதுதான் இந்த விதியின் உட்கிடக்கை. ஆனபடியால் முதன் மந்திரியின் தேர்வு செய்யும் உரிமையைக் குலைக்கும் செயலைச் சட்டவிரோதமானது என்றே கூற வேண்டும்.

இந்தச் சட்ட விரோதமான கொள்கையைக் காங்கிரஸ் பல காலமாகக் கடைப் பிடித்திருக்கிறது. எனினும் இதனை வெளிப்படுத்தாமல் முதன் மந்திரிகள் 'சாதுப் பிள்ளை'களாக நடந்து வந்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தின் முதன் மந்திரியாகியுள்ள ஸ்ரீமதி சுசேதா கிருபளானி இந்த நிர்ப்பந்தச் செயலைத் தயங்காமல் வெளியிட்டுவிட்டார்! தாம் சுதந்திரமாக மந்திரிகளைத் தேர்வு செய்ய முடியாமல், காங்கிரஸ் மேலிடத்தாரும் ராஜ்ய காங்கிரஸ் கட்சிப் பிரிவினரும் தங்கள் செல்வாக்கைப் பிரயோகிப்பதாக அவர் கூறியுள்ளார். பின்னால் தம்முடைய ஆட்சேபணையை வற்புறுத்தாமல் அவர் இணங்கிவிட்டதனால் நியதிக்கு விரோதமான இந்த நடவடிக்கை நியாயமாகிவிடாது.


காங்கிரஸ் மேலிடத்தார், தாங்கள் இயக்கி வைத்தபடி ஆட வேண்டிய யந்திரப் பாவையே ராஜ்ய முதன் மந்திரி என எண்ணியிருக்கிறார்கள். இவ்வாறு ஒரு மாநிலத்தின் அமைச்சரவைத் தலைவர் நடத்தப்பட்டால் அவருக்கு எப்படி சட்டசபைக் கட்சி அடங்கி நடக்கும்? சக்தியற்ற ஒரு முதன் மந்திரியால் கட்சியின் உட்பூசல்களையும், சச்சரவுகளையும் எப்படித் தீர்த்துவைக்க முடியும்? திரை மறைவிலிருந்து சூத்திரத்தை இழுப்பவர்களும், கோஷ்டி மனப்பான்மை பிடித்தவர்களும் ஓயாமல் டில்லிக்குச் செல்வதும் மேலிடத்தின் மூலம் முதன் மந்திரிக்குத் தாக்கீது பிறப்பிப்பதும், ஆக மொத்தத்தில் கட்சிச் சச்சரவுகள் காரணமாக ராஜ்ய சர்க்கார்களின் வேலை முறை குந்தகமாவதும் சர்வ சகஜமாகிவிட்டன.

ராஜ்ய அரசாங்கங்கள் மத்திய சர்க்காரின் அதிகாரத்துக்கு உட்பட்ட நகர சபை போலாகிவிட்டன என்று முன்பு சொல்லி வந்தோம். இப்போதோ, ராஜ்ய முதன் மந்திரிகள் காங்கிரஸ் மேலிடத்துக்கு உட்பட்ட மூன்றாந்தர சிப்பந்திகளாகிவிட்டனர். 1937ல் இருந்தது போல் ராஜ்ய சர்க்கார்கள் உரிமைகள் பெற்று, முதன் மந்திரி தமக்குச் சட்டப்படி உள்ள அதிகாரத்தைப் பெற்றாலொழிய மத்திய சர்க்கார், காங்கிரஸ் மேலிடம் இவற்றின் யதேச்சாதிகார ஆட்சியே நாட்டில் நடைபெறும்.

என்ன சேதி?

சாக்லாவின் எச்சரிக்கை!

"அரசியலைத் தொழிலாகக் கொண்டவர்களிடம் நாட்டை விட்டால், நாடும் ஜனநாயகமும் சர்வ நாசமாகப் போகும்" என்று எம். ஸி. சாக்லா எச்சரிக்கை செய்கிறார். திரு சாக்லா பம்பாய் நீதிமன்றத்தில் புகழ் வாய்ந்த பிரதம நீதிபதியாக இருந்தவர். பிரிட்டனில் இந்திய ஸ்தானிகராகப் பணியாற்றியவர். காங்கிரஸ் உயர் வட்டாரங்களில் நல்ல செல்வாக்குப் பெற்றவர். அப்படிப்பட்டவர், பல ஆண்டுகளாக ராஜாஜி கூறுவதையே வற்



புறுத்தி யிருக்கிறார். காங்கிரஸ் அரசியல் வாதிகள் இழந்து வரும் செல்வாக்கை நிலைநிறுத்த 'காமராஜ் திட்டம்' என்ற பெயரால் ஏதோ முயற்சிகள் செய்யும் போது சாக்லா அவர்கள் இப்படி உண்மையை விண்டு உரைத்ததற்கு அவரைப் பாராட்ட வேண்டும். அது மட்டுமல்ல, ''நாட்டில் லஞ்சம் பயங்கரமாக வளர்ந்து விட்டது. அதைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கை அவசியம்'' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தொழிலற்ற காங்கிரஸ் அரசியல் வாதி, லஞ்சம், பர்மிட் - லைசென்ஸ் ஆட்சி முறை ஆகிய மூன்றும் ஒன்றுக் கொன்று தொடர்புள்ளவை. தொழிலற்ற காங்கிரஸ்வாதி செல்வாக்குப் பெற்றிருக்கும்போது அதைச் சுய முன்னேற்றத்துக்குப் பயனுக்கிக் கொள்ள முயல்வது இயற்கையான உணர்ச்சி. நாட்டின் பொருளாதார வாழ்க்கை சர்க்காரின் பர்மிட் லைசென்ஸ்களில் சிக்கித் தவிக்கும்போது இந்த உணர்ச்சியை நிறைவேற்றிக் கொள்ள நல்ல வாய்ப்புக் கிடைத்து விடுகிறது. ஆகவே நாட்டில் லஞ்சப் பேய் ஒழிய வேண்டுமானால் பெர்மிட் — லைசென்ஸ் ஆட்சி ஒழிய வேண்டும்; பெர்மிட்—லைசென்ஸ் முறை நீங்க வேண்டுமானால் காங்கிரஸ் ஆட்சி அகல வேண்டும்.


அப்பாடா, விற்றது!

சர்க்கார் வியாபாரத்தில் இறங்கினால் நஷ்டம்தான் ஏற்படும் என்று பல அனுபவங்கள் மூலமாக நாம் அறிந்திருக்கிறோம். சர்க்கார் அடைந்து வந்த ஒரு பெரிய நஷ்டத்தைத் தவிர்க்க கல்கத்தா

எஃகு வியாபாரி ஒருவர் உதவி புரிந்து, நாட்டுக்கு நன்மை புரிந்திருக்கிறார்.

பிலாய் எஃகுத் தொழிற்சாலையில் உற்பத்தியான எஃகு பல ஆண்டுகளாக விசாகப்பட்டினம் துறைமுகத்திலும் கல்கத்தா துறைமுகத்திலும் கேட்பாரின்றிக் கிடந்தது. அதைப் பற்றிப் பல புகார்கள் வெளிவந்தன. அந்த எஃகைக் கல்கத்தாவில் உள்ள பிரபல இரும்பு எஃகு வியாபாரி ஸ்ரீ வி. டி. சுவாமி அவர்கள் ஆப்பிரிக்காவிலுள்ள சூடான் தேசத்து ரயில்வேக்கு விற்க ஒரு வியாபார ஒப்பந்தம் வாங்கித் தந்தார். அதன் பயனாகச் சென்ற 10-ந் தேதி விசாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து 12,500 டன் நிறையுள்ள இரும்புத் தண்டவாளம் முதலியவை கப்பலில் ஏற்றுமதியாகியுள்ளன. இந்த வியாபாரத்தை முடித்துத் தந்த ஸ்ரீ வி. டி. சுவாமி அவர்களைப் பாராட்டுகிறோம்.

இதிலிருந்தாகிலும் தனி நபர்கள் வியாபாரத்தில் சாதிக்கக் கூடியதை அரசாங்க அதிகாரிகளால் சாதிக்க முடியாது என்ற அறிவைச் சர்க்கார் பெறுமானால் தேசம் மகிழும்.



தஞ்சை மாவட்ட கலெக்டராகவும் மற்றும் பல உயர் பதவிகளும்வகித்துமக்களின் பேரன்பையும் பாராட்டுதலையும் பெற்ற ஸ்ரீ டி. கே. பழனியப்பன் அவர்கள் சென்னை துறைமுக அதிகாரியாக (Chairman, Port Trust) பதவி ஏற்றிருக்கிறார்.

கண்கூடான உண்மை

நமது நாட்டு விவசாயக் கொள்கைகள், நிலச் சீர்திருத்தக் கொள்கைகள் யாவும் ருஷ்யாவைப் பார்த்துக் 'காப்பி' அடித்தவையே. கூட்டுப் பண்ணை, நில உச்சவரம்புச் சட்டங்கள் ஆகியவையெல்லாம் ருஷ்யாவின் அடிச்சுவட்டில் உதித்தவையே. நமது நாட்டில் மேற்கண்ட முறைகளுக்கு ஆதரவு இல்லை என்று தெரிந்தவுடன், எந்தச் சிறு பட்டாதாரனையும் ஒரு 'ஜமீன்தார'னாக்கி அவனுடைய நிலத்தையும் சர்க்கார் ஆர்ஜிதம் செய்து கூட்டுப் பண்ணைக்குள் அடைத்துச் சுதந்திர விவசாயியை அடிமையாக்கி விடும் 17வது மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது பாரத சர்க்கார்.

இதனுடைய விளைவு எப்படி இருக்கும் என்பதை இன்றைய ருஷ்யா நன்கு எடுத்துக் காட்டுகிறது. ருஷ்யப் பிரதமர் குருஷேவ் கூட்டுப் பண்ணை முறை தோற்று விட்டது என்று பல முறை ஒப்புக்கொண்டிருக்கிறார். அத்துடன் இந்த ஆண்டு அங்கு உற்பத்தி பெரிதும் குறைந்து பஞ்சநிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் கனடா, அமெரிக்கா இவற்றிடமிருந்து ருஷ்யா கோதுமை வாங்குகிறது. நாற்பதாண்டுகளாகக் கூட்டுப் பண்ணை நடத்திய ருஷ்யாவின் நிலை இப்படியென்றால் நம் நாட்டில் அதனைப் பொருத்த முயல்வது போன்ற பேதைமை வேறு உண்டா?

தனி நபர் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் எல்லாம் உணவு உற்பத்தி அபரிமிதமாகப் பெருகி வருகிறது; ஆனால் கம்யூனிஸ நாடுகளான ருஷ்யாவிலும், சீனாவிலும் உணவுப் பஞ்சம் தலை விரித்தாடுகிறது என்பதைக் கண்கூடாகக் கண்ட பிறகாவது இந்தியா படிப்பினை பெற வேண்டாமா?


பார்க்கும் இடமெல்லாம்......

"நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?"
"நீல விசும்பினிடை நின் முகம் கண்டேன்!"

—பாரதியார்

காதல் இல்லையேல் சிருஷ்டி இல்லை. பார்க்கப் போனால் மனிதன், மிருகம், பறவை, தாவர இனம் யாவற்றுக்குமே காதல் பொது! இப்படி அனாதி காலம் தொட்டு வரும் காதலை வைத்துக் கலைஞர்கள் அற்புதமான கலைப் பொக்கிஷங்களைப் படைத்திருக்கிறார்கள். எத்தனையோ படைத்து விட்டார்கள். எத்தனையோ படைத்து வருகிறார்கள். இன்னும் எத்தனையோ படைக்கப் போகிறார்கள். அவ்வகையில் தமிழ் மரபையொட்டி, கலைஞர் ஸுபா படைத்த ஒரு காதல் ஓவியத்தை இவ்வார அட்டைச்சித்திரமாக வழங்கியிருக்கிறோம்.

காதல் வயப்பட்ட ஓர் அணங்கு தன் காதலனிடமிருந்து வந்த காதல் ஓலையை நீர்க் கரையை அணுகித் தனியிடத்தே வாசித்து மகிழ்கிறாள். காதலனின் காதல் கொப்புளிக்கும் சொற்களைப் படிக்க அவனே நேரில் வந்து சல்லாபம் புரிவது போன்ற பிரமை உண்டாகிறது. பார்க்கும் இடமெல்லாம் அவனையே காண்கிறாள். நீல வானத்திடை எழும் நிலா வட்டத்திலே தன் காதலனின் அழகு கொழிக்கும் முகத்தையே காண்கிறாள். உல்லாச பாவம் தோன்றத் தலைவி அமர்ந்திருக்கும் காட்சியை ஓவியர் அற்புதமாகத் தந்திருக்கிறார்.

போகிற  போக்கில்..!

காமராஜ் திட்டம் காங்கிரசுக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில் அது காங்கிரஸ் தலைவர்களுக்குத்தான் அதிர்ச்சி வைத்தியமாக முடிந்திருக்கிறது! அதன் விளைவுகளில் சில "அவ்வளவு நன்றாக இல்லை" எனத் திரு நேரு அவர்களே கூறுகிறார். மந்திரிகளை வீட்டுக்கு அனுப்பும் ஜாபிதா இனிமேல் வராது எனவும் அவர் திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறார். நேருவின் இந்த அறிக்கை மேலிடம் பெற்றிருக்கும் அதிர்ச்சிக்கு ஓர் அத்தாட்சியாகும். காமராஜ் திட்ட வேலைகள் தொடங்கியதும் எதிர்ப்புக்கள் தலைதூக்கிப் போட்டா போட்டியில் போய் நின்றது ஊரறிந்த விவகாரம். ஒரு மாகாணத்தில் கூடப் போட்டியில்லாத தேர்தல் நடைபெறவில்லை. எனவே, இந்தப் போட்டியைக் கண்டு மேலிடம் அதிர்ச்சி அடைந்தது. அதன் விளைவாகத்தான் இப்போது மந்திரிகள் ராஜிநாமா இரண்டாவது பட்டியல் வெளிவராது என நேரு பேசியிருக்கிறார். இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால், நேரு அவர்கள் இந்தத் திட்டம் மக்களிடையே விழிப்பு ஏற்படுத்தியிருப்பதாகக் குழப்புகிறார். மக்களைப் பொறுத்தவரையில் எப்போதும் போலவே தான் இருக்கிறார்கள். விழிப்பு ஏற்பட்டிருப்பதெல்லாம் மேலிடத்தாருக்குத்தான். எப்படி ஏற்பட்டதென்றால் ஒரு மாகாணம் கூடச் சரியில்லை என ஏற்பட்டிருக்கிறது.


ஃ ஃ ஃ

குளித்தலை சுதந்திரக்கட்சி மகாநாடு 17வது திருத்தத்தைக் கண்டித்து நடைபெற்றது. இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவது காங்கிரஸ் அரசாங்கம். ஆனால் மகாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததும், தங்கள் கொடிகளுடன் வந்து கோஷம் போட்டதும் கம்யூனிஸ்ட் தோழர்கள். காங்கிரஸார் அங்கு வந்திருக்க வேண்டியதல்லவா பொருத்தமான காரியம்? அப்படியல்லாது கம்யூனிஸ்டுகள் வந்திருந்தது எதைக் காட்டுகிறது? 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பார்கள். அதே போல் நாளை கம்யூனிஸ்டும் காங்கிரஸும் ஒன்றாகப் போவதை இந்த ஆர்ப்பாட்டம் எடுத்துக் காட்டியது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுகள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதில் பாதிப் பேர் வெவ்வேறு ஜில்லாக்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் என்கிறார்கள்.

ஃ ஃ ஃ

மகாராஷ்டிர சர்க்கார் தங்களுடைய மந்திரி சபையைத் தாங்கள் குறைக்கப்போவதில்லையெனத் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது அங்கு 31 பேர் மந்திரிகளாக இருக்கிறார்கள். அங்கு ஏதாவது காமராஜ் திட்டம் என்று பேசினால் தகராறு தானாகவே ஆரம்பமாகிவிடும். அதனால்தான் மகாராஷ்டிர அரசாங்கம் முந்திக்கொண்டு "எங்கள் மந்திரி சபை குறையாது" எனக் கூறியிருக்கிறது. மந்திரி சபை பெரியதாக இருப்பதா, சிறியதாக இருப்பதா என்பதல்ல விவகாரம். காங்கிரஸில் 'பதவி வெறி எவ்வளவு தூரம் தலைவிரித்தாடுகிறது' என்பது தெளிவாக இப்போது தெரிந்து விட்டது.

— சிட்டுக்குருவி






THY.53 TAM
ஹமாம்—என் மனதுக்கிசைந்த ஒரே சோப்.
HAMAM
the family soap
இன்ப நறுமணமுள்ள சோப்—ஹமாம்—குடும்பத்திற்கான சோப். டாடா தயாரிப்பு.



28

திருவேங்கட மலையைக் கவிப் பண்போடு வர்ணித்து வேங்கட நாதனை ஏத்துகிருர் பேயாழ்வார்.

முதலில் மலையிலுள்ள ஒரு காட்சியைச் சொல்லுகிருர்:

தெளிந்த சிலாதலத்தின்
மேல்இருந்த மந்தி

[தெளிந்த சிலாதலத்தின்மேல் - பரிசுத்தமான ஒரு பாறையின்மேல். இருந்த மந்தி - உட்கார்ந்திருந்த பெண் குரங்கு.]

அளிந்த கடுவனையே
நோக்கி —

[அளிந்த - தன்னிடம் பிரியம் நிறைந்த. கடுவனையே நோக்கி - ஆண் குரங்கைப் பார்த்து.]

— விளங்கிய
வெண்மதியம் தாஎன்னும்
வேங்கடமே

[விளங்கிய - ஆகாயத்தில் ஒளி வீசுகிற. வெண்மதியம் - வெண்ணிலவு பொழியும் சந்திரனை. தா - பிடித்துக் கொண்டு வந்து கொடு. என்னும் - என்று சொல்லுகிற.]

இத்தகைய காட்சியைக் காணும் படியான அழகிய திருவேங்கடமலையில், வர்மனுகைவும் திருவிக்கிரமனுகைவும் அவதரித்த பெருமான வாழ்கிருன் என்கிருர்.

வேங்கடமே மேலொருநாள்
மண்மதியில் கொண்டு
உகந்தான்
வாழ்வு

[மேலொருநாள்-முன்பொருநாள். மதியில்-கர்வம் கொண்ட மாவலியைத் தன் சாமர்த்தியத்தினுல் வென்று, மண் கொண்டு உகந்தான் - பூமியைத் தானமாக ஏற்று மகிழ்ந்தவனுகிய திருமாலின். வாழ்வு-வாசஸ்தலம்.]

மூன்பு யுக்தியாகத்தானே மூவடி மண் வேண்டும் என்று யாசித்து, இந்த உலகையெல்லாம் அளந்து பெற்று மகிழ்ந்த அந்தத் திருமாலின் வாழ்வுத் தலம் திருவேங்கடமலை!

தெளிந்த சிலாதலத்தின்
மேலிருந்த மந்தி
அளிந்த கடுவனையே
நோக்கி — விளங்கிய
வெண்மதியம் தாஎன்னும்
வேங்கடமே மேலொருநாள்
மண்மதியில் கொண்டுகந்தான்
வாழ்வு!

உலகத்தை யெல்லாம், கர்வம் கொண்ட அசுர ராஜனிடமிருந்து மறுபடி தன் வசத்தில் அடக்கிக் கொண்டு, மக்களை உய்வித்த திருமால், இந்த யுகத்தில் மக்களின் வழிபாட்டைப் பெற்றுக் கொள்ள அர்ச்சாவதாரம் கொண்டு வேங்கட மலையில் நிற்கிருன், சென்று தொழுது உஜ்ஜீவியுங்கள் என்கிருர் ஆழ்வார்.



கண்ணுக்கினியன கண்டோம்!

க்ஷேத்திரம் என்பதன் நேர் பொருள் வயல் என்பதே. பண்படுத்திய வயலில் பயிர் விளைவதைப் போல் பண்படுத்திய உள்ளத்தில் கலை விளைகிறது. இப்படிக் கலையின் விளை நிலமாயிருப்பதால் கலாக்ஷேத்திரம் தனது பெயரை நிலைநாட்டிக் கொள்கிறது. உள்ளத்தைப் பண்படுத்துவதால்தான் இசைக்கே பண் என்று பெயர் வந்தது போலும்! கலாக்ஷேத்திரத்தின் ஜீவநாடியான ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்களின் ஸ்பரிசம் பெற்ற இசை, நடனம், சித்திரம், நெசவு, தோட்டக் கலை எல்லாமே உள்ளத்தை உயர்த்தும் பண்ணாகத்தான் விளங்கும். பண்ணுக்கு ஒரு பண்ணை என்றே கலாக்ஷேத்திரத்தைக் கூறலாம்.

செப்டம்பர் மாதம் 26-ந் தேதியன்று கலாக்ஷேத்திரம் அடையாற்றிலிருந்து திருவான்மியூருக்குச் சம்பிரதாய பூர்வமாக இடம் பெயர்ந்தது. ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் கலா க்ஷேத்திரத்தின் புதிய கேந்திரத்தைத் திறந்து வைத்த போது, 'ஆஹா, இந்த ருக்மிணி தேவியின் நிருகலை உணர்வைத்தான் என்னென்பது!' என்று வியக்காமல் இருக்க முடியவில்லை. பார்த்துப் பார்த்து ஒவ்வோர் இண்டு இடுக்கிலும் கலைச் சுவையை நிரப்புவதில் ருக்மிணி தேவிக்கு நிகர் வேறு யாராவது இருக்க முடியுமா என்பது சந்தேகமே. ஆனால் இந்தக் கலைத் திறன் கண்ணை உறுத்திக் கொண்டு நமக்குத் தெரிவதில்லை. கலையை ஒளிப்பதில்தான் கலை இருக்கிறது என்ற ரசிகவாக்குக்கு ஆதரிசம் ருக்மிணி தேவியின் கலைத் திறன். அன்று ராஷ்டிரபதி திறந்து வைத்த 'பரதாலயா' என்ற மண்டபத்தில் கலையை ஒளிக்கும் இந்தக் கலைத் திறனை விசேஷமாகக் காண முடிந்தது. மரத்தினால் ஆன அந்த அற்புத மண்டபத்தில் நுணுக்கமான வேலைப்பாடு எதுவும் இல்லாதது போலவே முதல் பார்வைக்குத் தோன்றும்; என்றாலும் அதனைக் கூர்ந்து பார்வையிட்டால் ஒவ்வோர் அங்குலமும் எவ்வளவு சிரத்தையுடன் ஆக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும். 'பசுமையான நிழலில் பசுமையாக எண்ணுவோம்' என்று பாடினார் ஆங்கிலக் கவி. 'பரதாலயா'விலோ பச்சை நிறத்தையே காணோம். சந்தனத்தால் ஆக்கியது போன்ற இளம் சிவப்பில் உருவாகியுள்ளது அது. இது முதலில் விநோதமாகப் பட்டது. பிறகுதான் இதிலும் ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் ரஸனை புரிந்தது. நீல வானும், நீலக்கடலும், பசுமை மிக்க மரம் செடிகளும் கலாக்ஷேத்திரத்தைச் சூழ்ந்திருப்பதாலேயே சிறிதும் பச்சை நிறம் வராமல்—ஆனால் பசுமை மாத்திரம் வருமாறு—இந்த மண்டபத்தை நிர்மாணித்திருக்கிறார்! அதுவுமின்றி, கவித்துவத்தைச் சிவப்பாக வர்ணிப்பதே இந்திய மரபல்லவா? இந்தச் சிவப்பு மண்டபத்தில் கலை நாள்தோறும்





செம்மையாக்கப் பெறும் என்பது என்னவோ நிச்சயம்.

★

'நிவேதன விழா' என்று ஆத்மிக எழிலுடன் குறிப்பிடப்பட்ட திறப்புவிழா முடிந்த பின் கண்ணப்பர் குறவஞ்சி என்ற நாட்டிய நாடகத்திலிருந்து சில காட்சிகள் நடைபெற்றன.

கண்ணப்பர் குறவஞ்சியில் ஒரு புதுமை உண்டு. சாதாரணமாகக் குறவஞ்சி நாடகங்கள் சிருங்கார ரஸத்தையே மையமாகக் கொண்டிருக்கும். கண்ணப்பர் கதையில் சிருங்





காரத்துக்கு இடம் கிடையாது. பொருளின் திட்பத்திற்கு ஏற்ப, இதில் வரும் குறமகள் வேடிக்கை விநோதம் நிறைந்த இளமங்கையாக இராமல், அறிவும், அநுபவமும் மிகுந்த தேவராட்டியா யிருக்கிறாள். நாயகனும் நாயகியும் இணையப் போவதை ஆருடம் கூறாமல் உலக நாயகனும், அவனுக்கு நாயகியான ஜீவனும் இணையப் போவதை வெகு நாசூக்காக ஆருடம் பார்த்துச் சொல்கிறாள்.

கண்ணப்பர் குறவஞ்சியில் இப்படி ஒரு புதுமை உண்டெனில் அதை கலாக்ஷேத்திரத்தினர் நடித்துக் காட்டியதில் இன்னுமொரு புதுமை உண்டு.

கலைக்கு இரண்டு உருவங்கள் உண்டு. அடர்ந்த கானகங்களைப் போலக் கம்பீரம் தலைதூக்கி நிற்கிற உருவம் ஒன்று. உத்தியான வனம் போல இனிமை தலைதூக்கி நிற்கிற உருவம் இன்னொன்று. ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்களின் கலையில் பின்னதன் உருவமே அழுத்தமாகப் பதிந்திருக்கிறது எனலாம். கலையின் மிருதுவான உருவுக்கும் கண்ணப்பர் கதைக்கும் வெகு தூரம் அல்லவா? திண்ணப்பர் தமது கண்களை ஆண்டவனுக்கு அப்பிக் கண்ணப்பராக ஆகும் வரையில் அந்தக் கதையில் மென்மையைவிடத் திண்மையே அதிகம். வேட்டுவர்களின் ஆட்டபாட்டத்தில் மட்டுமின்றி, திண்ணப்பர் ஈசனைப் பக்தி புரிந்ததிலும்கூடப் பாறையின் பொர பொரப்புத்தான் அதிகம். ஏன், ஆண்டவன் அவரைச் சோதித்த விதத்திலும் கூட — தனது கண்களில் குருதியைப் பெருக்கி, திண்ணப்பர் தமது கண்களைப் பறித்துச் சாற்றுமாறு செய்ததில்கூட - ஒரு 'முரட்டுத்தனத்'தையே காண்கிறோம். இப்படிப்பட்ட கதையைச் சொருகக்குப் பேர் எடுத்த கலாக்ஷேத்திரத்தினர் எப்படிக் கையாளப் போகிறார்கள் என்பதில் சிறிது ஐயம் எழுந்தது.

ஆனால் ஸ்ரீமதி ருக்மிணி தேவியோ கண்ணப்பர் குறவஞ்சியின் புதுமைக்காகவேதான் அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். பல்லாண்டுகளுக்கு முன் ரஸிகமணி டி. கே. சி. அவர்களுடைய சீரிய யோசனைப்படி 'குற்றாலக் குறவஞ்சி'யை அரங்கேற்றிய ருக்மிணிதேவி, அதினின்று முற்றிலும் மாறுபட்ட இன்னொரு குறவஞ்சியைத் தேடிக்கொண்டிருந்தாராம். சென்ற நூற்றாண்டுக் கடைசியில் வெளியான தொழுவூர் மார்க்கண்ட நாவலரின் கண்ணப்பர் குறவஞ்சியே அவருக்குத் திருப்தி அளித்தது. புதுமைகளைச் செய்யும் ஆர்வமே உண்மைக் கலைஞரின் லட்சணம் அல்லவா?

குறவஞ்சி நாட்டிய நாடகத்தைக் கண்ட பின் அவருடைய தேர்வு எவ்வளவு சரி என்று தெரிந்தது. கண்ணப்பர் சரித்திரத்தில்காணும் 'முரட்டுத்தனம்' அதன் புறத்தோற்றம்தான்; அகத்தே நயமும் நளினமும் மிகுந்த ஒரு சரிதம்தான் அது என்பதை நாடகம் சொல்லாமல் சொல்லி விளக்கி விட்டது. வேடர்களின்

வெளி ஆர்ப்பாட்டம் எப்படியாயினும் அவர்களின் மனோபாவம் எளிமையிலும் எளிமையானது. இதேபோல் கண்ணப்பர் **புரிந்த** பக்தியில் முரட்டுத்தனம் இருந்தாலும் அவர் **உணர்ந்த** பக்தி தென்றலினும் மதுரமானது என்பதையெல்லாம் நடிகர்கள் புலப்படுத்திவிட்டனர். ஆராய்ச்சி ரீதியில் அக்கு வேறு ஆணி வேராக இந்த உண்மையைப் பிய்த்துக் காட்டாமல், அநுபவத்துக்குப் புரியும் முறையில் கலையை ஒளிக்கிற கலையாகச் சித்திரித்து விட்டார்கள்.

கண்ணுக்குக் குளிர்ச்சியும், கருத்துக்கு அமைதியுமான கைத்தறி ஆடைகளை அணிந்து, வேடர்களாக வேடமிட்ட நடிகர்கள் அரங்கில் தோன்றியவுடனேயே கதையின் திண்மையை வெல்லும் மென்மை வெளிப்படலாயிற்று. தெரிந்த கதையைத் தெளிந்த முறையில் சித்திரிக்கிறது நாடகம். நாகராஜன் தன் மகன் திண்ணப்பருக்கு முடிசூட்டி, வேட்டையாட வனம் அனுப்பும்போது தான் குறவஞ்சி வருகிறாள். திண்ணப்பரின் நலனுக்காகப் பூசை போடும் அவள், திண்ணப்பர் தமது இனத்துக்குக் கிட்டாத முறையில் கீர்த்தி பெறுவார் என்று 'கூட'மாகக் கூறுகிறாள். அதன்பின் திண்ணப்பர் கானகம் செல்வது, காளஹஸ்தியில் ஐயனின் அருளில் மையல்படுவது, கொடும் சோதனைக்காளாவது, அதில் தேறிக் கண்ணப்பராவது எல்லாம் சித்திரிக்கப்படுகின்றன.

நாடகத்தின் முதல் சிறப்பு 'மெலோட்ராமா (melodrama)வுக்கு இடம்அளிக்கக்கூடிய பகுதிகளிலெல்லாம் சொகுசும் சேர்ந்து, 'மெல்லோ ட்ராமா' (mellow drama) வாகியிருப்பது. உதாரணத்துக்கு ஒன்றிரண்டு சொன்னாலும் போதும். திண்ணப்பர் கானகத்தில் எம்பிரானின் லிங்கத் திருவுருவைக் கண்டவுடன் ஆவேச பக்தி கொண்டு பாடி ஆடுகிறார். வன ராஜகுமாரனின் அந்தப் பரபரப்பு மெலோட்ராமாவாகி விடாமல், அப்போது மிகவும் கோமளமான பண்ணில் பாட்டு அமைந்திருக்கிறது. இந்த நாட்டிய நாடகத்தின் இசையமைப்பாளர் ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் என்பதற்கு இந்த ஒரு முத்திரை போதாதா, என்ன? கடைசியில் லிங்கத்திலிருந்து ஈசுவரன் ஆவிர்ப்பவிக்கும்போதும் 'மெலோட்ராமா' நிகழ்ந்துவிடாமல் கவிதை நயம் காப்பாற்றுகிறது. ''பொறுத்திரு. நான் இதோ வந்திருக்கிறேன். கண்ணைப் பதித்துக்கொண்டுவிட்டால் நீ எப்படி என்னைக் காண முடியும்?'' என்று இறைவன் கண்ணப்பனை அழகாகக் கேட்கும் காவிய ரஸத்தை என்னென்பது?


இந்த நாட்டிய நாடகத்தில் பாராட்ட வேண்டிய அம்சங்கள் அனந்தம். உலகம் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுவது போல் புலிந்த குல மகளிர் ஆரத்தி சுற்றும்போது தாலத்தை மட்டும் சுழற்றாமல் தங்கள் உடலையும் சுழற்றித் தாங்களே ஆரத்தியாகி முன்னேறுகிற காட்சி ஒரு சித்திரமாகவே உள்ளத்தில் தங்கி விட்டது. உண்மையில் அங்கு ஆரத்தித் தாலமே கிடையாது. எல்லாம் பாவனைதான். இதே போல் தேவராட்டி திரவியமே இல்லாமல் பாவனையினால் பூஜை செய்கிற அழகும், சிவகோசரியர் திண்ணப்பர் பூஜை பண்ணிய இடத்தை மனம் நொந்து காலால் வழித்துச் சுத்தம் செய்வதும், திண்ணனும் வேடவேந்தனும் பணியாட்களைப் பணிக்கும் செய்கைகளும் ஜீவன் ததும்ப விளங்குகின்றன. யாருக்குச் சிறப்புப் பட்டம் கொடுப்பது என்று சொல்ல முடியாமல் அனைவருமே உணர்ச்சிகளை அற்புதமாகப் பிரதிபலித்தார்கள். பரதாலயத்தை லய வெள்ளத்தில் மூழ்கடித்தார்கள். எனினும் கண்ணப்பராகத் தோன்றி வீரம், மிடுக்கு, கருணை, பக்தி, துயரம், மகிழ்ச்சி எல்லாவற்றையும் அநாயாசமாகச் சித்திரித்த ஸ்ரீ பாலகோபால் என்ற இளைஞருக்கு முதல் பாராட்டைத் தெரிவிக்க வேண்டியதுதான்.

கண்ணப்பர் குறவஞ்சியில் ஓரிரு குறைகளும் தென்பட்டன. கண்ணப்பர் காட்டுப் பன்றியைத் துரத்தியடிக்கும்போது பாலன் ஒருவன் பன்றி போல் முகமூடி அணிந்து செல்வது குழந்தைப் பிள்ளைத்தனமாக இல்லையோ? அல்ப ஜந்து ஒன்றை வேஷமிட்டுக் காட்டுவது போலவே ஆண்டவனை வேஷத்தில் கொண்டு வரும்போதும் ஏதோ ஒன்று நெஞ்சில் உறுத்துகிறது. ஆண்டவனையே கதாநாயகனாகவோ, முக்கிய பாத்திரமாகவோ வைத்து நடித்தால் அதில் குறை தெரிவதில்லை. ஆனால் ஆண்டவன் மானுடனாகாமல் ஆண்டவனாகவே வருகிறபோது அதனை ஸ்தூலமாகக் காட்டுவதில் ஏதோ குறைபாடு தோன்றுகிறது. கலாக்ஷேத்திர அரங்கில் தந்திர ஜால உத்திகளுக்கு இடம் கிடையாது. நல்ல மரபுதான். எனினும் இந்த நல்ல மரபுக்கு ஒரே ஒரு விலக்காக, லிங்கத்திலிருந்து வெளிப்படும் ஈசனை மட்டும் ஸ்தூலமாகக் காண்பிக்காமல் நிழல் வடிவமாகக் காட்டலாகாதோ?

எப்போதுமே குறையைச் சொல்லி ஒரு விமரிசனத்தை முடித்தால் அது மட்டுமே மனதில் தங்கும். இதனால் விமரிசிக்கப்பட்ட கலைஞர் மனஸ்தாபம் கொள்வதும் உண்டு. ஆனால் ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் விஷயத்தில் நாம் இப்படி அஞ்சவேண்டியதில்லை. நமக்குத் தென்படுவதை விட அதிகக் குறைகளை அவரே தமது படைப்புக்களில் காண்பவர். ஆண்டவன் எப்படித் தனது சிருஷ்டியிலிருந்து விலகி யிருந்து சாட்சிமாத்திரமாகப் பார்வையிடுகிறானோ அப்படியே உண்மைக் கவி உலகிலிருந்து பிரிந்து நின்று அதைப் பார்வையிடுகிறான் என்பார்கள். ஸ்ரீமதி ருக்மிணி தேவி தாமே மேடையில் தோன்றாமல், தமது சிருஷ்டியிலிருந்து விலகி நின்று அதைப் பார்க்கும் பாக்கியம் பெற்றிருக்கிறார். எப்படித் தமது படைப்பை ஒவ்வோர் அணுவிலும் மெருகேற்றலாம் என்று சதா சிந்திப்பவர் அவர். கலையின் பூரணத்துவத்தை எய்துவது தொடு வானத்தைப் பிடிக்க முயலுவது போன்ற செயலே என்று உணர்ந்து அனவரதமும் அதற்கு மேன்மேலும் எழிலை ஊட்டிவருபவர் அவர். அவரின் அந்த அழகுணர்ச்சி காரணமாகக் 'கண்ணப்பர் குறவஞ்சி' நாம் எதிர்பார்க்க முடியாத விதங்களிலெல்லாம் நகாசு பெற்று நம் கண்ணையும் கருத்தையும் மேலும் இனிக்கச் செய்யும் என்று நம்பலாம்.

கன்யா

குண்டு மல்லிகை



அரு. ராமநாதன்

மழைக்காக மரத்தடியில் ஒதுங்கி நின்ற வசந்தி சங்கரைப் பார்த்ததும் அதாவது சங்கரின் கையிலுள்ள குடையைப் பார்த்ததும் அளவிலாத உற்சாகமடைந்தாள்.

'ஆணும் சங்கர் குனிந்த தலை நிமிராமல் பெண்ணைப் போல் நடந்து போகிறானே?' கால் செருப்பினால் தன் சலவை வேஷ்டியில் ஒரு துளி சகதிகூடப் பட்டுவிடக் கூடாதே என்று அவனுக்குக் கவலை!

அவனுடைய கவனம் தன் மீது திரும்ப வேண்டும் என்பதற்காக வசந்தி பெரிதாகக் கனைத்தாள்.

சங்கர் திரும்பிப் பார்த்தான்!

வசந்தியின் விழிகளைக் கண்டதும் தயங்கித் தயங்கி நின்றான்.

பிறகு அவன் மெல்ல, ''குடை இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாம்!'' என்றாள் வசந்தி, தன் அழகான முகத்தில் அபூர்வமான ஒரு பரிதாபத்தை வரவழைத்துக் கொண்டு.

''இன்று பூராவும்தான் மழைமூக மாக இருந்ததே, நீ குடை எடுத்துக் கொண்டு போயிருக்கக் கூடாதோ?''

''பாடப் புத்தகங்களையும், நோட்டு களையும் தூக்குவதற்கே இரண்டு கைகள் போதாது. குடையை வேறே தூக்கிக் கொண்டு எப்படிக் காலே ஜுக்குப் போவது? அதுவும் சைக் கிளில்...!''

''ஓ....!''

''இந்த நியூசென்ஸ் மழை இப் போதைக்கு விடாது போலிருக்கிறதே!'' என்று வசந்தி முணகினாள். ஆனால் உண்மையில் வானம் தெளிந்து கொண்டு தான் இருந்தது அப்போது.

வசந்தியைச் சங்கர் குறுகுறுவென்று உற்றுப் பார்த்தான்.

ரோஸ் நிறப் பட்டுப் பாவாடையும் அதே நிறத்தில் நைலக்ஸ் ரவிக்கைத் தாவணியும் அணிந்திருந்த வசந்தி மழைக் காற்றில் ரோஜா மொட்டுப் போலவே குலுங்கினாள்.

அவள் மீது வைத்த விழிகளைச் சங்கரால் ஒரு கணம் எடுக்கவே முடிய வில்லை.

அதை வசந்தி தன் ஓரக் கண் களால் கவனித்துவிட்டு மெல்லச் சிரித்தாள்.

''நீ வீட்டுக்குத்தானே போக வேண்டும்?'' என்று சங்கர் யோசனை யோடு கேட்டான்.

''ஆமாம்!''

''குடை வேண்டுமா?''

''ம்!''

''இதோ, என் குடை இருக்கு!''

''ஆனால் சங்கர், உனக்கு?''

''பரவாயில்லை! நான் கொஞ்சம் மழையில் நனைந்தால் எனக்கு ஜல தோஷம் பிடித்துக் கொண்டு விடாது!'' என்று ஒரு புது உற்சாகத்தோடு சிரித் துக்கொண்டே சொன்ன சங்கர், ''என் குடையைப் பிடித்துக் கொண்டு முன்னால் நடந்து போ!'' என்றான்.

''என் சைக்கிள்....?''

''அதை நான் தள்ளிக்கொண்டு வருகிறேன்!''

மழை மிக இலேசாகத் தூறிக் கொண் டிருந்தது. வசந்தி குடையைப் பிடித்துக் கொண்டு 'ஜம்'மென்று முன்னால் நடந்து செல்ல, சங்கர் நனைந்த உடை யுடனும், கலைந்த தலையுடனும் வசந்தி யின் சைக்கிளை மூச்சு வாங்கத் தள்ளிக் கொண்டு வந்தான்.

குளிரினால் சங்கரின் உடம்பு வெட வெடவென ஆடியது. ஆனாலும் உள்ளூற ஓர் இன்ப ஜ்வாலை பரவிப் படர்ந்தது.

வசந்தியோ வெற்றிப் பெருமிதத் தினால் உள்ளூறச் சிரித்துக் கொண்டாள்.

வழி நெடுக இருவரும் என்னென் னவோ பேசிக்கொண்டே நடந்தனர்.

வசந்தி தன் வீட்டை அடைந்த தும் சங்கரிடம் குடையைத் திருப்பிக் கொடுத்து ''தாங்க்ஸ்'' என்று ஒரு புன்முறுவலுடன் சொல்லிவிட்டு உள்ளே வேகமாகச் சென்றாள்.

அதன் பிறகு பக்கத்து வீட்டில் வசந்தி யின் மோகன உருவம் எப்போதெல்லாம் தென்படும் என்று சங்கர் நாள் முழு வதும் ஏங்கிக் கிடக்க ஆரம்பித்தான்.

வசந்தியோடு பழகப் பழக அவளது கரு விழிகளின் பார்வையும், கன்னக் கதுப்புக்களில் குதித்தோடும் புன் சிரிப்பும், சுவாரஸ்யமான பேச்சுகளும் சகஜமாகப் பழகும் சுபாவமும் சங் கருக்குக் காதல் பித்து ஊட்டி அவ னைச் சரியான பைத்தியமாக்கி வந்தன.

அதன் விளைவாக ஒரு நாள் அந்தி நேரத்தில் வசந்தி மாடியறையில் உள்ள படுக்கையறையில் சாய்ந்தபடி ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது, சங்கர் ரோமி யோவாக மாறித் தைரியமாகச் சுவ ரேறிக் குதித்து அவள் முன்னால் வந்து நின்றான்.

வசந்தி திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

கலவரத்தால் அவள் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

அத்தியாயம் பதினைந்து

வேடிக்கையின் வினை

''சங்கர்! நீயா?'' என்று வசந்தி பதறியபடி தன் கட்டிலிலிருந்து துள்ளி யெழுந்தாள். அவள் கையிலிருந்த புத் தகம் கீழே நழுவி விழுந்தது. அதோடு நழுவ முயன்ற தாவணியை அவள் இழுத் துப் பிடித்து அதன் முனையை இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

இளமையின் பூரிப்போடு குலுங்கி நிற் கும் அவளையே சங்கர் குறுகுறு வெனப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அந்தி மாலை முழுதும் மயங்கி, பொழுது நன்றாக இருட்டி விட்டது மாடிச் சுவர் அருகில், பூத்தொட்டி களில் உள்ள மலர்களெல்லாம் அந்த

இருளில் தங்கள் உருவப் பொலிவையும், வர்ண ஜாலங்களையும் இழந்து விட்டதால், அவற்றின் கதம்ப மணம் ஒன்றுதான் அவை அங்கிருப்பதை உணர்த்தின. கீழ்த் திசை வானத்தில் அழகான வட்ட நிலா எழும்பிக் கொண்டிருந்தது. வசந்தியின் தனி அறையில் எரியும் மின்சார விளக்குக்குப் போட்டியாகத் தெரு விளக்குகளின் வெளிச்சங்களும் மேலே எழும்பி, வானப் படுதாவில் நட்சத்திரங்களுக்குக் கீழே பொன்னொளிக் கீற்றுக்களைத் தீட்ட முயன்றன.

வசந்தி குழம்பினாள். வீட்டில் அவள் தன்னந் தனியாக இருக்கும் அந்தி இருட்டிலே பக்கத்து வீட்டு வாலிபன் அவளுடைய தனியறைக்குத் தாவிக் குதித்து வருவான் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. இந்தக் காட்சியைத் தன் அப்பாவோ அம்மாவோ பார்த்தால் என்ன ஆகும்? கோவிலுக்குப் போயிருக்கும் அவளுடைய அம்மா சிறிது நேரம் கழித்துத்தான் வருவாள். ஆனால் வெளியே உலாவப் போயிருக்கும் அப்பாவோ எந்த நிமிஷமும் எதையாவது நினைத்துக் கொண்டு திடீரெனத் திரும்பி வந்து விடுவார். அவர் இதைப் பார்த்தால் பெரிய ரகளை உண்டாகும். அவருடைய கைத் தடிக்குச் சங்கரின் முதுகு விளம்பரப் பலகையாகிவிடும். பக்கத்து வீட்டுக்காரரும், தெரு ஜனங்களுமோ வசந்தியின் முகத்தில்தான் கரி பூச முஷ்டி பிடிப்பார்கள்.

வசந்திக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றே புரிய வில்லை. வீட்டில் அவள் தனியாக இருக்கும் நேரம் பார்த்துச் சங்கர் சுவரேறிக் குதித்து வந்திருக்கிறானே என்பதால், அவளுக்குக் கோபம் பற்றிக் கொண்டு எரிந்தது.

''சங்கர்! நீ ஏன் இங்கே வந்தாய்?'' என்று வசந்தி கத்த முயன்று, பிறகு அடிக் குரலில் அதைச் சீறலாக வெளியிட்டாள்.

சங்கர் தயங்கினான்.

''உன்னை யார் இங்கு வரச் சொன்னது?'' என்று வசந்தி மீண்டும் சீறினாள்.

''நீதான்!'' என்றான் சங்கர் மெல்ல.

''என்ன! நானா? நானா?.... என்ன துணிச்சல்?''

''எங்கள் வீட்டுத் தோட்டத்திலிருந்து ஒரு கொய்யாப் பழம் பறித்துக் கொண்டு வரச் சொன்னாயல்லவா?—நான் மரத்தில் ஏறி அம்மாவுக்குத் தெரியும்படி பறித்துக் கொண்டு வந்திருக்கிறேன்!'' என்று சங்கர் தன் மேல் சட்டைப் பைகளிலும், கால் சட்டைப் பைகளிலும் திணிக்கப்பட்டிருக்கும் கொய்யாப் பழங்களைக் குறிப்பிடும்



வருமான வரிப் பரிசோதகர்: என்னய்யா இது? படிக்க முடியல்லே! நுணுக்கி நுணுக்கி எழுதியிருக்கே, என்ன அது?

வியாபாரி: அதெல்லாம் வியாபார நுணுக்கங்கள். அதனால்தான்...

தோரணையில் தன் விழிகளால் சுட்டிக் காட்ட முயன்றான். ஆனால் அவனுடைய விழிகளோ எதிரே கொய்யாப் பழம் போல் நிற்கும் வசந்தியின் கட்டழகைக் கொய்து விழுங்கி விடவே தவித்தன; கைகளும் துடித்தன.

''அதற்கு இந்த நேரம் பார்த்தா வந்தாய்? அழகா யிருக்கு!'' என்று குமுறிய வசந்தி, ''உங்கள் வீட்டுக் கொய்யாப் பழம் ஒன்றை ருசி பார்க்கவும், உனக்கு மரம் ஏறத் தெரிகிறதா என்று கொஞ்சம் சோதனை பண்ணவும் காலையில் ஏதோ விளையாட்டுக்காகக் கேட்டேன். அதை நீ சீரியஸாக எடுத்துக்கொண்டு விட்டாயோ?'' என்றாள் வெகு அலட்சியமாக.

''இல்லே, வசந்தி....''

''என்ன, இல்லே? நொள்ளை..... இந்த நேரத்திலே நீ சுவரேறிக் குதித்து என் அறைக்கு வந்தது தப்பு இல்லையா?''

''தப்புத்தான்!''

''தெரிந்தே அந்தத் தப்பை ஏன் செய்தாய்?''

''கோபித்துக்கொள்ளாதே வசந்தி!''

''பின்னே என்ன செய்யச் சொல்கிறாய்? 'டூயட்' பாடச் சொல்கிறாயா?''

''இல்லை, வசந்தி! நாளை பொழுது விடிகிறதுக்குள் நான் வீட்டை விட்டே ஓடிப் போய் விடுவேன்! அதனால் கடைசியாக என் மனசில் உள்ளதையெல்லாம் உன்னிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன்......''

வசந்தியின் ஆத்திரமெல்லாம் மறைந்து விட்டது.

''நீ வீட்டை விட்டு ஏன் ஓடப் பார்க்கிறாய்?'' என்று கேட்டாள் வஸந்தி.

''என் அப்பா ஓயாமல் என்னைப் படிக்கச் சொல்கிறார். பரீட்சையில்

நான் பாஸ் பண்ணி, டிகிரி வாங்கி அவரைப் போல் நானும் ஒரு குமாஸ்தாவாகி நூறு ரூபாய் சம்பளத்துக்கு அவதிப்பட வேண்டும் என்று திட்டமிடுகிறார். அந்த 'பிஸினஸே' எனக்குப் பிடிக்க வில்லை!''

''பின்னே படிக்காமல் நீ என்ன 'பிஸினஸ்' செய்யப் போகிறாய்? அரிசி வியாபாரமா? அரசியல் வியாபாரமா?''

''இல்லே, கலை வியாபாரம்!'' என்று பெருமையுடன் புன்முறுவல் செய்த சங்கர், ''எனக்கு நல்ல நடிப்புத் திறமை இருக்கிறது. அதைக் கொண்டு நான் நாட்டு மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பேன். பெரிய நடிகனுகிப் பேரும் புகழும், லட்சக்கணக்கான பணமும் சம்பாதிப்பேன்!'' என்றான் ஓர் இலட்சியப் பெருமூச்சோடு.

''அடேயப்பா!'' என்று மூக்கின் மேல் விரலை வைத்த வசந்தி, ''ஆனால் சங்கர், உன்னைப் போல் அநேகர் அப்படி ஆசைப்படலாமே தவிர, எல்லாருக்கும் அந்த சான்ஸ் கிடைப்பதில்லை. சினிமா உலகத்தில் சேரும் ஆசையால் குடும்பங்களை விட்டு ஓடிப் போன எத்தனையோ பேர் கடைசியில் குட்டிச்சுவராக ஆகியிருக்கிறார்கள். அதை நீ மறந்து விடாதே!'' என்று எச்சரித்தாள்.

''இல்லே, வசந்தி! பெங்களூரில் ஒரு சினிமாக் கம்பெனியார் தமிழ்ப் படம் தயாரிக்கப் போகிறார்கள். எல்லாம் புது முகங்களாகத்தான் போடப் போகிறார்களாம்! எனக்கு அவர்களிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. நாளை பொழுது விடிவதற்குள் நான் வீட்டை விட்டுக் கிளம்பிப் போய் விடுவேன்!''

''இந்த சான்ஸை உன் அப்பா அம்மாவிடமே சொல்லி விட்டுப் போகலாமே...?''

''ஊஹூம்! 'நடிகன் கடைசியில் அநாதையாகத்தான் சாவான்!' என்று என் அப்பா ஒரு தத்துவத்தை வைத்துக் கொண்டு பல்லவி பாடுவார்! அம்மாவும் அதுக்கு அநுபல்லவி பாடுவாள்! இருவரும் சேர்ந்து என் எதிர்காலத்துக்கே பெரும் முட்டுக் கட்டைகளாகி விடுவார்கள்!''

வசந்தி இலேசாகச் சிரித்துக் கொண்டே, ''சங்கர்! நீ சினிமா உலகத்துக்குச் செல்கிறாய்! அங்கே புதுப் புது முகங்களாய்ப் பார்ப்பாய்! அப்புறம் பழைய முகங்களை யெல்லாம் மறந்து போய் விடுவாய்!'' என்றாள் சாதாரணமாக.

''இல்லே, வசந்தி! உன் முகத்தை மட்டும் ஒரு போதும் மறக்க மாட்டேன்!'' என்றான் அவன்.

வசந்தியின் நெஞ்சம் துணுக்குற்றது.

''இல்லே, சங்கர்! நீ என்றாவது ஒரு நாள் பெரிய நட்சத்திரமாகி ஏழடுக்கு உப்பரிகையில் சஞ்சரிக்கும் போது ஒரு வேளை உன்னைப் பார்க்க நான் வந்தால் நான் யாரென்றுகூடக் கேட்டு ஆச்சரியப் படுவாய்!''

''இல்லே, வசந்தி! நீ மாறு வேஷம் போட்டுக் கொண்டு வந்தாலும் உன் கரு விழிகளைப் பார்த்ததுமே நான் புரிந்து கொண்டு விடுவேன்!''

''சினிமா உலகில் நீ எத்தனையோ விதமான பெண்களைப் பார்ப்பாய்! அவர்களுக்கும் எத்தனையோ விதமான விழிகள் இருக்கும்!'' என்று வசந்தி கண்களைச் சிமிட்டி அவ்விழிகளிலிருந்து ஒரு புன்முறுவலைக் கொட்டினாள்.

''ஆனால் உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணாலுமே என் வாழ்க்கையை நிறைவிக்க முடியாது வசந்தி!'' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூவிய சங்கர், அப்படியே வசந்தியைத் தன் விழிகளால் விழுங்கி விடுவது போல் பார்த்தான்.


நிலா வெளிச்சமும், இரவின் இன்ப வாடையும், தனிமையான சூழ்நிலையும் அவனுக்குக் காதல் கிறக்கத்தை அதிகமாக மூட்டி விட்டன.

''வசந்தி!......'' என்று ஆசைப் போதையோடு விம்மிய சங்கர், முகமெல்லாம் குப்பென்று வியர்க்க, உடலெல்லாம் வெடவெட வென ஆட, ஒருகணம் நின்று விட்டு, அடுத்த கணம் ஏதோ காந்த சக்தியால் அமுக்கப்பட்டதைப் போல் வசந்தியை நோக்கி வேகமாக நெருங்கினான். அவன் இரு கைகளும் அவனையறியாமலே நீண்டன.

வசந்தி சட்டென்று துள்ளிக் குதித்து, அவனுடைய கைக்குச் சிக்காமல் எட்டத் தள்ளி நின்று, ''சங்கர்!'' என்று அழுத்தமான குரலில் கண்டித்தாள்.

அவள் தன் கல்லூரித் தோழிகளிடம் பேசிய லட்சிய வசனங்களெல்லாம் இப்போது அவள் நினைவுக்கு வந்தன. 'பெண் அடிமைத்தனம் ஒழிய வேண்டும்! காதல், கலியாணம், குழந்தைகள் இம்மூன்றும்தான் பெண்ணை ஓர் ஆணுக்கு அடிமைப் படுத்துகின்றன. ஆனால் ஓர் ஆணுக்கு அடிமையாகும் அளவுக்கு நாம் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து விடக் கூடாது. பெண்களாகிய நம்மிடம் ஆண்கள்தான் மயங்கும்படி செய்ய வேண்டுமே தவிர, அவர்களிடம் நாம் மயங்கிவிடக்கூடாது. ஓர் ஆடவன் நம் மீது காதல் பித்துக் கொண்டு தவிக்கும்படி தூண்டிவிட்டு விட்டுத் தூர நின்று வேடிக்கை பார்க்க வேண்டுமே தவிர, நாமே தூண்டில் முள்ளுக்கு இரையாகி விடக் கூடாது.




ஆதரவுடன்
சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி...
உங்கள் ஆசைக் கண்மணியின் பாக்கியம்,
ஆஸ்டர்மில்க் அளிக்கும் ஆரோக்கியம்.
காரணம், தாய்ப்பாலுக்கு நிகரானது
ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான பாலிலிருந்து
தயாரிக்கப்பட்டுள்ள ஆஸ்டர்மில்க், பாப்பாவின்
ஜீரண சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப்
பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, உங்கள்
குழந்தையின் திடமான நல் வளர்ச்சிக்கான
அயசத்தும் வைட்டமின்களும் அதில்
சிறப்புறச் சேர்க்கப்பட்டுள்ளன. வெப்பப்
பிரதேசங்களிலுள்ள குழந்தைகளுக்
கென்றே தயாரிக்கப்பட்டுள்ளது.
...தாய்ப்பாலுக்கு
நிகரானது
எளிதில்
கிடைக்கிறது
இப்போது
OSTERMILK
இலவசம்: ''ஆஸ்டர்மில்க் புத்தகம்'' (ஆங்கி
லப் பிரதி)... விரிவுமிக்க, குழந்தைப் பராம
ரிப்பு நூல்... தபால் செலவுக்காக 50 நயா
பைசா தபால் வில்லைகள் இணைத்து எழுதுக:
'ஆஸ்டர்மில்க்', போஸ்ட் பாக்ஸ் நம்பர்
2420, மதராஸ் 2.
OS. 14-140-M. T

இவை போன்ற அபூர்வமான, மகா ஆபத்தான லட்சியங்களை யெல்லாம் தன் கல்லூரித் தோழிகளிடம் முழங்கி விட்டு வந்த வசந்தி, காதலை விளையாட்டாகவும் ஆண்களின் உள்ளத்தை அதற்குரிய விளையாட்டு மைதானமாகவும், கருதிச் சாகஸமான ஒரு சிரிப்பு, அல்லது ஒரு சிறு பார்வையின் மூலமே எத்தகைய அறிவாளியான ஆடவனையும் மகா முட்டாளாக்கி விட முடியும் என்று தனக்குள் ஒரு சித்தாந்தத்தையும் உருவாக்கிக் கொண்டிருந்தாள் அல்லவா? அதன் பரீட்சைக்கு முதல் பலியானவன் தான் பக்கத்து வீட்டு வாலிபனான சங்கர்!

சங்கர் விம்மும் குரலில், ''வசந்தி! நாங்கள் உன் பக்கத்து வீட்டுக்குக் குடி வந்து உன்னை நான் முதன் முதலில் பார்த்ததுமே காதல் கொண்டு விட்டேன். அதை உன்னிடம் சொன்னால் நீ சிரிப்பாயோ அல்லது வெடுக்கென்று ஏதாவது சொல்லி வெறுத்து விடுவாயோ என்று தயங்கித் தயங்கித் தடுமாறிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது நான் இந்த ஊரை விட்டே போகப் போவதால் சொல்லத் தீர்மானித்தேன்!'' என்றான்.

வசந்தி ஒரு கணம் நாணத்தால், நெளிந்தாள். சங்கர் என்ன சொல்லப் போகிறான் என்பதை அவள் ஓரளவு யூகித்தும் இருந்தாள். 'நான் உன்னைக் காதலிக்கிறேன். என்னை நீ கலியாணம் செய்து கொள்கிறாயா?' என்று ஓர் ஆடவன் முதன் முதலாகச் சொல்லும் போது பெண்களுக்கு அந்த ஆடவனைப் பிடிக்கிறதோ இல்லையோ அவர்களையறியாமலே ஒரு நாணமும், ஒருவித வெற்றிக் களிப்பின் பெருமிதமும் ஏற்படுவது உண்டல்லவா?

''வசந்தி! உன்னோடு பழகியது முதல் ஒவ்வொரு நிமிஷமும் உன் நினைவாலே பித்துப் பிடித்து அலைகிறேன். நான் என்ன முயன்றாலும் உன்னை நினைக்காமல் என் உள்ளத்தைத் தடுக்க முடியவில்லை. நான் எங்கே சென்றாலும் உன் உருவத்தையே என் உள்ளம் சுமந்து கொண்டிருக்கும். நீ எப்படிப் பார்ப்பாய், எப்படிச் சிரிப்பாய், எந்த மாதிரிப் பேசுவாய், ஜன்னல் ஓரத்தில் நீ எந்தக் கோணத்தில் நிற்பாய், உன் மாடியறைக்கு எந்த நேரத்தில் படிக்க வருவாய், உன் அறை விளக்கை, அணைத்து விட்டு எப்போது தூங்குவாய், காலை எத்தனை மணிக்குக் கண் விழித்து எழுந்து எப்படி வெளியே நடந்து வருவாய் என்பதெல்லாம் அப்படி அப்படியே என் மனத்தில் பதிந்திருக்கின்றன!'' என்று உணர்ச்சி வசமாகிக் கூறிக் கொண்டே வந்த சங்கர், ''வசந்தி! இனி நீயில்லாமல் என்னால்


விஞ்ஞான விநோதம்

செயற்கை நாக்கு!

விபத்து காரணமாகவோ அல்லது நோய் காரணமாகவோ முகத்தில் உள்ள அவயவங்கள் பாதிக்கப்பட்டால் செயற்கை முறையில் அவைகளை அமைத்து இயற்கை அவயவங்களைப் போலச் செயல் ஆற்ற நிபுணர்கள் வழி கண்டுபிடித்து விட்டனர். இந்தச் செயற்கை அவயவங்கள் தத்ரூபமாக இருப்பதால் அவை இயற்கையானவை தானா அல்லது செயற்கையானவையா என்று கண்டுபிடித்துச் சொல்ல முடியாது.

செயற்கைக் காதுகளையும் மூக்கையும் பொருத்திச் சஸ்திர சிகிச்சை செய்வதில் டாக்டர்கள் பல நூற்றாண்டுகளாகவே சிரத்தை காட்டி வந்திருக்கின்றனர். மெழுகு அல்லது ரெஸின் இவைகளைக் கொண்டு சீனர்கள் இந்தச் செயற்கை அவயவங்களை அமைத்து வந்தனர். 1002ல் தனது 22வது வயதில் காலமான சீன சக்கரவர்த்தி மூன்றாவது ஆட்டோ செயற்கை மூக்கையே கொண்டிருந்தவர். அந்த மூக்கு தங்கத்திலானது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நாக்கு அடியோடு எடுக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் செயற்கை நாக்கு சஸ்திர சிகிச்சை நிபுணர்களால் பொருத்தப்பட்டுள்ளது. இந்தச் செயற்கை நாக்கின் மூலம் நன்றாகச் சுவையறிய முடிகிறது என்பதுடன் நன்றாகப் பேசவும் முடிகிறது. இனி ''மாமியார் ஸ்பெஷல் நாக்கு'' என்றும் ''எதிர்த்துப் பேச எடுப்பான நாக்''கென்றும் செயற்கை நாக்குகள் விளம்பரப்படுத்தப் பட்டால் வியப்பில்லை அல்லவா!





போர்டு எழுதுகிறவர்: வாங்க வாங்க செட்டியாரே! போர்டு வேலை முடிஞ்சிட்டது. நீங்க சொன்ன மாதிரியே பூவேலை செய்து 'ஜம்'னு எழுதியிருக்கேன். இந்தப் பூ எழுத மூன்று ரூபாய் 'பெயிண்ட்' செலவாகியிருக்கிறது. ஆகையினால் அந்த மூன்று ரூபாயையும் சேர்த்துக் கொடுத்திடுங்க.

செட்டியார்: மூனு ரூபாயா? அடேயப்பா! ஒண்ணு செய்யுங்க. அந்தப் பூவை அழிச்சிடுங்க. வேண்டாம்!

வாழவே முடியாது! உன்னைத் தவிர நான் வேறு யாரையும் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்!'' என்று சொல்லி விட்டுச் சட்டென்று துள்ளி வசந்தியின் இரு கைகளையும் எடுத்துத் தன் கைகளுக்குள் பிடித்துக் கொண்டு அவளுடைய முகத்தைக் குனிந்து பார்த்தான்.

வசந்தியின் முகம் சிவந்து அதன் சாயை அவள் கன்னக் கதுப்புக்களில் படர்ந்தது. கண்ணிமைகள் தாழ்ந்தன. அவை சங்கரின் ஆவலை மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்தன.

அதை உணர்ந்து கொண்ட வசந்தி தன் கைகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். ''இல்லை, சங்கர்! இல்லை!'' என்று மெல்ல முனகினாள்.

''உண்மையாகச் சொல், வசந்தி! நான் பெரிய நடிகனாகித் திரும்பி வரும் வரை நீ காத்திருப்பாயா?''

''அது எப்படி முடியும்?'' என்ற வசந்தி கலகல வென்று வாய் விட்டுச் சிரித்தாள்.

''ஏன், முடியாது, வசந்தி? அதற்குள் நீ கிழவியாகி விடுவாய் என்று நினைத்துச் சிரிக்கிறாயா? அல்லது நம் கலியாணத்துக்கு நம் பெற்றோர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறாயா?'' என்று கேட்டான்.

''நான் கிழவியானாலும் நம் பெற்றோர்கள் சம்மதித்தாலும் நான் சம்மதிக்கவே மாட்டேன்!''

''ஏன் மாட்டாய்?''

''அதை மட்டும் நீ கேட்காதே, சங்கர்!''

''ஏன் கேட்கக் கூடாது?''

''சங்கர்! உன்னை.... உன்னை.... அந்த அர்த்தத்தோடு நான் பாவிக்கவில்லை. உன்னுடன் பழகவும் இல்லை.''

''ஏன் இல்லை?'' என்று வியப்புடன் கேட்டான் சங்கர்.

வசந்தியின் மீது அவன் எவ்வளவு ஆசை கொண்டிருந்தானோ அதே போல் வசந்தியும் தன் மீது ஆசை கொண்டிருப்பாள் என்று அவன் இறுமாந்திருந்தான். இப்போது அவள் 'அந்த அர்த்த'த்தில் அவனோடு பழகவில்லை என்று சொன்னதும் அவனுடைய தன்னம்பிக்கை புண்படுத்தப் பட்டது போல் பொருமியது. மேலும் அவனுடைய உள்ளத்தில் அத்தகைய ஆசை வளருவதற்கு வசந்தியே தன் புன்முறுவல், குதூகலமான பார்வை முதலானவற்றால் ஒரு தூண்டுகோலாக இருந்தாள். அதனால் தான் அவன் தன் காதலை அவளிடம் வெளியிடவும் துணிந்தான்.

''சொல், வசந்தி! நீ எந்த அர்த்தத்தோடு என்னிடம் பழகினாய்?''

''அதற்கு எந்த அர்த்தமுமே இல்லை!''

''அப்படி யென்றால்?''

''அதை நான் விளக்கிச் சொல்ல முடியாது!''

''ஏன் முடியாது?''

''அது உனக்குப் புரியாது, சங்கர்!''

''ஏன் புரியாது? எனக்கு அறிவு போதாதா?''

''இல்லை, சங்கர்! நான் உனக்கு ஏற்றவளல்ல! உன்னை நான் மணந்து திருப்திகரமாகக் குடும்பம் நடத்தவும் முடியாது!''

''முயன்று பார்க்கலாமே!''

''அது என்றால் முடியவே முடியாது, சங்கர்! நம் இருவருக்குமிடையே கணவன் மனைவி என்ற பந்தம் ஏற்படவே முடியாது! அப்படியே ஏற்பட்டாலும் கலியாணமான மறு மாதமே இருவரும் சண்டை பிடித்துக் கொண்டு பிரிந்து விடுவோம்!''

சங்கர் அப்படியே நிலை குலைந்து நின்றான்.

(தொடரும்)

பீட்டரின் கதை



ஆங்கிலப் படங்களில் உள்ளத்தை உருக்கும் காதல் கதைகளையும், மனத்தை வியக்க வைக்கும் மனோதத்துவக் கதைகளையும், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் கதைகளையும், நெஞ்சைப் பிழிந்தெடுக்கும் சோகக் கதைகளையும், சாகா வரம் பெற்ற சரித்திரக் கதைகளையும் எத்தனை எத்தனையோ பார்த்திருக்கிறோம். அவற்றையெல்லாம் பார்த்துப் பிரமித்து மகிழ்ந்தாலும், படங்களில் தெய்வ மகிமையையும், புனிதமார்க்கத்தின் தத்துவங்களையும் பார்த்துப் பெருமைப்படும்போது உண்டாகும் தனியானதோர் உணர்ச்சி என்றுமே தனியானதுதான். அதற்கு இணையாக எதையும் கூற முடியாது. ''பத்துக் கட்டளைகள்'', ''பென்ஹர்'' முதலிய படங்களை உதாரணமாகக் கூறலாம்.

ஏசுநாதரின் சீடர்களுள் முக்கியமானவராகக் கருதப்படும் ஞானி பீட்டரின் கதையை விளக்கும் (The Big Fisherman) என்னும் படம் பக்திச் சுவை நிறைந்து தெய்வ மகிமையை விளக்கும் சிறந்த படம்; நினைத்துப் பெருமைப்படக் கூடிய படமும்கூட.

மீனவர்களின் தலைவனான சைமன் ஒரு முரடன்; யாருக்கும் அடங்காதவன், யாரையும் அடக்கியாளும் ஆண்மையும், ஆற்றலும் பெற்றவன்; ஏசுநாதரின் மலைப் பிரசங்கத்தைக் கேட்க மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லுவதைக் கண்டு இகழ்ந்து பேசிக் கொண்டிருந்தவன்; எதிலும் ஐயம் கொள்பவன்; எதையும் ஒப்புக்கொள்ள மறுக்கும் முரட்டுச் சுபாவம் உள்ளவன்; மீனவர்களால் 'பெரிய 'மீனவன்' என்றே அழைக்கப்பட்டு வந்தவன். பாவமன்னிப்பினால் பதிதர்களையும் பாவனம் அடையச் செய்த ஏசுநாதரின் மகிமையை நேரில் கண்டு அறியும் வாய்ப்பு சைமனுக்குக் கிட்டுகிறது. சைமன் ஒரு குருட்டுக் குழந்தையை ஏசுநாதரிடம் எடுத்துச் செல்கிறான். அவரது அருள் நோக்கினால் குழந்தைக்குப் பார்வை வந்து விடுகிறது. ஏசுநாதரின் பூரண அநுக்கிரகத்துக்கும் பாத்திரனாகி விடுகிறான் சைமன். ஏசுநாதர் அவனுக்குப் பீட்டர் என்று பெயரிடுகிறார்; சைமன் அப்பொழுதிலிருந்து ஸெயின்ட் பீட்டர் ஆகி விடுகிறார். கிறிஸ்துவ நெறியைப் பரப்பும் பரம ஞானியாகத் திகழ்கிறார். இனி, திரைக் கதையைக் கவனிப்போம்.

ஃ ஃ ஃ

அரேபியாவின் இளவரசி தன் தாயின் வாயிலாகவே அவள் தந்தை புரிந்துவிட்ட கொடுமைகளை அறிந்து, கலீலிக்குச் சென்று தன் தந்தையைப் பழிக்குப்பழி வாங்க முயன்று தக்க சமயத்தில் சைமனால் தடுக்கப்படுகிறாள். ஏசுநாதரின் அஹிம்சை உபதேசம் அவளைச் சாந்தப்படுத்துகிறது.

லாயிட் ஸி. டக்ளஸ் என்ற பிரசித்தி பெற்ற நாவலாசிரியர் எழுதிய (The Big Fisherman) என்ற நாவலை ஆதாரமாகக் கொண்டதுதான் இந்தப் படம்.

ஏசுநாதரின் மலைப் பிரசங்கத்தைக் கேட்கும்போது மெய்சிலிர்க்கிறது. அவர் முகம் தெரியாவிட்டாலும் புனித வாசகங்களின் மூலம் அவருடைய தூய அகம் தெரிகிறது.

சைமனாக நடிக்கும் ஹோவார்டு கீல் ஆங்கிலத் திரைக்குப் புதியவரல்ல. ஆனால் அவர் ஏற்றிருக்கும் இந்தப் பாத்திரம்தான் அவருக்குப் புதிது.

முதலில் முரடனாக இருந்துவிட்டு, பிறகு பரம ஞானியாக மாற வேண்டுமானால் மிகத் திறமை வேண்டும். அந்தத் திறமை சைமனாக நடிக்கும் ஹோவார்டு கீலரிடம் பரிபூரணமாக இருக்கிறது.


இளவரசி பாரா நல்ல பாத்திரம். தாயின் துயரம் பொங்கும் கதையைக் கேட்டுப் பொங்கிப் பழி வாங்கத் துடித்துத் தவிக்கும் கட்டங்கள் நன்றாயிருக்கின்றன; சூஸான் கோனர் அந்தப் பாத்திரத்தை ஏற்று நன்றாய் நடித்திருக்கிறார்.

கலீலியின் மன்னன் ஹெராட் ஆண்டிபாஸ் முக்கியமான பாத்திரம். ஒரு சமயம் தான் செய்த கொடுமையான காரியத்தை நினைத்து நடுங்குவதும், கண்ணெதிரில் தன் மகளைக் கண்டு கலவரம் அடைந்து கண்களில் நீர் மல்க, சைமனிடம், ''என் புதல்வியைக் காக்கும் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன்....'' என்று நெகிழ்ச்சியுடன் கூறுவதும் அப்பாத்திரத்துக்கு மெருகேற்றுகின்றன. அதை ஏற்ற ஹெர்பர்ட்லாம் அமைதியாகவும் கம்பீரமாகவும் நடிக்கிறார்.

படப் பிடிப்பின் சிறப்பும், கதையின் உயர்வும், பாத்திரங்களின் பெருமையும் எல்லாமாகச் சேர்ந்து படத்தின் தரத்தை உயர்த்தி விட்டன.

— காந்தன்





விவேகானந்தா கல்லூரி

மாதாகோயில் பிரசங்கியார் ஒருவர் ஞாயிறு தின ஓய்வு நோக்கம் பற்றியும் பிரார்த்தனையின் அவசியம் பற்றியும் உருக்கமாக, உயர்ந்த மேடையில் நின்றிருந்தவாறு முன்னால் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்து உபதேசித்துக் கொண்டிருந்தார்.

''முன்பெல்லாம் காகம், குருவி முதலிய பறவைகளுக்குக் கூட ஞாயிற்றுக்கிழமையான 'சாபத்' நாளுக்கும் இதர தினங்களுக்கும் வித்தியாசம் நன்கு தெரியும். ஞாயிற்றுக்கிழமைகளில் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு யாரும் சாலையோடு போனால்கூட அவைகள் பயந்து பதுங்க மாட்டா! ஆனால் இப்போது ஞாயிறு தினங்களில் கைத்தடியோடு யாரும் வயோதிகர்கள் நடந்தால் கூட வேட்டைக்காரர்களாக்கும் என்று நினைத்து அலறிப் புடைத்துப் பறக்கின்றன. பிரார்த்தனை தினத்தின் புனிதத்தன்மையே மாறி விட்டது! அதோ அந்த மைதானத்தில் இப்போது கிரிக்கெட் ஆட்டம் நடந்து கொண்டிருப்பதே ஓர் உதாரணம்!'' என்று சொல்லி மூச்சுவிடப் பேச்சை நிறுத்தினார்.

''அப்படியா?.... ஓட்ட எண்ணிக்கையை எழுதும் பலகை உங்கள் பார்வைக்குத் தெரிந்தால், எந்தக் கட்சிக்கு அதிக ஓட்டங்கள் என்று பார்த்துச் சொல்லுங்களேன். என் பையன்கூட 'டவுன் கிளப்'புக்காக ஆடிக் கொண்டிருக்கிறான்'' என்று கேட்டுப் பிரசங்கத்தின் நோக்கத்தையே தகர்த்தெறிய முன் வந்தாராம் பின் வரிசை ஆசாமி ஒருவர். பிரார்த்தனைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைவிட கிரிக்கெட் ஆட்டத்தின் மீது அதிக ஆர்வம் காட்டுபவர் போலும்!

ஆனால் விவேகானந்தாக் கல்லூரிக்குள் நுழைந்து, ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் அளவளாவி விட்டுத் திரும்பியபோது, கல்லூரி நிர்வாகம் பிரார்த்தனைக்கு அளிக்கும் முக்கியத்துவமும், மாணவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் காண்பிக்கும் ஆர்வம் அடையும்

வெற்றியும், தனித்தனியே நின்று ஒன்றோடு ஒன்று மோதி வீழ்த்தாமல் இரண்டுமே கல்லூரிக்குப் பெருமை தேடிக் கொடுக்கும் அம்சங்களாக விளங்குகின்றன என்று தெரிந்து கொள்ள முடிந்தது.

அவர்கள் தைத்திரேய உபநிஷத்தும் படிக்கிறார்கள்; டான் பிராட்மன் போல் மட்டையையும் பிடிக்கிறார்கள்.


நூற்றுக்கணக்கான மாணவர்கள் பரீட்சைகளில் கூடை கூடையாக மார்க்குகளை அள்ளிக் குவித்திருந்தும்கூட, வேறு பல அர்த்தமற்ற காரணங்களுக்காக, நகரக் கல்லூரிகளில் இடம் பெற முடியாமல் தவித்த நிலை கண்டு மனம் வெதும்பிய சில புண்ணியவான்கள் 1945ம் ஆண்டில் ஒரு நாள் சர் சி.பி. ராமசுவாமி ஐயரின் ஜாகையில் கூடி இந்தத் தேக்க நிலையை எப்படிப் போக்குவது



கலை வளர்க்கும் கோயில்கள்

என்று ஆராய முனைந்தார்கள். அந்த ஆராய்ச்சியின் விளைவாக உருவானது தான் விவேகானந்தா கல்லூரி. கல்வி, மதம், சமூகப் பணியாற்றுவதில் திறமையும் அனுபவமும் பெற்ற 'ராமகிருஷ்ண மடத்திடம் ஒப்படைக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் 1946ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் தேதியன்று மடத்தின் தலைவர் கைலாசனந்தஜியால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தக் கல்லூரி தோன்றுவதற்குக் 'காரணகர்த்தாக்களாக விளங்கியவர்கள், ராமானுஜாச்சாரியார், ரைட் ஆனரபிள் சாஸ்திரியார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கோபாலசாமி ஐயங்கார், எம். சுப்பராய 'ஐயர், சி. பி. ராமசுவாமி ஐயர் முதலியோரும் அவர்களுடைய நெருங்கிய நண்பர்களும்தான்.

இப்போது கல்லூரி முதல்வரா



உங்கள் நினைவுடன் செய்த புதிய **மெர்ரிட்*** ஸ்டைல்-ஆர்ம்


நவீன அமைப்போடு நேர்த்தியாக வேலை செய்யக்கூடியது

இதன் நவீன மிடுக்கான தோற்றத்தை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்... மிகவும் எளிதாக கடினமின்றி தைக்கக்கூடிய புதிய மெர்ரிட் ஸ்டைல் ஆர்ம் கண்ணைக்கவரும் இரண்டு டோன் பழுப்பு அல்லது சாதாரண கருப்பு நிறங்களில் கிடைக்கும். மெர்ரிட் ஸ்டைல்-ஆர்ம் எல்லாவகையிலும் அலங்காரத் தோற்றமளிக்கிறது...சிறந்த கவனத்துடன் மெர்ரிட்டிற்கே உரிய வேலைப்பாடுகளுடன் கூடியது. தனிப்பெருஞ் சிறப்புகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

...ஸிங்கரின்* சிறப்புகளுடன் தரம் குறையாது தயாரிக்கப்பட்டது. விற்பனைக்குப் பின் உடனடியாக வழங்கப்படும் தவறாத சேவை.

புதிய இலக்கமிட்ட டென்ஷன் ரெகுலேடர்

சீர்திருத்தி செம்மையாக்கப்பட்ட புதிய லாக்கிங் தையல் ரெகுலேடர்



முழு விபரங்களையும் உங்கள் அருகாமையிலுள்ள அங்கீகாரம்பெற்ற ஸிங்கர் வியாபாரியிடமோ அல்லது ஸிங்கர் கடையிலோ கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்

S.G.6 TAM

கின்றன. எல்லா மாணவர்களும் ஏககாலத்தில் ஒரே இடத்தில் கூடி அமரப் போதுமான இட வசதி இல்லாததால் அநேகமாக வகுப்பு அறைகள் எல்லாவற்றுக்குமே, ஒலிபெருக்கி ஏற்பாடு அமைத்திருக்கிறார்கள். பொதுப் பிரார்த்தனையில் மாணவர்கள் அவரவர்கள் வகுப்பில் இருந்தவாறே கலந்து கொள்ள இந்த முறை உதவுகிறது.

மாணவர்களை இந்தக் கல்லூரியில் அனுமதிக்கும் போது அந்த மாணவர்கள் கல்லூரிக்கு அருகில் உள்ள பகுதிகளில் வசிப்பவர்களா என்று கவனித்துப் பிறகு சேர்த்துக் கொள்கிறார்கள். தாம்பரத்திலிருந்தோ, பெரம்பூரிலிருந்தோ, தங்கசாலையிலிருந்தோ வரும் மாணவர்கள் அதிக நேரத்தைப் போக்குவரத்தில் செலவிட நேரிடுகிறது. இது அவர்கள் வகுப்பில் காண்பிக்கவேண்டிய ஊக்கத்தைப் பாதிக்கிறது என்று குறிப்பிட்டார் முதல்வர்.

''மனிதனை மனிதனாக்கும் கல்வி வேறு, வயிற்றுப் பிழைப்புக்கான கல்வி வேறு' என்றார் விவேகானந்தர். இங்கு 'கல்வி பண்பிற்காகத்தானே தவிர பரீட்சைக்காக அல்ல' என்ற கொள்கையுடன் பயிற்சியளிக்கிறார்கள். எல்லா ஆசிரியர்களுமே எங்கள் உள்ளத்தில் கற்றுக்கொள்ள ஆர்வம் ஏற்படும் வகையில் சொல்லித் தருகிறார்கள். சந்தேக உணர்ச்சி எங்கள் முகத்தில் பரவினால் போதும். மேலே அவசரப்பட்டு ஓடாமல் அந்த இடத்தில் நின்று விளக்கம் கொடுத்துவிட்டுத்தான் அடுத்த விஷயத்துக்குப் போவார்கள்'' என்று குறிப்பிட்டார் ஒரு மாணவர். ஆசிரியர்கள், மாணவர்களின் உள்ளங்கள் பரந்து கிடக்கும் அளவுக்குக் கல்லூரிக் கட்டிடங்கள் பரந்து விஸ்தாரமாகக் கிடக்கவில்லையே என்பது ஒரு குறைதான். இருந்தாலும் எஞ்சியிருக்கும் திறந்த வெளியில் புதுக் கட்டிடங்கள் எழுப்பத் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது.

மத்திய நிதி மந்திரி திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தாம் அருமையாகச் சேர்த்து வைத்திருந்த பல அரிய புத்தகங்களில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டதை இந்தக் கல்லூரிக்கு வழங்கி யிருக்கிறார். மாணவர்கள் யோகசாலிகள்!

மாணவர்களின் பேச்சு வன்மைக்கும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் சந்தர்ப்பம் கொடுக்கிறார்கள். 'அசோஸியேஷன் நேரம்' என்று குறிப்பிடப்படும் அந்தக் கடைசி பீரியட்டில் ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் தங்கள் பாட சம்பந்தமான விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றப் பழக்கம் பெறுகிறார்கள்.

கல்லூரியின் வளர்ச்சியுடனும், புகழுடனும் கூடவே பெருமை பெற்று வரும் ஒரு விஷயம் இந்த ஹாஸ்டலில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தயாராகும் மோர்க் குழம்பு தானாம்! முன்பு இந்த ஹாஸ்டலில் தங்கி யிருந்தபோது அதன் ருசியை அனுபவித்துவிட்டு இப்போது குழந்தை குட்டி குடித்தனத்தோடு இருந்தாலும் சில மாணவர்களைச் சிநேகம் பிடித்துக்கொண்டு அவர்களின் அதிதிகளாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இங்கு வந்து போகும் மோர்க் குழம்பு விசிறிகள் பலர் உண்டாம்!

கல்லூரி ஹாஸ்டலின் காம்பவுண்டுச் சுவருக்கு அப்பால் ஓர் எருமை மாட்டுப் பண்ணையே இருக்கிறது. காம்பவுண்டுச் சுவருக்கும் கட்டிடத்துக்கும் இடையே அகலம் வெகு குறைவு! ஆகவே எருமைப் பண்ணையைச் சேர்ந்த கொசுக்கள் இடைவழியில் ஏதாவது விமானதளம் தேடி இறங்க அவசியம் இல்லாமல் நேரே மாணவர்கள் மேலேயே இறங்கி விடுகின்றன!

ஹாஸ்டல் உணவு விகிதம் இப்போது தினசரி சுமார் ஒரு ரூபாய் அறுபது பைசாவில் நிற்கிறதாம். தரத்தைக் குறைக்காமல் விகிதத்தை ஒரு ரூபாய் அளவுக்குக் குறைக்க முதல்வர் சேஷாத்திரி முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறாராம். அது வெற்றி பெற்றால் மாணவர்களுக்கு மிகுந்த உதவியாக இருக்குமே! ஹாஸ்டல் மாணவர்கள் 'வாடா மலர்' என்னும் வண்ணச் சித்திரங்கள் நிறைந்த கையெழுத்துப் பத்திரிகையைச் சிறப்பாகத் தயாரித்து வருகிறார்கள்.

இந்தக் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவரைச் சந்தித்து அவர் படித்த காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டபோது அவர் உணர்ச்சி வசப்பட்டுப் போனார். 'கல்லூரி தொடங்கப்பட்ட காலத்தில் சிப்பந்திகள் எல்லாம் ரொம்பக் குறைவான அளவில் இருந்தார்கள். பரீட்சை சமயங்களில் பெஞ்சுகளைப் பிடித்துப் போடும் பணியைக்கூட ஆசிரியர்களே முன்வந்து உற்சாகத்துடன் செய்வார்கள். அப்படி ஆர்வத்துடன் எத்தனையோ ஆரம்ப கால கஷ்ட நஷ்டங்களையெல்லாம் தாண்டி வளர்ந்த கல்லூரி' என்ற பெருமையுடன் சொன்னார்.

முன்னாள் முதல்வர் ஒருவர் கணித பாடம் நடத்துபவராம். ஹானர்ஸ் வகுப்புக்கு முதல் தடவையாகப் பாடம் எடுக்க முன்வந்து புத்தகத்தைக் கையில் எடுத்தார். க்ஷேத்திரக் கணித பீரியட். ''முதல் தீரம் இதை நீங்கள் உயர்நிலைப் பள்ளியிலேயே கற்றிருக்க வேண்டும். இப்போது விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இரண்டாவது தீரம் முதல் தீரத்தின் மறு தலைதான். ஆகையால் அதற்கும் விளக்கம் தேவையில்லை. மூன்றாவது வெகு சுலபமானது. நீங்களே புரிந்து கொள்ளலாம். நான்காவதைச் சற்றுக் கவனமாக வீட்டில் போட்டுப் பாருங்கள். ஆகவே இப்போது ஐந்தாவது தீரத்தில் ஆரம்பிப்போம்'' என்றாராம் முதல்வர்.

அவ்வளவுதான்; மாணவர்கள் வெலவெலத்துப் போனார்களாம். மாணவர்களின் கஷ்டம் முதல்வர் செவிகளுக்கு எட்டியது. உடனே முதல்வர் அந்த வகுப்புக்கு அப்புறம் வேறு ஆசிரியரை ஏற்பாடு செய்துவிட்டாராம்.

இக்கல்லூரி ஹாஸ்டல் மாணவர்கள் தங்கள் உள்ளங்களில் நிலவுவதாகக் கருதும் இரண்டே குறைகள், எருமைப் பண்ணையின் எல்லைப் பிரச்னையும், கல்லூரி முதல்வரின் முன் தொங்கும் ஒரு கற்பனை இரும்புத் திரையுமாகும்.


தாங்களாவே முன் வந்து முழு மனத்துடன் ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடும், ஆசிரியர்கள் மீதுள்ள பக்தியும் அவர்களிடம் உள்ள பல நிறைவுகளில் இரண்டாகும்.




JWT-GRA. 1445 (a)

வருஷம் முழுவதும் குடும்பத்தில் பண்டிகையின் குதூகலம் நிலவச் செய்யும் பரிசு ... நேஷனல்-எக்கோ ரேடியோ என்பதில் ஐயமுண்டோ! நம் நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஒலிபரப்பாகும் இன்னிசை, நாடகம், மற்றும் இதர பொழுது போக்கு நிகழ்ச்சிகளை குடும்பத்தினர் அனைவரும் நாள் முழுவதும் கேட்டு மகிழ அது உதவும். கண்ணையும் கருத்தையும் கவரும் ஒப்பற்ற ரேடியோ நேஷனல்-எக்கோ!


இதர விவரங்களுக்கும், ரேடியோக்களை இலவசமாக இயக்கிக் கேட்பதற்கும் உங்களருகில் உள்ள நேஷனல்-எக்கோ டீலரை இன்றே அணுகுங்கள்.




மாடல் BT-757: ட்ரை பாட்டரி செட். 7 டிரான்ஸிஸ்டர்கள் மற்றும் 2 டயோடுகள், 4 பாண்டுகள் ரூ.415.00




மாடல் U-764: 5 வால்வுகள், மற்றும் 3 பாண்டுகள், பிளாஸ்டிக் பெட்டி ரூ. 270.00



மாடல் A-779: 6 வால்வுகள், மற்றும் 3 பாண்டுகள், வனப்புள்ள பெட்டி ரூ.395.00



மாடல் U-755: 6 நோவல் வால்வுகள், 3 பாண்டுகள், கண்ணைக்கவரும் பெட்டி ரூ. 375.00



ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பெங்களூர் . ஸெகந்திராபாத் . பாட்னா

GRA

எல்லைப்புறத்தில்... குமாவான்



"தனக்கு இயல்பான இரையைப் பதுங்கிப் பின்தொடர்ந்தோ எங்கேயாவது ஒளிந்திருந்து காத்திருந்தோ தான் வேங்கை கொல்கிறது. இதற்கு முதலில் வேகம் வேண்டும்; அடுத்தபடியாகப் பல்லும் நகமும் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும். எனவே, ஒரு காயமோ சிறிய காயங்களோ வேங்கைக்கு வேதனை கொடுத்தாலும் சரி; அதன் பல்விழுந்தோ பழுதுற்றோ போய், நகம் தேய்ந்து விட்டாலும் சரி—தனக்கு இரையாகும் வழக்கமான பிராணிகளை வேங்கையால் பிடிக்க முடியாமல் போகிறது. இதனால் மனிதரைக் கொல்லும் அவசியம் வேங்கைக்கு ஏற்படுகிறது...."



இவ்வாறு வேங்கைப் புலியின் பெருந்தன்மையையும் மனிதனுடைய கையாலாகாத்தனத்தையும் அழகாக வெளியிடுபவர் ஜிம் கார்பெட் என்ற வேட்டைப் பிரியர். Man eaters of kumaon என்ற தமது நூலில் * குமாவானில் தாம் சுட்டு வீழ்த்திய புலிகளைப் பற்றிச் சுவையான பல விஷயங்களைச் சொல்லுகிறார். ஜிம் தாம் சுட்டுக் கொன்ற ஆட்கொல்லிப் புலிகளின் உடலிலிருந்து இருநூறு அல்லது முந்நூறு முள்ளம் பன்றி முட்களை எடுத்திருக்கிறாராம். இந்த முட்களில் பல ஒன்பது அங்குல நீளமும், பென்சில் அளவுக்குக் கனமும் உள்ளவையாக இருந்தனவாம். புலியின் சதைக்குள்ளே புகுந்துவிட்ட முள்ளம்பன்றியின் முட்கள் எத்தனை காலமானாலும் கரைந்து போவதே இல்லையாம்.

புலிக்கு இதனால் ஏற்படக் கூடிய துன்பத்தை நாம் எளிதில் ஊகிக்க முடிகிறது. அது உற்சாகமாக ஓடி வேட்டையாடிப் புசிக்கும் திறனை அடியோடு இழந்து விடுவதும் இயல்புதான். அப்போது தான் அது வேறு வழியின்றி ஆட்கொல்லிப் புலியாக மாறுகிறது.

இயற்கையின் ஒரு சம நிலையைப் பாதுகாக்க உதவியாகவே வேங்கையை ஆண்டவன் படைத்திருக்கிறான் என்றும்; வேங்கையின் இயற்கை உணவான பிராணிகளையெல்லாம் மனிதன் ஈவிரக்கம் இல்லாமல் கொன்று அழித்து விடுகிற போது, இரண்டு சதம் ஆடு மாடுகளை வேங்கைகள் கொன்று விட்டன என்பதற்காக அந்த இனத்தையே குரூரமானது, ரத்த வெறி கொண்டது என்றெல்லாம் பழிப்ப துநீதியல்ல என்றும் கருதுகிறார் ஜிம்கார்பெட்.



குமாவான் ஆட்கொல்லிகளைச் சற்று மறந்து விட்டு அந்த எல்லைப்புறத்தில் வாழும் மக்களைக் கொஞ்சம் ஆராய்வோம். இங்கு வாழ்வோரில் பெரும்பான்மையினர் போதியர் எனப்படுவோர்தான். போதியர் என்ற சொல் கலாசார ரீதியான தொடர்பில்லாத பல இன மக்களைக் குறிக்கிறது. குமாவானில் மட்டுமல்லாமல், நேபாளம், சிக்கிம், பூடான், கிழக்குத் திபெத் ஆகிய பிரதேசங்களிலும் தங்களைப் போதியர் எனக் குறிப்பிட்டுக் கொள்ளும் இனத்தவர் உள்ளனர். பல வேற்றுமைகளுக்கிடையே ஒரே ஒரு முக்கிய ஒற்றுமையும் இவர்களிடையே உள்ளது. போதியர் அனைவரும் திபெத் நாட்டுடன் ஏதா



வது ஒரு வகையில் வர்த்தகத் தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

குமாவான் போதியர், வடக்கே திபெத்திய இடையர்களுக்குத் தானியங்கள் சர்க்கரை துணி மணி ஆகியவற்றையும் தெற்கே உள்ள செழிப்பானதும் வெதுவெதுப்பானதுமான சமவெளிகளில் வாழும் விவசாயிகளுக்கு உப்பு, கம்பளி ஆகியவற்றையும் பண்டமாற்று முறையில் விற்கின்றனர்.

சீதோஷ்ண நிலையும் வர்த்தகத் தேவைகளும் போதியர்களை நாடோடிகளாக்கி விட்டன. உத்தரப் பிரதேசத்தில், உத்தராகாண்ட் என்னும் பெயரில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள நிர்வாக வட்டத்தைச் சேர்ந்த குமாவான் வடக்குப் பகுதியில் பரவலாக வசிக்கும் போதியர், நேபாளம், சிக்கிம், பூடான், திபெத் போன்ற பிற நாடுகளில் குடியேறிய போதியரைப்போலன்றி ஒரு முக்கியமான விஷயத்தில் மாறுபட்டிருக்கின்றனர். பிறபகுதிகளில் வாழ்வோர் புத்த மதத்தைப் பின்பற்றியுள்ள போதிலும் குமாவான் போதியர், முக்கியமாக மேற்கத்தியவர் ஹிந்துக்களாக வாழ்ந்து சம்ஸ்கிருத சம்பிரதாயங்களின்படி நடந்து வருகின்றனர்.



இவர்கள் ஜனன, மரண, திருமண சடங்குகளுக்குப் பிராமணப் புரோகிதர்களை அழைத்து நியதிப்படி நடத்துகின்றனர். பெற்றோர்களே திருமணத்துக்கு ஏற்பாடுகளைச் செய்கின்றனர். காதல் கலியாணம், விதவா விவாகம் ஆகியவை இங்கே இழிவாகக் கருதப்படுகின்றன.


குமாவான் போதியர் வசிக்கின்ற ஐந்து நதிப் பள்ளத்தாக்குகளும் பண்டைக் கால முதலே நமக்குப் பழக்கமானவைதான். நைநிடாலுக்கு வடக்கே மானஸரோவருக்கும் கைலாயத்துக்கும் பாதைகள் இவ்வழியாகத்தான் செல்கின்றன. பல ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல் புனிதமான இம்மலைச் சிகரங்களைத் தரிசிக்கவும் பண்டரிநாத், ரிஷிகேசம் க்ஷேத்திரங்களில் வழிபடவும் ஆண்டு தோறும் எத்தனை பக்தர்கள் யாத்திரை கிளம்பிச் செல்கிறார்கள்! பனி மூடிய மலைகளாலும் கங்கை, காளி ஆகியவற்றின் உபநதிகளாலும் ஐந்து பள்ளத்தாக்குகளாகப் பிரிந்துள்ள குமாவானில் போக்குவரத்து பெரும்பாலும் படகுகள் மூலமேதான் நடைபெறுகிறது. இந்த உபநதிகளின் உற்பத்தி ஸ்தானங்களுக்கு அருகிலேதான் போதியர் வியாபார நிமித்தமாகத் திபெத்துக்குச் செல்லும் கணவாய்ப் பாதைகளும் அமைந்துள்ளன. மலைப் பகுதிகளில் 10,000 அல்லது 14,000 அடி உயரத்தில் உள்ள இவர்களுடைய கிராமங்கள் வருஷத்தில் பாதி நாட்களுக்கு மேல் பனி மூடியே கிடக்கும். இதனால் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப வாசஸ்தலத்தை மாற்றிக்கொள்ள வசதியாக வெவ்வேறு இடங்களில் போதியர் இரண்டு மூன்று எளிய வீடுகளைக் கூடக் கட்டிக்கொண்டிருப்பார்கள்.



குமாவான் போதியர் திபெத்தியருடன் அதிகமான தொடர்பு கொண்டிருப்பதால் இவர்களிடையே மங்கோலிய அம்சங்க

---

* **குமாவும் புலிகள்:** தமிழாக்கம் தி. ஜ. ர. தென் மொழிகள் புத்தக டிரஸ்டுக்காக கலைமகள் காரியாலயத்தின் பிரசுரம்; விலை: ரூ. 2.



பாரதத்தின் வடக்கெல்லை.

ளும் பரவிக் கிடக்கின்றன. மேற்குப் பகுதியில் திபெத்திய சொற்கள் கலந்த பஹாரி ஹிந்தியும் கிழக்குப் பகுதியில் திபெத்திய - பர்மிய மொழிக் கலவைகளின் விளைவாக உருவான பாஷைகளையும் பேசுகிறார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் தலைவனும் பஞ்சாயத்துக் குழுவினரும் உண்டு. ஓய்வு நேரங்களில் இவர்கள் ஒன்று கூடி உட்கார்ந்து தங்கள் முன்னோர்கள் அப்பகுதிகளில் குடியேறியது பற்றிய கதைகளைக் கூறி மகிழ்வார்கள். இதைக் காட்டிலும் ஆட்கொல்லிப் புலிகளைப் பற்றிய கதைகளை ஒருவரோடொருவர் பரிமாறிக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

சோனி நதியில் மீன் பிடித்து வயிற்றுப் பிழைப்பு நடத்தும் ஒரு செம்படவனைப் பற்றியும் காட்டிலாகா காவலன் ஒருவனைப் பற்றியும் தாம் கேள்விப்பட்ட கதையினை ஜிம் கார்பெட் தமது நூலில் வர்ணிக்கிறார்:

கதையின் வீர நாயகன் அந்தச் செம்படவன்தான். இருவருமாகச் சேர்ந்து நதிக்கரையோடு செல்கையில் ஒரு திருப்பத்தில் ஆட்கொல்லிப் புலியை நேருக்கு நேராகச் சந்தித்து விடுகிறார்கள். உடனே செம்படவன் என்ன செய்கிறான் தெரியுமா? காட்டிலாகா காவலனின் தோளிலிருந்து துப்பாக்கியை அவசரம் அவசரமாகப் பிடுங்கிக் கொண்டு புலிக்கு முதுகைக் காட்டியபடி எதிர்ப்பக்கம் குறிபார்த்து ஒரே ஓட்டமாகத் தலைதெறிக்க ஓடுகிறான்! காவலனும் அவனைப் பின்பற்றி அலறிப் புடைத்துக் கொண்டு ஓடுகிறான்.

"புலி உன்னைத் துரத்தி வருகிறதா என்று அறிய நீ திரும்பிப் பார்த்தாயோ?" என்று அவனை இடைமறித்து விசாரிக்கிறார் ஜிம் கார்பெட்.

வேட்டைப் பிரியரை விநோதமான ஒரு ஜந்துவைப் பார்ப்பது போல் நோக்குகிறான் காவலன். 'இப்படியும் ஒரு முட்டாள் இருப்பானா?' என்கிற எண்ணத்துடன்.

"இல்லை, சாகப்! ஆட்கொல்லிப் புலியிடமிருந்து தப்பிப் பிழைக்க ஓடுபவன் எப்படித் திரும்பிப் பார்க்க முடியும்?" என்று கேட்டு விட்டுக் கதையைத் தொடர்கிறான்.

கண் மூடித்தனமாய் முன்னால் ஓடிய செம்படவன் அடர்த்தியாகப் புல் வளர்ந்திருந்த ஓர் இடத்தில் கால் இடறி ஒரு கரடியின் மேல் விழுந்து விடுகிறான்.

அவ்வளவுதான்! பயத்தில் உளறியடித்துக் கொண்டு கரடி உள்பட, மூன்று பேருமே மூலைக்கொருவராகப் பிய்த்துக் கொண்டு ஓட்டமெடுக்கிறார்கள்!

இதைப் படிக்கும் போது நகைச்சுவை மிக்க நிகழ்ச்சியாக நமக்குத் தோன்றினாலும் குமாவானில் வாழும் மக்கள் எத்தகைய பேராபத்துக்களுக்கு அடிக்கடி உட்பட வேண்டியிருக்கிறது என்பதும் நமக்குத் தெளிவாக விளங்குகிறது.

ஆட்கொல்லிப் புலிகளாலும் மற்ற கொடிய வன விலங்குகளாலும் மக்களுக்கும், அவர்களுடைய கால்நடைகளுக்கும் விளையும் துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. இத்தனைக்கும் இடையில் குமாவான் போதியர் தைரியத்தை இழக்காமல் காலத்தை ஓட்டி வருகையில், திபெத்தைச் சீனர்கள் ஆக்கிரமித்துக் கொண்ட பிறகு தங்கள் வியாபாரம் படுத்து விட்டதை எண்ணியா மனந்தளர்ந்து விடப் போகிறார்கள்! கஷ்ட நஷ்டங்களைச் சமாளித்துப் போராடத் துணிந்த உள்ளத்துடன் புதுத் தொழில்களைக் கற்றுக் கொள்கிறார்கள். இளைஞர்களாக இருப்போர் தங்கள் சமுதாயத்தின் சமூக கலாசார வளத்தினைப் பெருக்கும் ஆர்வத்துடன் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி அறிவு பெறுகிறார்கள். இதற்கெல்லாம் பாரத அரசாங்கமும் அவர்களுக்குப் பெருமளவுக்கு உதவி செய்து வருகிறது.

குமாவான்வாழ் மக்களின் நெஞ்சுறுதியைப் பற்றிச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேணுமானால் கஸௌல் விமானக் கூடத்துக்குப் போக வேணும். அங்கே நிறுவப்பட்டுள்ள ஒரு நினைவுச் சின்னத்தைக் காண வேணும். அதில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களைப் படிக்க வேணும். அப்படிப் படித்தால், கஸௌல் விமானக் கூடத்தைக் கைப்பற்றிப் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் நோக்கத்துடன் வேகமாய் டாங்குகளுடன் முன்னேறிய சீனர்களுடன், ஒரு நாள் முழுதும் போராடிய பாரத வீரர்களை மறக்காதிருக்க எழுப்பப்பட்டுள்ள நினைவுச் சின்னம் அது என்பதைப் புரிந்து கொள்ளுவோம். சகோதரச் சிப்பாய்களும், முக்கியமான போர்த் தளவாடங்களும் விமானங்களில் ஏறிப் பத்திரமான இடத்துக்குப் போய்ச் சேரும் வரையில், சீனப் பேய்களிடமிருந்து இந்த விமான கூடத்தைக் காத்துத் தந்தது குமாவான் ரெஜிமெண்டைச் சேர்ந்த சுமார் நூறு வீரர்கள்தான். இவர்களில் ஒருவர் கூட சீனர்களுடைய இரும்புக் கோட்டைகள்-டாங்குகள் - கக்கிய அனலுக்குச் சிறிதும் அஞ்சவில்லை; உயிர் தப்பிப் பிழைத்து யாரும் மிஞ்சவுமில்லை!


கஸௌல் விமானக் கூடம் பின்னால் பாரதத் துருப்பினரால் மீட்கப்பட்டதும் மாண்ட குமாவான் வீரப் பெருங்குடி மக்களுக்கு அந்த நினைவுச் சின்னம் நிறுவப்பட்டது.



புகழ்ச்சிக்
குரிய
தலைவி
அவள்தான் வகுப்பில ஒழுங்கை நிலைநாட்டும் தலையாய மாணவி. அவள் தன்னம்பிக்கையோடு, தான் அணிந்திருக்கும் பிரகாச முடன் வெண்மையான ஆடைகளால் பெருமையும் கொண்டவள்: வெள்ளை ஆடைகளை, துவைத்தபின, ''ராபின் புளூ'' கலந்த நீரில், அவள் தாய கடைசியாக அலசுவதால், இத்தகைய பிரகாசம் ஏறபடுகிறது.
ராபின்
புளூ
Robin Ultramarine
STANDARD
QUALITY
வெள்ளைத் துணிகளை பிரகாசிக்கச் செய்கிறது



தங்கச் சிலை



உமா சந்திரன்

உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால் வரை உடல் முழுதும் கூசிக் குலைந்தது பாருவுக்கு. குனிந்த தலையை நிமிரக் கூடத் தைரியமில்லை. கால்கள் முன்னே நகர மறுப்பது போல் நடையைப் பின்னுக்கு இழுத்தன. ஆனால் அவள் நடந்து கொண்டுதான் இருந்தாள். நடக்காமல் வேறு என்ன செய்ய முடியும்? வந்த வழியே திரும்பி ஓடிவிட முடியுமா? எந்த வேளையில் வீட்டை விட்டுப் புறப்பட்டாளோ, இப்படி ஓர் இக்கட்டில் வந்து மாட்டிக் கொண்டாளே!

குறுகலான ஒற்றையடிப் பாதை அது. இருபுறமும் கல்லும் கரளையும் நெருஞ்சி முட்களுமாயிருந்த மேடு. ஒதுங்கி நிற்பதற்குக் கூட வசதி கிடையாது. இந்த மாதிரி எக்கச்சக்கமான வழியில்தானா அவன் அவள் எதிரே வர வேண்டும் ?

அவன் விழிகள் தன்னையே ஊடுருவுவது போன்ற உணர்வு அவளது உடலெல்லாம் முள்ளைப் போல் குத்தியது. இத்தனை நாட்களும் அவன் முகத்திலேயே விழிப்பதில்லை என்று வைராக்கியமாக இருந்தவன்தானே! இப்போது மட்டும் ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்? ஒவ்வோரடியாக அவன் அவளருகே நெருங்க நெருங்க உவகை ஊற்றெடுத்து நெஞ்சம் விம்முகிறது. உடலெல்லாம் புல்லரித்துச் சிலிர்க்கிறது.

இருவருக்குள்ளும் இடைவெளி மிகவும் குறைந்து விட்டது. இன்னும் இரண்டடிகூட இராது. கல்லோ முள்ளோ ஒதுங்கி நின்று தானாக வேண்டும்.

சட்டென்று அவனே முந்திக் கொண்டான். பாதையிலிருந்து விலகி ஒரு கற்பாறையின் மேல் தாவி அவன் நின்று கொண்டதும் பாருவின் பதற்றம் சற்றுக் குறைந்தது. வேகமாக அவனைத் தாண்டி இரண்டடி சென்று விட்டாள்.

''பாரு!'' — அவனது அதிகாரமும் அதட்டலும் நிறைந்த குரல் பாருவைத் திகைத்து நிற்கச் செய்தது. தயக்கத்துடன் திரும்பினாள். தோப்பிலிருந்து வெட்டி வந்திருந்த இலுப்பக் கட்டையை இடது தோளில் தாங்கிப் பிடித்துக் கொண்டு வலது கையில் கோடாரியுடன் அவன் நின்றிருந்த நிலையே பாருவின் மனத்தில் அச்சத்தைத் தோற்றுவித்தது.

''இப்படி எங்கே போறே?''

''இலுப்பையடி சத்தியம்மனுக்கு வெண்ணெய் சாத்தப் போறேன்.''

''பக்தி மிஞ்சிப் போச்சா?''

பாரு பதில் ஏதும் சொல்ல வில்லை. உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாயிருந்தாள் அவள்.

''கல்லுக்கு வெண்ணெய் சாத்தி என்ன பலனைக் காணப் போறே?''

பாருவின் கண்களில் நீர் முட்டியது. ''சக்தியம்மன் வெறும் கல் இல்லே. என்னிக்காவது அவ கண் திறந்து பார்க்கத்தான் போறா. உங்க கல் மனசைக் கரைய வைக்கத்தான் போறா!'' என்று விம்மும் குரலில் கூறிவிட்டுச் சட்டென்று திரும்பி வேகமாக நடந்து சென்று விட்டாள்.

இலுப்பையடி சக்தியம்மன் உண்மையில் ஒரு சிலையே இல்லே; உருவமற்ற கல்தான். பாதி திறந்தும் திறவாமலும் இருந்த நிலையில் அந்தக் கல்லில் செதுக்கப்பட்டிருந்த இரண்டு கண்கள்தான் அதற்கு அவ்வளவு சக்தியையும் கொடுத்திருந்தன. வெள்ளிக்கிழமை தோறும் சக்தியம்மனுக்கு வெண்ணெய் சாத்தி வேண்டிக் கொண்டால் தீராத குறைகளெல்லாம் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை அந்தப் பகுதி மக்களின் மனத்தில் ஊறிப் போயிருந்தது.

சக்தியம்மனுக்கு வெண்ணெய் சாத்தி விட்டு வலம் வந்த பாரு அந்த இடத்தை

விட்டுப் போகவே மனமில்லாமல் இலுப்பை மர நிழலில் உட்கார்ந்துகொண்டாள்.

அந்த வேளையில் அவளுக்குத் தன் தந்தையின் நினைவு வந்தது. பாரு உள்ளூரிலேயே, தம் கண்ணெதிரேயே இருக்க வேண்டும், அவள் தன் புருஷனுடன் குடும்ப வாழ்க்கை நடத்துவதைப் பார்த்துத் தாம் ஆனந்திக்க வேண்டும் என்ற ஆவலில்தான் அவளை அப்புவுக்கு மணம் செய்து வைத்தார். ஆனால் துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது? பாருவின் கலியாணத்துக்குப் பிறகு இரண்டு மாதங்கள்கூட அவள் தந்தை உயிரோடு இருக்கவில்லை. திடீரென்று தோன்றிய மாரடைப்பு அவருக்கு யமனாக முடிந்தது. எதிர்பாராமல் நேர்ந்த அந்த விபத்தின் துயரத்தில் பாருவும் அவள் தாயாரும் மூழ்கியிருந்த போதுதான் அப்பு அவளை அழைத்துப் போக வந்தான். ஆனால் அந்தச் சமயத்தில் பாரு புருஷன் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற குதூகலத்திலா இருந்தாள்? தந்தையின் திடீர் மறைவினால் ஏற்பட்ட ஏக்கம்தான் அவள் மனத்தில் மேலோங்கியிருந்தது. பாருவின் மன நிலையைத் தவறாகப் புரிந்து கொண்ட அப்பு, அழகின் அகந்தையால்தான் அவள் தன்னை அவமதித்து விட்டதாக ஆத்திரம் கொண்டான். "இவ்வளவு திமிரா உனக்கு? இன்னியிலே யிருந்து நீ யாரோ நான் யாரோன்னு நினைச்சுக்கோ. நீ இருக்கிற திசையிலே கூடத் திரும்பிப்பார்க்கப் போகிறதில்லே!" என்று கூச்சல் போட்டு விட்டுப் போய் விட்டான்.

ஏதோ கோபத்தில் கூறிய வார்த்தைகள் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால் அப்பு எவ்வளவு பிடிவாதக்காரன் என்று நாட்கள் செல்லச் செல்லத்தான் தெரிந்தது. உண்மையிலேயே அப்பு பாருவின் வீட்டுப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. பாருவின் தாயார் யார் யாரையோ அனுப்பி எப்படியெப்படியெல்லாமோ அவன் மனத்தை மாற்ற முயற்சி செய்து பார்த்தாள். ஆனால் அப்பு அணுவளவுகூட அசையவில்லை.

இலுப்பைக் கட்டையை வீட்டு வாசலில் கொண்டு வந்து போட்டுக் கோடாரியால் பிளந்து கொண்டிருந்தான் அப்பு. அவன் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. கிடுகு முடைவதற்கு ஏற்ற காய்ந்த தென்னங் கீற்றுக்களைக் கோயில் பிராகாரக் குட்டையில் ஊறப் போடுவதற்காகத் தலையில் எடுத்துச் சென்று கொண்டிருந்த கிட்டன் அப்பு செய்து கொண்டிருந்த வேலையைப் பார்த்ததும் அவனருகே வந்து தென்னங் கீற்றுக்களை ஒரு பக்கமாகப் போட்டு விட்டு நின்றான். இடுப்பில் செருகியிருந்த பொடி மட்டையை எடுத்து ஒரு சிட்டிகைப் பொடியை உறிஞ்சி விட்டுக் கூறினான்:

"அப்பு, கோடாரியை என் கையிலே குடுத்திட்டுச் சித்தே நிழல்லே உக்காந்துக்கோ. குறையும் நான் பிளந்து குடுக்கறேன்."

அப்பு மறுத்துச் சொல்லவில்லை. கோடாரியைக் கிட்டன் கையில் கொடுத்து விட்டுப் பொடி மட்டையை அவன் கையிலிருந்து வாங்கிக் கொண்டு திண்ணைக் குறட்டில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"தோப்புக்குப் போகப் போறேன்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நானும் வந்திருப்பேனே!" என்றான் கிட்டன்.

"வீட்டிலே விறகு தீர்ந்து போச்சுன்னு காலையிலே தான் தெரிஞ்சது. உடனே கோடாரியோடே கிளம்பிட்டேன்" என்று கூறிக் கொண்டே கிட்டனின் பொடி மட்டையைப் பிரித்தான் அப்பு.

மூக்கிலேறிய பொடியின் காரத்தை ரசித்தவாறு, "ஏண்டா, கிட்டா! உங்க வீட்டுச் செவலைப் பசு பாலா கறக்காம வெண்ணெயாகவே கறந்திடறதோ?" என்று கேட்டான் அப்பு.

"என்ன கிண்டல் செய்யறே அப்பு?"

"அப்படியில்லேன்னா உன் தங்கை சக்தியம்மனுக்கு வெண்ணெய் சாத்தப் போயிருப்பாளா?"

"பாரு அங்கேயா போயிருக்கா?"

"நல்ல அண்ணன் நீ! இது கூடத் தெரியாமல் இருக்கியே!" என்று சிரித்தான் அப்பு.

கிட்டன் சிரிக்கவில்லை. கோடாரியை ஓங்கி ஓங்கிப் போட்டு இலுப்பைக் கட்டையைப் பிளந்து தள்ள ஆரம்பித்தான்.

பாரு வீட்டுக்குத் திரும்பி வந்தபோது தாயார் முற்றத்தில் துவரையைக் கொட்டிப் பரத்திக் காய வைத்துக் கொண்டிருந்தாள். பாருவும் அவளருகே குனிந்து துவரையைப் பரத்தத் தொடங்கினாள்.

"வெண்ணெய் சாத்தி விட்டு வந்தாயா, பாரு?"

"உம்!"

"சக்தியம்மன் என்னிக்குத்தான் கண் திறக்கப் போகிறாளோ?" என்று பெருமூச்செறிந்தாள் தாயார்.

"என் பிரார்த்தனையை நான் செலுத்திண்டிருக்கேன். அவ கண் திறக்கற போது திறக்கட்டும்" என்றாள் பாரு.

சற்றுப் பொறுத்துக் கூறினாள்: "வழியிலே அவரைப் பார்த்தேம்மா!"

தாயார் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். "எவ்வளவு சாவதானமாச் சொல்றே பாரு! அவன் உன்னைப் பார்க்கவில்லையா?"

"பார்த்தார். ஒரு கேள்வியும் கேட்டார்."

"என்ன கேள்வி?"

"கல்லுக்கு வெண்ணெய் சாத்தி என்ன பலனைக் காணப் போறேன்னு!"

"துரோகி! அப்படியா கேட்டான்? தங்கச் சிலை மாதிரி உன்னை வாழாவெட்டின்னு ஊர் சிரிக்க வச்சிருக்கிறது போறாதா?" என்று சீறினாள் தாயார்.

பாருவின் கண்களைப் பனித்திரை மறைத்தது. கண்ணீர்த் துளிகள் துவரையை நனைத்து விடுமென்று பயந்தாளோ, என்னவோ! தாழ்வாரத்துக்குச் சென்று மரத் தூணில் சாய்ந்தவாறு அவள் உட்கார்ந்து கொண்டாள்.

அவளுடைய சோர்ந்த தோற்றம் தாயாரது நெஞ்சை அழுத்தியது. அவளும் அவசரம் அவசரமாகத் துவரையை உலர்த்தும் வேலையை முடித்துக் கொண்டு பாருவின் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அதே சமயம் வாசலில் கிட்டனின் குரல் கேட்டது.

''சீக்கிரம் இலையைப் போடம்மா. பசி வயித்தைக் கிள்ளறது!'' என்று ஆர்ப்பாட்டமாகக் கூறிக் கொண்டே உள்ளே வந்த கிட்டன், சமையலறையை அடுத்த கூடத்தில் ஒரு பக்கமாகத் தடாலென்று உட்கார்ந்தான். மறு பேச்சில்லாமல் அவசர அவசரமாக அவனுக்கு இலையைக் கொண்டு வந்து போட்டுப் பரிமாறினாள் தாயார்.

சாதத்தையும் குழம்பையும் கலந்து ஒரு பிடி எடுத்துச் சாப்பிடப் போன கிட்டன், ''ஏம்மா, நெய் இல்லேயா?'' என்று கோபத்துடன் கத்தினான்.

''நெய் தீர்ந்து போச்சு கிட்டா. நாளைக்கு வெண்ணெய் எடுத்துக் காய்ச்சி வைச்சிடறேன்'' என்றாள் தாயார்.

''இருந்த வெண்ணெயெல்லாம் எங்கேயோ கன்னிலே கொண்டு போய் அப்பச் சொல்லிட்டுச் சாப்பாட்டுக்கு நெய்யில்லேன்னு சொல்ல வெட்கமாயில்லேயா உனக்கு?'' என்று கூச்சல் போட்டான் கிட்டன்.

'' என்னடா நாக்கிலே நரம்பில்லாமல் பேசறே? உனக்கு யாரு சொன்னது இந்தக் கதையெல்லாம்?''

''வேறே யாரு சொல்லணும்? அப்புவே நேரிலே பார்த்ததைத்தான் என்னிடம் சொன்னான். உனக்குத் தகவல் இல்லாமேதான் ஒண்ணொண்ணும் உன் வீட்டிலே நடக்கிறதான்னு அவன் கேட்ட போது எனக்கு எவ்வளவு அவமானமா யிருந்தது தெரியுமா?''

''அதுதான் உனக்கு அவமானமா யிருந்ததாக்கும்! அந்தத் துரோகி உன்னோட தங்கையைத் தள்ளி வைக்கத் தவிக்க வைச்சிருக்கானே என்கிற உணர்ச்சி கொஞ்சங்கூட இல்லாமல் அவன்கூட உறவு கொண்டாடிண்டு ஊர் சுத்தறியே, அது உனக்கு அவமானமா யில்லேயா?'' அம்மாவின் ஆத்திரம் கத்தலாக வெளிவந்தது.

''ஏம்மா, கத்தறே? அப்பு பாருவுக்குப் புருஷங்கற உறவு ரெண்டு வருஷமாத்தானே? எங்க சிநேகம் எங்களுக்கு நினைவு தெரிஞ்ச நாளையிலேயிருந்து ஏற்பட்டது, தெரியுமா?''

''தங்கைகிட்டே பாசம் கொஞ்சமாவது இருந்தால் இப்படிப் பேசுவியா ?''

'' அதுக்காக உயிருக்குயிராய்ப் பழகின சிநேகிதனை ஒதுக்கி வைக்கச் சொல்றயா ? அது ஒரு நாளும் நடக்காது!'' என்று கூச்சல் போட்ட கிட்டன் சாப்பிடாமலே எழுந்து சென்று விட்டான்.

கோயிற் பிராகாரக் குட்டையில் ஊற வைத்திருந்த தென்னங் கீற்றுக்களை எடுத்துக் கிடுகு முடைவதற்காகக் கிட்டன் அங்கே சென்ற போது அப்பு ஏற்கனவே அந்த வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டான். கீற்றுக்களில் பாதிக்கு மேல் முடைந்து வைத்திருந்தான் அப்பு.

''நீ எப்போ வந்தே இங்கே?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு குத்துக்கல்லின் மேல் சோர்வோடு உட்கார்ந்தான் கிட்டன். அவன் சாப்பிடவில்லை என்பதை அவன் வயிறு பறைசாற்றிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட அப்பு கிட்டனைக் கரகரவென்று தன் வீட்டை நோக்கி இழுத்துச் சென்றான்.



நீதிபதி: இந்த மாதிரி சின்னத் தகராறுகளை யெல்லாம் கோர்ட்டுக்கு வெளியிலேயே தீர்த்துக்கொள்ளுவது தான் நல்லது.

கைதிகளில் ஒருவன்: அப்படி எங்களுக்குள் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளப் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருந்த போதுதான் போலீஸ்காரங்க எங்களைப் பிடித்துக் கொண்டு வந்தாங்க எசமான்!

அப்புவின் அத்தை தாழ்வாரத்தில் கவ ரோரமாக ஒருக்களித்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அப்பு அவளை லட்சியமே செய்யவில்லை. கிட்டனை நேரே சமையலறைக்குள் இழுத்துச் சென்று உட்கார வைத்தான். ராத்திரிக்காகச் சாதத்தில் தண்ணீர் ஊற்றி வைத்து, மிஞ்சியிருந்த குழம்பில் கீரையைக் கலந்து வைத்திருந்தாள் அத்தை. தட்டில் குத்து குத்தாகச் சாதத்தை அள்ளிப்போட்டுக் கீரைக் குழம்பை அதன் தலையில் ஊற்றிக் கிட்டனுக்கு முன்னே கொண்டு வந்து வைத்தான் அப்பு.

''சாப்பிடு. ஒரு பருக்கை மிச்சம் வைச்சே, தொலைச்சிடுவேன், தொலைச்சு!'' என்று கூறிக் கொண்டே அவன் எதிரே அமர்ந்தான் அப்பு.

சமையலறையிலிருந்து வந்த பேச்சுக்குரல்களைக் கேட்டு அத்தை தூக்கம் கலைந்து எழுந்து வந்தாள். கிட்டன் சாப்பிட்டு முடிக்கும் தறுவாயில் இருந்தான். ''இன்னும் கொஞ்சம் மோர் சாதம், ஊறுகாயோட சாப்பிடு!'' என்று உபசரித்துக் கொண்டிருந்தான் அப்பு.

''பெண்டாட்டியைத் தள்ளி வைச்சிட்டு மச்சினன்கூடச் சீராட்டுறானும்! வெக்கமாத்தான் இல்லேயே!'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு அங்கிருந்து சென்றாள் அத்தை.

''பார்த்தாயா கிட்டா ? உனக்கொரு அம்மான்னா எனக்கொரு அத்தை!'' என்று சிரித்தான் அப்பு.

கிட்டன் சில கணங்கள் மௌனமாயிருந்தான். பின்பு கூறினான்: ''அப்பு, இத்தனை நாளும் உன்னை ஒரு கேள்வி கேக்கலே. இப்போ கேட்கலாமா ?''

''என்ன?''

''பாருவை நீ ஏன் அழைச்சுக்க மாட்டேங்கிறே?'' என்று கேட்டான் கிட்டன்.

''உங்க பாரு, சாதாரண அழகியில்லேடா! தங்கச் சிலே! ஒரு ராஜகுமாரனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவள்! நான் ஒரு காட்டாளி தானே? எனக்கும் அவளுக்கும் எப்படிப் பொருந்தும்?'' என்று படபடப்பாகக் கூறிய அப்பு வேறு எங்கோ பார்க்க ஆரம்பித்தான்.

ஆடிப் பெருக்கு. ஆற்றில் புதுப் புனல் அலே மோதிச் சுழித்து நுரைத்துப் பூரிப்புடன் ஓடிக் கொண்டிருந்தது. இலுப்பைத்தோப்பை ஒட்டினாற்போல் இருந்த கரையில் நின்று ஆற்று வெள்ளத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் பாரு. இன்பகரமான எத்தனையோ நினைவுகளின் ஏக்கத்தை அவள் மனத்தில் பரப்பியது அந்தக் காட்சி. அவள் சிறு பெண்ணாயிருந்த போது ஆடிப் பெருக்கு கொண்டாடியது நினைவுக்கு வந்தது.

கரையோரமாகப் பக்கத்தில் எங்கிருந்தோ எழுந்த சலசலப்பு அவள் கவனத்தைக் கவர்ந்தது. ஆற்று வெள்ளம் அடித்து வந்த மருதங்காய்களும் சருகு சத்தைகளும் அங்கங்கே கரையோரமாக ஒதுக்கப்பட்டிருந்தன. அவைகளை அரித்துச் சேர்த்துக் கொண்டு நீந்தியவாறே ஓர் உருவம் அவள் இருக்கும் திசையை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஒரே பார்வையில் அது யார் என்பதைப் புரிந்து கொண்ட பாரு அப்படியே அசையாது நின்று விட்டாள்!

''இங்கே ஏன் நிக்கறே? ஆடிப்பெருக்கு கொண்டாடப் போகலேயா?'' என்று கேட்டான், தலேயிலிருந்து முகத்தில் வழிந்த தண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டவாறு.

''அதுக்கெல்லாம் நான் கொடுத்து வைச்சிருக்க வேண்டாமா?'' என்றாள் பாரு.

''கொடுத்து வைக்காமலா அகம்பாவத்திலே மிதக்கிறே ?''

''எதைப் பத்தி நான் அகம்பாவப்படணும் ?''

''ஏன்! உன்னேவிட அழகி இந்த உலகத்திலேயே கிடையாதுங்கற அகம்பாவம்தானே உனக்கு ?''

''நீங்க நினேக்கிறது தப்பு.... தப்பு! சக்தியம்மன் மேலே ஆணேயாச் சொல்றேன், உங்களுக்குப் பிடிக்காத அழகு ... உங்க வெறுப்புக்குக் காரணமான அழகு எனக்கு வேண்டவே வேண்டாம்!'' —பாருவின் குரலில் விம்மல் வெடித்து வந்தது.

''ஆஹஹஹஹ! இந்தப் பசப்பு வார்த்தைக்கெல்லாம் ஏமாறுகிறவன் இந்த அப்பு இல்லே!''

''நீங்க என்னேப் புரிஞ்சுக்கலே....''

''புரிஞ்சிக்க வேண்டிய அவசியமில்லே!''

''அப்படிச் சொல்லாதீங்கோ.... அப்படிச் சொல்லாதீங்கோ!'' என்று அலற ஆரம்பித்த பாருவின் முகம் திடீரென்று பேயறைந்தாற்போல் மாறியது. கண்கள் கற்சிலேயின் கண்கள் போல் இமைக்காமல் நின்றுவிட்டன.

''அப்படியே நில்லுங்கோ. அசையாமல் நில்லுங்கோ!'' என்று தணிந்த குரலில் எச்சரித்தவாறே அப்புவின் அருகே நெருங்கினள் பாரு. அசைவில்லாத அவன் விழிகள் ஒரே ஒரு பொருளேத்தான் பார்த்துக் கொண்டிருந்தன. அப்புவின் கழுத்துக்கு நேரே தலே தூக்கி நிற்கிறது கருநாகம்! கோணிப்பைக்குள் எப்போது புகுந்ததோ! இப்போது வந்து எந்தக் கணத்திலும் அப்புவின் உயிரைக் குடிக்கத் தயாராக நிற்கிறது. அப்பு சிறிது அசைந்தாலும் அதன் நச்சுப் பல் அவன் உடலில் பதிந்து விடும்!

''பாரு! உனக்கென்ன சக்தியம்மன் ஆவேசம் வந்திடுத்தா பாரு?'' பீதி நிறைந்த குரலில் கேட்டவாறே பின்வாங்கினன் அப்பு.

பாருவின் கை சட்டென்று முன்னே பாய்ந்தது. கருநாகத்தின் சீற்றம் முழுதும் அவள் கையில் பாய்ந்தது. அப்படியே அதன் தலேயைப் பிடித்து அப்பாலெறிந்த பாரு மறு கணமே நிலே தள்ளாடிக் கீழே சாய்ந்தாள்.

கண நேரத்தில் விஷயத்தைப் புரிந்து கொண்டான் அப்பு. ''பாரு! பாரு!'' என்று அலறியவாறே அவள் அருகே மண்டியிட்டு உட்கார்ந்த அவன் துவண்டு கிடந்த அவள் கையைத் தன் கையில் எடுத்து, நாகத்தின் நச்சுப் பற்கள் பதிந்திருந்த இடத்தில் வாயை வைத்து விஷம் கலந்த ரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சித் துப்பினன்.

''அப்பு! பாருவுக்கு என்ன? என்ன நடந்தது?'' என்று கேட்டுக் கொண்டே பதற்றத்துடன் அங்கு ஓடி வந்தான் கிட்டன்.

''பேச நேரமில்லே கிட்டா. உன் மேல் துண்டை யெடுத்துப் பாரு கையிலே வறிஞ்சு கட்டு!'' என்று கூறிய அப்பு மீண்டும் கடிவாயிலிருந்து விஷத்தை உறிஞ்சித் துப்ப ஆரம்பித்தான்.

சற்று நேரத்துக் கெல்லாம் பாருவின் பிரக்ஞையற்ற உடலேத் தூக்கிக் கொண்டு அப்புவும் கிட்டனும் வீட்டுக்குள்ளே சென்ற போது தெருவே திரண்டு வந்து பார்த்தது.

''ஐயோ, பாரு! இந்தக் கோலத்திலே தான் நீ புருஷன் வீட்டுக்கு வரணும்னு இருந்தியா?'' என்று அலறினள் அத்தை.

பாரு பிழைத்தெழுந்து விட்டாள். அப்புவின் முதல் சிகிச்சை அவள் உயிரைக் காப்பாற்றி விட்டது. ஆனல்.... ஆனல்.... தங்கச் சிலேயாயிருந்த பாரு தேய்க்காத தாமிரச் சிலேயாக மாறி விட்டாளே! கருநாகத்தின் விஷம் அவள் உயிரைக் குடித்துவிடவில்லே; ஆனல் அழகைக் குடித்து அவளே ஒரேயடியாக உருமாற்றிவிட்டது.

''பாரு.... பாரு... உன்னே இந்தக் கோலத்துக்கு ஆளாக்கி வைச்சிட்டேனே, பாரு!'' என்று அழுதான் அப்பு.

''நீங்க ஏன், அழணும்! உங்களுக்குப் பிடிக்காத அழகு.... உங்க வெறுப்புக்குக் காரணமாக இருந்த அழகு எனக்கு வேண்டவே வேண்டாம்னு நான் சொல்லலேயா?''

''சக்தியம்மன் மேலே ஏன் ஆணேயிட்டுச் சொன்னே பாரு? நாகத்தை ஏவிவிட்டு உன் அழகைப் பறிச்சிண்டு போயிட்டாளே!''

''இல்லே.... என்னே உங்ககிட்டே சேர்த்து வைக்கிறதுக்காகத்தான் சக்தி அம்மன் நாகத்தை அனுப்பி வைச்சா!''

''உன் அருமை அறியாத பாவி நான்! எனக்காக.... என் உயிரைக் காப்பதற்காக, உன் அழகையே பலி கொடுத்திட்டயே பாரு!'' என்று விம்மினன் அப்பு.

''அழகு போனல் என்ன அத்தான்? உங்க அன்பு கிடைச்சுதே, அது ஒன்றே போதும் எனக்கு!'' என்றாள் பாரு அமைதியாக.

பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் பதினேழு

மகேந்திரமங்கலத்தில்?

விழுது விட்டு விரிந்திருந்த நடுச்சாம இரவின் இருட் செறிவை அதிரடித்துக் கிழித்துக்கொண்டு விரைந்து சென்ற 'அதிசயம்', சேணக் கயிற்றின் திடீர் இறுக்கலால் திமிறலிட்டுக் கனைத்தவாறு நின்றது.

நெற்றியில் வழிந்த வியர்வையை வழித்து விட்டுக்கொண்டு நிமிர்ந்த பரமேசுவரவர்மன் சுற்றிலும் தன் பார்வையை ஓட்டிப் பார்த்தான். காஞ்சிக்குத் தெற்கே இரண்டு குரோசத் தொலைவுக்கப்பால் குரங்கணின்முட்டம் என்னும் ஊரைக் கடந்து மாமண்டூர் என்ற ஊரின் பிறிதொரு பகுதியான மகேந்திரமங்கலத்தை நெருங்கி வந்திருப்பது தெரிந்தது. இவ்வூர்களுக்கிடையே மேற்கிலும் தெற்கிலுமாக அமைந்த தூசி, நரசபுரம், முதலான சிற்றூர்கள் இருப்பதும் புலனாயின. மகேந்திர மங்கலத்துக்குச் செல்லும் சாலையைவிட்டுப்பெருவளநல்லூருக்குப் போகும் நேர்ச் சாலையில் தன் குதிரையைத் திருப்பிச் செலுத்தினான் அவன். களைப்படைந்தகுதிரை முன் போல் நாலுகால் பாய்ச்சலிடாமல் பெருநடையிட்டுச் செல்ல ஆரம்பித்தது.

மாமண்டூர் எல்லையில் சித்திரமேகத் தடாகம் என்பதாக ஓர் ஏரி இருந்தது. அந்த ஏரிக் கரையில் உள்ள பாறைக் குன்றில் மகேந்திர வர்மனால் உருவாக்கப் பெற்ற அழகிய இரு குகைக் கோயில்கள் இருந்தன. ஒன்று திருமால் கோயில்; மற்றொன்று சிவபெருமானுக்கு உரியது. அவ்விரு கோயில்களின் பக்கமாகச் சித்திரமேகத் தடாகத்தின் கிழண்டைக் கரையைச் சுற்றிக்கொண்டுதான் அந்த நெடுஞ்சாலை செல்ல வேண்டும்.

சாலையின் வளைவை அடைந்து தடாகக் கரையோரம் சென்றுகொண்டிருந்த குதிரை ஏனோ மிரட்சியுற்று நின்று அங்குமிங்குமாகத் திரும்பி முரண்டு செய்தது. சிந்தனையில் ஆழ்ந்த வளையப் பழக்கப் போக்கில் புரவியைச் செலுத்தி வந்த பரமேசுவரவர்மன் விழிப்படைந்து நிமிர்ந்து நோக்கினான்.

சித்திரமேகத் தடாகக் கரையில் அமைந்த குகைக் கோயில்களுக்கு எதிரே நூற்றுக் கணக்கான தீப்பந்தங்கள் எரிவதும், அவ்வொளி வெள்ளத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் குழுமியிருப்பதும் புலப்பட்டன. அந்தக் காட்சியைக் கண்டுதான் குதிரை மேலே செல்லாமல் மிரண்டு முரண்டி நின்றது.

'இந்த நடுச்சாம நள்ளிரவு நேரத்தில் அங்கே மக்கள் வந்து குழுமியிருக்கக் காரணம் என்ன?'



ஜெகசிற்பியன்

பல்லவ நாட்டின் மாபெரும் யானைப் படையும் குதிரைப் படையும் மாமண்டூரில்தான் வைக்கப்பட்டிருந்தன. தூசி என்னும் ஊரில் பல்லவ தூசிப் படை இருந்தது. அதனாலேயே அவ்வூர்களுக்கு மா (குதிரை, யானை) மண்டூர்,

தூசி என்னும் பெயர்கள் வழங்கலாயின. மேலும், பல்லவ சளுக்கியப் போரில் பரமேசுவரவர்மனுக்கு மகத்தான வெற்றியைத் தேடித் தந்த ஆந்திரப் படை வீரர்களில் பெரும்பாலோர் போர் முடிந்ததும் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போய்விட, சிலர் மட்டும் அவ்வாறு போகாமல் பல்லவ அரசாங்கத்தின் அநுமதியோடு இந்த மாமண்டூர், தூசி முதலான ஊர்களில் வந்து குடியேறித் தங்கள் தாய் மொழியான தெலுங்குடன் தமிழையும், தமிழ்க் கலை, கலாசாரப் பண்பாடுகளையும் தமதாக்கிக்கொண்டு தமிழர்களோடு தமிழர்களாகக் கலந்து வாழத் தலைப்பட்டு விட்டிருந்தார்கள். தமது நாட்டின் இளவரசியான உத்தமசீலி பல்லவ நாட்டின் பேரரசியாக ஆகப் போகிறாள் என்ற உரிமையுணர்வே அவர்களை அப்படி இங்கே தங்கி வாழ வைத்து விட்டது.

எனவே, அவர்களெல்லாம் சேர்ந்த அவ்வூர்களின் குடிமக்கள் ஒன்று கூடி, பல்லவ நாடு பெற்ற மாபெரும் வெற்றியில் தமக்கு அதிகம் பங்கு உண்டு என்ற பெருமையைக் காட்டிக் கொள்வதற்காகத் தனிப்பட்ட முறையிலே வெற்றிக் கொண்டாட்டக் கேளிக்கைகள் நடத்துகிறார்களோ என்று எண்ணினான் பரமேசுவரவர்மன். அப்





படியில்லையென்றால், அங்குள்ள குகைக் கோயில்களில் ஏதாவது ஒன்றின் திருவிழா வைபவம் நடைபெறலாம் என்றும் அவனுக்குத் தோன்றியது.

இந்நிலையில் தான் அப்பக்கம் போவது உசிதமாக இராதே என்ற யோசனையுடன் ஒருகணம் தயங்கி நின்ற அவன், வேறு திசையில் திரும்பிச் செல்ல வழியேதும் புலப்படாததால், தன் குதிரையைச் சாலையோரமாக மெள்ள நடத்திக் கொண்டு மேலே சென்றான்.

சற்றுத் தூரம் சென்ற பிறகுதான் தன் ஊகங்கள் முற்றிலும் தவறு என்பது அவனுக்குப் புலனாகியது. ஆமாம்; அங்கே எவ்வித கேளிக்கைக் களியாட்டங்களோ, திருவிழா வைபவமோ நடைபெறவில்லை. ஆண்களும் பெண்களுமாக ஆயிரக்கணக்கில் குழுமியிருந்த அந்தப் பெருங் கூட்டத்தினிடையே ஆழ்ந்த அமைதி நிலவிக் கிடக்க, அவர்கள் அனைவரும் ஒரே திசையில் திரும்பி நின்று, யாரோ ஒரு தனி மனிதனின் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நள்ளிரவின் அடர்த்தியான நிசப்தத்தில் அந்த மனிதனின் கோபாவேசப் பேச்சுக் குரல், பாறைக் குன்றிலும் ஏரிக் கரையிலுமாக மோதிச் சிம்ம கர்ஜனை போல் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

தன்னை மீறிய வியப்பால் திகைத்து நின்ற பரமேசுவரவர்மன் தன் குதிரையைச் சாலையோரமிருந்த ஒரு மரத்தடியில் நிறுத்தி விட்டுப் புதர்களுக்கிடையே மறைந்து சித்திரமேகத் தடாகத்தை நோக்கி விரைந்தான்.

ஐந்தாறு தினங்களுக்கு முன் பெய்த பெரு மழையால் அந்த ஏரி, கரை மட்டத்துக்கு நீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கருநீலப் பாய் விரித்தாற்போல் பரந்திருந்த ஏரியின் கரையோரம் சிற்றலைகள் வீங்கிச் சுருண்டு வெண்ணுரைசலை வாரி இறைத்துக் கொண்டிருப்பது அந்தக் காரிருள் சாமத்திலும் பளிச்செனப் புலனாகியது. நாலா புறமும் திறந்து விடப்பட்டிருந்த மதகுகளில் 'ஹோ'வென்ற இரைச்சலுடன் நீர் பாய்ந்து கொண்டிருந்தது.

அவசரப் பரபரப்புடன் ஏரிக் கரை மேட்டில் ஏறி நின்ற பரமேசுவரவர்மனுக்கு இந்த இரைச்சலால் அந்த மனிதனின் ஆவேசப் பேச்சைச் செவிமடுத்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் யார் என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. சுற்று முற்றும் பார்த்தவாறு வந்த வழியே மீண்டும் இறங்கி ஓடிப் பாறைக் குன்றின் அடிவாரத்தை அடைந்து, அங்கிருந்து மெல்ல மெல்ல ஊர்ந்து போய் வலப்புறமிருந்த குகைக் கோயிலின் பக்கவாட்டில் ஒடுங்கி நின்றுகொண்டு, புறங் கைகளைப் பாறைமேல் ஊன்றி நிமிர்ந்து தலையைத் தூக்கி எட்டிப் பார்த்தான்.

ஆட்டு மந்தைபோல் குழுமி நின்ற ஜனக் கூட்டத்தின் முன் வரிசையில், மாமண்டூர், மகேந்திரமங்கலம், தூசி, நரசபுரம், குரங்கனின்முட்டம் முதலான ஊர்களின் உள்படு கருமத் தலைவர்கள், வரிகூறு செய்வார், வரித் தண்டல் அதிகாரிகள், அதிகரணம்—தருமாசனம் எனப்படும் அறங்கூர் அவையத்துத் தலைவர்களான அதிகரண போஷகர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்களான ஆளுங்கணத்தார், ஊரவைப் பெருமக்கள், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட பல துறை வாரியங்கள், கோயில் நிர்வாகிகளான அமிர்த கணத்தார், ஆவணக்களரிகளின் தலைவர்கள், ஆதுல சாலைகளின் காப்பாளர்கள், மாணிக்கப் பண்டாரம் — பஞ்ச பண்டாரம் முதலானவற்றின் கொடுக்கப் பிள்ளைகள், வடமொழிப் பண்டிதர்கள், கல்விக் கூட ஆசான்மார்கள், பட்டயங்கள் எழுதும் காரணிகர்கள் ஆகியோர் அமர்ந்திருக்க, அவர்கள் எதிரே—அவ்விரு குடைவரைக் கோயில்களின் இடையில் கிடந்த ஒரு சிறு பாறைமேல் ஏறி நின்றிருந்த — ஆஜானுபாகுவான வாலிபன் ஒருவன் கைகளை அப்படியும் இப்படியுமாக வீசி ஆட்டியவாறு உணர்ச்சிக் கனல் பறக்க உரத்த குரலில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஜனக்கூட்டத்தின் பக்கம் அவன் திரும்பி நின்றிருந்ததால் அவனுடைய முகத்தைப் பரமேசுவரவர்மனால் பார்க்கமுடியவில்லை. ஆனால் பேச்சுக் குரல் மட்டும் தெளிவாகக் கேட்டது.

''.....ஆகையால், பெருமக்களே! குடிமக்களே! நாம் அரசியல் விடுதலை தான் அடைந்திருக்கிறோமே தவிர நமது ஆன்மீக வாழ்க்கைக்கு ஏற்பட்ட ஆபத்திலிருந்து இன்னமும் மீளாமல்தான் இருந்து வருகிறோம். அந்த ஆபத்து நம்மை அடியோடு அழித்துவிடக் கூடியது. அதை நீங்கள் உணர வேண்டும். பொக்கிஷத்தின் தாழக்கோலைத் திருடனிடம் ஒப்படைக்கக் கூடாது. களஞ்சியத்தில் எலியைக் குடியேற்றி வைக்கக் கூடாது. அப்படிச் செய்தால் பொக்கிஷம் பறிபோய் விடும்; களஞ்சியம் சூறையாடப்பட்டு விடும். ராஜபக்தி, தேச பக்தி என்ற பெயரால் நமது சமய பக்தியை இழக்க ஒருபோதும் சம்மதிக்கலாகாது. கண்ணை விற்று ஓவியம் வாங்கிப் பயனில்லை. அந்த அநியாய ஏற்பாட்டுக்கு உடன்படுவோமானால் நம்

ஆத்மாவின் கண்ணை நிரந்தரமாக இழந்து விடுவோம். அதனால் இன்று கிடைத்திருக்கும் அரசியல் சுதந்திரத்தையும் பறிகொடுத்து விடுவோம். எனவேதான் அந்த ஏற்பாட்டை நம் உடலில் உயிர் உள்ள வரையில் எதிர்க்க வேண்டும் என்றேன். பழம் பெருமை வாய்ந்த பல்லவ நாட்டின் அகப்புற நலன்களுக்காக நாம் இந்தக் காரியத்தைச் செய்தே ஆகவேண்டும். இதில் தேசத் துரோகமோ, இராஜத் துவேஷமோ எதுவும் இல்லை. அவற்றின் எதிர்கால நன்மைக்காகவே நாம் இந்தப் புனிதமான எதிர்ப்பைக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.....''

இந்நேரம் வரை எழுதி வைத்த சித்திரங்களாக நின்றிருந்த ஜனக் கூட்டத்தினிடையே திடீரென்று கலகலப்பு ஏற்பட்டது. ''உண்மை! உண்மை! உயிரைக் கொடுத்தேனும் எதிர்ப்போம்! தலையைக் கொடுத்தாவது அத்திட்டத்தைத் தகர்ப்போம்!'' என்ற கோஷம் கூட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து குபீரெனக் கிளம்பி ஒலித்தது. உடனே மற்றொரு பகுதியிலிருந்து, ''அநியாயப் பேச்சு! அதர்மத் தூண்டுதல்! இதை நாங்கள் ஏற்க மாட்டோம்! விடுதலைப் போரில் கலந்து கொள்ளாமல் ஒடி ஒளிந்த கோழைகளின் பேச்சைக் கேட்க மாட்டோம்!'' என்ற ஆவேச எதிர்ப்புக் குரல்கள் புறப்பட்டன. அத்துடன், ''பல்லவ மக்களின் மானம் காத்த பரமேசுவரவர்மர் வாழ்க! அவருக்குப் பக்கபலமாக நின்ற ஆந்திர இளவரசி உத்தமசீலி வாழ்க, வாழ்க !'' என்ற கோஷமும் குமுறிக் கொண்டு எழுந்தது.

''அவர்களை வெட்டுங்கள்! குத்துங்கள் !''

''அவர்களை நொறுக்குங்கள்! புதையுங்கள் !''

ஜனக் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு இரண்டாகப் பிரிந்து ஒன்றையொன்று நோக்கிப் பாய்ந்தன. ஒரே கூச்சல், குழப்பம், கூக்குரல். இரு பகுதியிலிருந்தும் தீப்பந்தங்கள் வீசப்பட்டன. கம்புகள் சுழன்று பறந்தன. ஜனங்கள் தலை விரிகோலமாகச் சிதறிக் கலைந்து ஓடினர்.

பாறை மேல் பதை பதைத்து நின்ற வாலிபனைக் கீழேயிருந்து எழுந்த ஒரு மனிதர் வெடுக்கெனப் பிடித்து இழுத்துக்கொண்டு குகைக் கோயிலின் பக்கவாட்டை நோக்கி விரைந்து சென்றார். அங்கேதான் பரமேசுவரவர்மனும் இருளில் மறைந்து நின்றுகொண்டிருந்தான்.

சந்தேகமில்லை; இந்நேரம் வரை அங்கே பேசியவன் பல்லவ இளவரசனுன



''நான் உன்னோடு 'பிரைவேட்டா' பேசலாம்னு என் கணவர் 'பப்ளிக்' போனில் பப்ளிக்காத்தான் பேசணும், 'பிரைவேட்டா' பேசப்படாதுன்னு என்னை இருக்கிறார். நான் என்னடியம்மா செய்யறது?''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

கோவிந்தவர்மன்தான்! அவனுக்குப் பின்னால் நின்றிருந்து அவனை இழுத்துக்கொண்டு வந்தவரோ பழையாறைச் சோழர்!

''என்ன ஐயா? நீங்கள் சொல்லிக் கொடுத்த படியேதான் பேசினேன் ; எதிர்பாராத விதமாகக் குழப்பம் ஏற்பட்டு விட்டதே!''

''கவலைப்படாதீர்கள், இளவரசே! நமக்கு வேண்டியது அதுதான்!''

''நம்முடைய கருத்தை மக்கள் ஒப்புக் கொள்ள வேண்டாமா?''


''அது தேவை இல்லை; சிலர் ஏற்க வேண்டும், சிலர் எதிர்க்க வேண்டும். அப்போதுதான் நமது இலட்சியம் ஈடேறும்.''

''அதாவது?....''

''ஒன்றுபட்ட எதிர்ப்போ, ஒன்றுபட்ட ஆதரவோ பயனற்றது. எதிர்ப்பும் ஆதரவும் இரண்டாகப் பிரிந்து ஒன்றுடன் ஒன்று மூட்டி மோதிக்கொண்டு குழப்பம் விளைவிக்க வேண்டும். குழப்ப நிலைதான் யாரையும் எதையும் அச்சுறுத்திப் பணிய வைக்கும். சரி; இனி நாம் இங்கிருப்பது ஆபத்து. அடுத்த ஊர்களுக்குப் போய் நமது பணியைத் தொடர்வோம். வாருங்கள்.''

பழையாறைச் சோழரும், கோவிந்தவர்மனும் அங்கிருந்து புறப்படத் திரும்பியபோது அவர்களை நோக்கி ஒருவன் தலைதெறிக்க ஓடி வந்தான்.

விஷ வெட்டுக் காயங்கள்



ஜாம்-பெக் உதவியினுல் சீக்கிரம் குணமடைகின்றன

வெட்டுகள், சிராய்ப்பு, மற்றும் பூச்சிக் கடிகளிலிருந்து, குணமடையுங்கள்... கட்டுச்சிரங்கு, கொப்பளங்கள் மற்றும் விஷக் காயங்கள், பொடுகு சொறிகள் இவைகளை அகற்றுங்கள். எவ்வித சரும உபாதைகளையும் மூலிகைக்களிம்பான ஜாம்-பெக் குணப்படுத்துகிறது. மிருகக்கொழுப்பு மற்றும் எண்ணெய்கள் சேர்க்கப்படாதது என்பதற்கு உத்திரவாதம்.

Zam-Buk

ஜாம்-பெக்
மூலிகைக்
களிம்பு



எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

FZY-60-TAM

ஸி.இ. புல்போர்ட் (இந்) பிரைவேட் லிமிடெட், பம்பாய்

சால் ஏஜண்டுகள்

தாதா & கம்பெனி

66, லைனியப்ப நாயக் தெரு, சென்னை-3

மூக்கு அடைத்திருக்கிறதா?

மிஸ்டால் உபயோகியுங்கள்.

அந்த அடைப்பை மிஸ்டால் கொண்டு அகற்றுங்கள். மூக்கின் இரண்டு துவாரங்களிலும் ஒரு துளி சொட்டவும், பிறகு நன்ருக மூச்சுவிட்டு, மூக்கைச் சிந்தவும். அவ்வளவுதான்!

மிஸ்டால் துளிகள் — மூக்கு அடைப்பு, ஜலதோஷம், இருமல், மூக்கில் புண், கரகரப்பு முதலியவைகளிலிருந்து துரித நிவாரணம் அளிக்கிறது.

இவையும்கூட இப்போது கிடைக்கின்றன.
மிஸ்டால் எபிடிரின் கலந்தது.
மிஸ்டால் அக்வியஸ்
மிஸ்டால் மிஸ்ட்





ஏகபோக விநியோகஸ்தர்கள் :
எச்.ஜி. ஞானி & கம்பெனி (பம்பாய்) பிரைவேட் லிட்.
1, பந்தர் தெரு, மதராஸ்-1

அத்தியாயம் பதினெட்டு

அரிய வாய்ப்பு

"யார், சம்புவராயனா?" என்று வியப்பும் திகைப்புமாக அடித்தொண்டையில் விளித்தார் பழையாறைச் சோழர்.

"ஆம், பிரபு!" என்று குழறிக்கொண்டே அருகில் வந்து நின்ற ஆபத்துதவி சம்புவராயன், ஆலம்பாக்கம் இளங்காரிக்குடையானின் இல்லத்திலிருந்து சோழ இளவரசி இளங்கோப்பிச்சியைப் பழையாறைக்கு அழைத்துப் போனதையும், அவள் நடு வழியில் பெருவளநல்லூருக்குப் போகுமாறு கட்டளை யிட்டதையும், அப்படிப் போனபோது, மழையின் காரணமாகச் சளுக்கிய இளவரசன் விநயாதித்தனிடம் ஏமாந்து விட்டதையும், தன்னை அவன் கட்டிப் போட்டு விட்டு இளங்கோப்பிச்சியின் சிவிகையைப் பின் தொடர்ந்து சென்றதையும் விவரமாகக் கூறியபின் மேலும் சொன்னான்: "பொழுது விடியும் வரையில் அந்தப் பாழடைந்த மண்டபத்திலேயே கட்டுண்டு கிடந்த என்னை அவ்வழியே வந்த சிலர் விடுவித்தார்கள் ஐயா! உடனே பெருவளநல்லூருக்கு விரைந்து ஓடி, அங்கு நம் இளவரசியார் வந்தாரா என்று விசாரித்தேன். யாருக்கும் அவரைப் பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை. சேதியக் கலைஞரும் அவ்வூரை விட்டுத் திருப்பருத்திக்குன்றத்துக்குப் போய் விட்டாராம்...."

நடுக்கத்துடன் இவ்வாறு இழுத்து நிறுத்திய சம்புவராயனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பழையாறைச் சோழர், "இளங்கோப்பிச்சி ஏன் பெருவளநல்லூருக்குப் போனாள்?" என்று கடுகடுத்த குரலில் கேட்டார்.

"சேதியக் கலைஞரைப் பார்ப்பதற்காக, பிரபு!"

"இல்லை; ஆந்திர இளவரசி உத்தமசீலியைச் சந்திப்பதற்காகத்தான் அவள் அங்கு சென்றிருக்க வேண்டும்."

"ஆம், அரசே! நானும் அப்படித்தான் நினைத்தேன்."

"ஆந்திர இளவரசி இப்போது அந்த ஊரில்தானே இருக்கிறாள்?"

"அந்த விவரம் எனக்குத் தெரியாது, பிரபு!"

தலையை மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டு சிறு பொழுது பேசாதிருந்த பழையாறைச் சோழர் அடைத்த குரலில், "ம்.... என் மகளுக்கு மட்டுமல்ல, ஆந்திர இளவரசி உத்தமசீலிக்கும் சேர்த்தேதான் ஆபத்து தேடிப் போய் இருக்கிறது!" என்றார்.

துடித்துப் பதறிய கோவிந்தவர்மன், "அப்படியானால் சீக்கிரம் புறப்படுங்கள், ஐயா! இளங்கோப்பிச்சியின் கதி என்ன ஆயிற்றோ!" என்று இணறிப் படபடத்துக்கொண்டே அங்கிருந்து துள்ளிப் பாய்ந்து ஓடினான். பழையாறைச் சோழரும் சம்புவராயனும் அவனுடன் சேர்ந்து விரைந்து சென்றார்கள்.

இவ்வளவு நேரமும் அவர்களுக்குப் பின்னால் இருந்த பாறைச் சரிவில் மறைந்து நின்று கொண்டிருந்த பரமேசுவரவர்மன் புன்னனை மனத்துடன் பெருமூச்சு விட்டவாறு வெளியே வந்து தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு சற்று நேரம் அப்படியே நின்றான். அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. முத்தரையர் வந்து சொன்ன தகவல்களின் படியேதான் பழையாறைச் சோழரும் கோவிந்தவர்மனும் தங்கள் எதிர்ப்பு நடவடிக்கையைத் தீவிரமாக ஆரம்பித்து விட்டார்கள்!

ஆனால் அதைப் பற்றி அவன் அதிகம் சிந்திக்காமல்; சம்புவராயன் வந்து சொன்ன சேதியை நினைத்தே பெரும் குழப்பத்துக்கு உள்ளானான். 'பழையாறைச் சோழராலோ, கோவிந்தவர்மனாலோ மட்டுமல்ல; தலைமறைவாகத் திரிந்து வரும் சளுக்கிய விநயாதித்தனாலும் ஆந்திர இளவரசிக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது! ஒருகால் அந்த ஆபத்து இந்நேரம் ஏற்பட்டு விட்டே இருக்குமோ?'-அதிர்ந்து நடுங்கிய நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு தன் குதிரையை நோக்கி ஓடினான் பரமேசுவரவர்மன்.

இரவின் நான்காம் சாம நேரம்.

"எழுந்திருங்கள், தளபதியாரே! இனியும் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்க வேண்டாம்!" என்று அவசரப் பரபரப்புடன் கரகரத்தான் சளுக்கிய விநயாதித்தன்.

அன்றொரு நாள் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டைச் சிறையிலிருந்து தப்பி ஓடி வந்த கோவிந்தவர்மன் உறையூர்ச் சாலையோரம் இருந்த ஒரு சுமைதாங்கிக் கல்லின் மேல் படுத்திருந்தானே, அதே இடத்தில் — அதே போன்ற நிலையில் — அவனைவிட மோசமான கோலத்தில் — பஞ்சைப் பராரி போல் இளைத்துக்

களைத்துப் படுத்துக் கிடந்த சளுக்கியத் தளபதி வில்வேலி சோர்வுடன் எழுந்து உட்கார்ந்து விரக்தியுடன் மெல்லச் சிரித்தார்.

''நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது; எழுந்திருங்கள் ஐயா!'' என்று படபடத்த விநயாதித்தன் உள்ளார்ந்த சினத்துடன் மேலும் சொன்னான்: ''நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பை அன்றிரவே இந்த வீரனிடம் தெரிவித்து உங்களைப் பெருவளநல்லூர் சிற்றாற்றங் கரைக்கு அழைத்து வரும்படி அனுப்பினேன். ஆனால் நீங்கள் விவரம் தெரிந்த பின்னும் வரவில்லை. அன்றெல்லாம் நான் அங்கேயே மறைந்திருந்து காத்துப் பார்த்துவிட்டுப் பிறகு உங்களைத் தேடிக் கொண்டு எங்கெங்கோ சுற்றியலைந்து கடைசியில் இங்கு வந்து கண்டு பிடித்தேன். இப்போதும் நீங்கள் உடனடியாகப் புறப்படாமல் வீணாகக் காலதாமதம் செய்கிறீர்களே?''

மையிருட்டை மருட்சியுடன் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்த வில்வேலி மெல்லத் தலைநிமிர்ந்து, ''இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள், இளவரசே?'' என்று அமைதியாக வினவினார்.

''என்ன செய்யச் சொல்கிறேனா? இவ்வளவு நேரம் நான் சொன்னதெல்லாம் உங்கள் காதில் விழவில்லையா? நமது மாபெரும் சளுக்கிய சாம்ராஜ்யத்தைச் சிதைத்துக் குலைத்து நம்மை இந்தக் கதிக்கு ஆளாக்கி வைத்திருக்கும் சண்டாளியான அந்த உத்தம சீலி இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விட்டேன். போதிய பாதுகாப்பற்ற ஒரு சிறு புதர்க் குடிலில் இருந்து வரும் அவளோடு, நம் குடியைக் கெடுத்த பழையாறைச் சோழனின் பேய் மகள் இளங்கோப்பிச்சியும் இருக்கிறாள். அவ்விருவரையும் பழி வாங்க நமக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதை உங்கள் கையாலேயே செய்து முடிக்க வேண்டும். அந்தக் காட்சியைக் கண்டு நான் ஆனந்தப்பட்டு மனம் குளிரவேண்டும். இத்தனை நாட்களாக இங்கே நாம் நாயாகவும் பேயாகவும் திரிந்து கொண்டிருந்ததன் பயனாக இந்த ஒரு காரியத்தையாவது செய்து முடித்துவிட்டுத்தான் இந்நாட்டை விட்டு அகல வேண்டும்'' என்று வெறிக் குரலிற் கூவினான்.


எங்கோ தொலைதூரத்தில் ஓர் ஆந்தை அலறும் ஒலி கேட்டது. குழி முயலொன்றைத் துரத்திக்கொண்டு சாலையின் குறுக்கே பாய்ந்து ஓடியது ஒரு குள்ள நரி. உணர்ச்சியற்ற மரக்கட்டை போல் உட்கார்ந்திருந்த வில்வேலி உயிரற்ற சிரிப்புடன் எழுந்து தொய்ந்து துவண்டு நடக்கலானார். விநயாதித்தனும் சளுக்கிய வீரனும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

பொழுது புலர இன்னும் ஒரு நாழிகை நேரமே இருந்தது. பெருவளநல்லூர் சிற்றாற்றைக் கடந்து, ஆந்திர இளவரசி தங்கியிருந்த புதர்க் குடிலை நோக்கிச் செடி கொடி மரங்களுக்கு இடையே ஒளிந்து மறைந்து வந்து கொண்டிருந்த விநயாதித்தனும் வில்வேலியும் பலத்த அதிர்ச்சியுற்றவர்களாய் அப்படியே திகைத்து நின்றார்கள். ஆனால் மறுகணமே விநயாதித்தனின் முகம் மலர்ந்து விரிந்தது. பரபரப்புடன் தன் சிவந்த கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தான்.

அங்கே, பெருமழையால் அழிந்து சிதைந்த நிலையில் கிடந்த அந்தப் புதர்க் குடிலின் எதிரே, ஆற்றங் கரை மேட்டின் சரிவில், இக்பிரமையுற்றவனாய் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்தான் பல்லவ மன்னன் பரமேசுவர வர்மன்!

(தொடரும்)

வீட்டில் பாதுகாப்புக்கு !



இன்றே வாங்குங்கள்

கால்டெக்ஸ்

முதல்சிகித்சை பெட்டி

கார் வைத்திருப்போருக்கும்
அல்லாதவர்கட்கும் மிக உபயோகமானது

நிகர விலை ரூ. 2-25

அநேகமாக எல்லா கால்டெக்ஸ் சர்வீஸ் ஸ்டேஷன்களில் கிடைக்கும்

CAL FA 6-63-G

மர்மக்கதை

"இந்தக் கடவுள் சுத்த மோசம். அவர் போக்கைக் கண்டித்து ஒரு தலையங்கம் எழுதிப் போட்டுவிட வேண்டியதுதான்'' என்று ஒரு தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் கோபத்துடன் தமக்குள் முணுமுணுத்தார். ஏனென்றால், அன்று மாலை மூன்று மணி ஆகியும் கூடப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் தலைப்புப் போடுவதற்கு லாயக்கான செய்தி எதுவும் வரவில்லை. அன்று சீனாவும் பாகிஸ்தானும் யாரையுமே தூஷிக்கவில்லை. எந்த எருமை மாடும் ஒரே சமயத்தில் மூன்று கன்றுகளைப் போடவில்லை. சிறிய டிரைஸைக்கிள் விபத்துக்கள்கூட ஏற்படவில்லை. எல்லாத் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுமே எந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்று திண்டாடினர்.

மணி நாலரை ஆகி விட்டது. எல்லாத் தினசரிப் பத்திரிகாலயங்களிலும், பத்திரிகையின் பக்கங்கள் அச்சேறுவதற்குத் தயாராக இருந்தன.

அப்போது பத்திரிகைக்காரர்களின் மனம் குளிரச் செய்யும் வெளியூர்ச் செய்தி ஒன்று வந்தது. கடவுள் தம்மைப் பற்றி அந்த ஆசிரியர் தலையங்கம் எழுதிவிட்டால் என்ன செய்வது என்று பயந்து 'போஸ்ட





என். ராங்கன்

ரி'ல் போடுவதற்குத் தகுதியான ஒரு சம்பவத்தை நிகழச் செய்து விட்டார் போலும். இந்தரை மணிக்கெல்லாம் வீதிகளில் பையன்கள் மாலைப் பத்திரிகைகளை விற்றுக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒரு கையால் ஒரு காதைப் பொத்திக் கொண்டு,

சாயா தேவி மரணம்!

பிரபல நட்சத்திரம் விபத்துக்குள்ளானர்

என்று அடி 'வயிற்றி'லிருந்து கூவிக்கொண்டு சென்றனர். அந்த விபத்து பற்றிய விவரங்கள்:

பிரபல ஸினிமா நட்சத்திரமான சாயா தேவி இன்று பிற்பகல் சுமார் இரண்டு மணிக்கு எதிர்பாராத கோர விபத்துக்குள்ளானர். அவரும் அவரது நண்பரான ஜயசந்திரனும் உதகமண்டலத்தில் ஒரு மலைப் பாறையின் ஓரம் சென்று கொண்டிருந்தபோது கால் தவறிக் கீழே விழுந்து விட்டனர். அந்த இடத்தில் பாறை சரிவாக இல்லாமல் செங்குத்தாக இருப்பதால் அவர்கள் கீழேயுள்ள பள்ளத்தாக்கில் விழுந்து விட்டனர். பள்ளத்தாக்கு ஐந்நூறு அடிக்குக் கீழே இருப்பதால், அவர்கள் உயிருடன் இருக்க முடியாது. அவர்கள் உடலைத் தேடுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் செய்தியைப் படித்துப் பலர் பரிதாபப்பட்டார்கள். ஸினிமாத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் பலர் அவளது மரணத் துக்காக மிகவும் மனம் வருந்தினர். அவளைத் தன் ஜென்ம விரோதியாகக் கருதி வந்த ரம்பாபாய் என்ற நட்சத்திரம் ஒப்பாரி வைத்தே அழத் தொடங்கிவிட்டாள்.

சாயாதேவி திரை உலகத்தில் புகுந்து நடிக்கத் தொடங்கி ஐந்தாறு வருடங்கள் தான் ஆகியிருந்தும், அவள் ஒரு முதல் தர நட்சத்திரத்தின் அந்தஸ்தை அடைந்து விட்டாள். அதற்குக் காரணம் அவளது தனிப்பட்ட நடிப்புத்தான். ஒரு பெண் பிள்ளை மேளம் வாசித்தால், குஸ்தி போட்டால், முஷ்டிச் சண்டை செய்தால் அவளுக்கு எப்படிச் சீக்கிரத்திலேயே புகழ் ஏற்பட்டு விடுகிறது. அதே போல்தான் சாயா தேவிக்கும் ஏற்பட்டது. அவள் ஒரு ஸ்திரீ வில்லன் அல்லது வில்லி. அவசியம் நேரும் போது அவள் கத்திச் சண்டை, முஷ்டி யுத்தம், குஸ்திச் சண்டையெல்லாம் போடுவாள். காதல் கட்டங்களில், முக்கியமாக, காதல் காட்சிகளில் தத்ரூபமாக நடிப்பாள்.

அத்துடன் அவள் தன்னை ஒரு மர்மப் பெண்ணாகச் செய்துகொண்டு வந்திருந்தாள். அவள் யார், எந்த ஊர், சொந்தப் பெயர் என்ன, பெற்றோர்கள் யார், கல்யாணமானவளா, இல்லையா என்ற விவரங்கள் யாருக்கும் தெரியாது. கூடியவரை அவள் பத்திரிகை நிருபர்கள் தன்னை அணுகி வாயைப் பிடுங்கி வம்புகள் எழுத விடுவதில்லை. படாதிபதிகளும் அவளை அப்படியே இருக்கச் செய்து 'மர்ம ராணி' என்ற பெயரைச் சிருஷ்டித்தார்கள். கடைசியாக அந்த ராணி 'அவள் எங்கே? எங்கே?' என்ற படத்தில் நடித்தாள். முதல்தர நட்சத்திரங்கள் பலரும் நடித்த அந்தப் படப் பிடிப்பு முடிவடைந்திருந்தது.

மறுநாள் பத்திரிகைகளில் விபத்தைப் பற்றிப் பின்னும் சில விவரங்கள் வெளியாயின.



"....சாயா தேவியும் ஜயசந்திரனும் பாறையின் உச்சியில் ஓர் ஓரமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது சற்றுத்

தூரத்தில் காட்டு யானைக் குட்டிமாதிரி ஏதோ மிருகம் ஒன்று வருவது தெரிந்ததாம். உடனே அவர்கள் எழுந்திருந்து ஓடினராம். பாறைக் கப்பால் பள்ளத்தாக்கு இருப்பது தெரியாமல் அது இருந்த பக்கம் ஓடவே அவர்கள் விழுந்து பாதாளத்துக்குப் போய் விட்டனராம். இந்த விவரங்களை அப்போது அந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்த தோதவர் ஒருவர் தாம் நேரில் பார்த்ததாகக் கூறினர். பாறை உச்சியில் கிடந்த இரண்டு கைப்பைகளிலிருந்த சாமான்களிலிருந்து விழுந்தவர்கள் அவர்கள்தான் என்பது ஊர்ஜிதமாயிற்று. அவர்களுடைய உடல்களைக் கண்டெடுக்க முடியவில்லை....''

தினசரிப் பத்திரிகைகள் இத்துடன் அந்த விபத்தைப் பற்றி மறந்து விட்டன. மரண விசாரணை செய்த அதிகாரி 'தற்செயலாக நேர்ந்த மரணம்' என்று முடிவு தெரிவித்து விட்டார். உடனே வெள்ளித் திரை நடிகர்கள் சங்கம், படாதிபதிகள் சங்கம் முதலியன அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றித் தங்கள் கடமையை முடித்துக்கொண்டன.

ஆனால், சில சினிமாப் பத்திரிகைகள் அவளை விடவில்லை. சாயாவைப் பற்றிய உண்மை வரலாறு அநேகமாக யாருக்குமே தெரியாததாதலால் அவை அவற்றைக் கண்டு பிடித்து வெளியிடத் தொடங்கின. இதற்காக அவள் வீட்டுச் சமையற்காரன், வேலைக்காரி, தோட்டக்காரன், வண்ணான் போன்றவர்களைப் பேட்டி கண்டு அந்த விவரங்களை வெளியிட்டன. ஒன்றிரண்டு 'மஞ்சள்' பத்திரிகைகள் வெறுக்கத்தக்க ஆனால் பல 'ருசிகர'மானதென்று கருதப்படும் கற்பனைச் சம்பவங்களைப் பற்றிப் பத்தி பத்தியாக எழுதித் தள்ளின.

இந்த விபத்து நடந்து இரண்டு வாரங்களாகியிருக்கும். படாதிபதி தாஸப்பா தமது அறையில் கவலையே உருவாக உட்கார்ந்திருந்தார். அவர்தான் 'அவள் எங்கே, எங்கே?' என்ற படத்தைத் தயாரித்தவர். அவர் முகத்தைப் பார்த்தால் ''நான் இருபது இலட்சம் ரூபாய் லாபம் வருமென்று எதிர்பார்த்தேனே. ஏமெட்டுத்தான் கிடைக்கும்போலிருக்கிறதே. நான் என்ன செய்வேன்?' என்று எண்ணித் தவித்துக்கொண்டிருப்பவர் போலிருந்தார். அவர் தமது தலையில் எஞ்சியிருந்த ரோமத்தையும் பிடித்திழுத்துக் கொண்டார்.

அப்போது அறைக் கதவு திறந்தது. வேதசாலம் உள்ளே நுழைந்தார். படாதிபதியின் அறைக்குள் முன்னறிவிப்பின்றி நுழையக் கூடிய சலுகை பெற்ற சிலருள் அவர் ஒருவர். விளம்பர இலாகா அதிகாரி.

தாஸப்பா எழுந்து வந்து அவரது கழுத்தைக் கட்டிக் கொண்டு ''இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டாளே! என்ன செய்வேன்?'' என்று கண்ணீர் விட்டார்.



வேதசாலம் அவரது கண்களைத் துடைத்து விட்டு அவரைச் சோபாவில் அமரச் செய்தார்.

''படம்தான் முடிந்து போய்விட்டதே. அவள் நடிக்க வேண்டிய காட்சி ஒன்றிரண்டு பாக்கியிருந்தாலும் அதை எப்படியாவது சரிப்படுத்திவிடலாம். நீங்கள் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?'' என்று வேதசாலம் கேட்டார்.

''எதற்காகவா? இருபது லட்சமல்லவா கொட்டியிருக்கிறேன்! இப்போது அவள் பெயர் ஏதோ ஒரு விதமாக அடிபட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் படத்தை வெளியிட்டால் போட்ட பணத்தையாவது எடுத்து விடலாம். ஆனால் படம் தீபாவளிக்கு 'ரிலீஸ்' செய்யவல்லவா ஏற்பாடு செய்திருக்கிறோம்? அதற்கு இன்னும் நாலைந்து மாதம் இருக்கிறதே. அப்போது ஜனங்களுக்கு அவள் படத்தைப் பார்க்க இவ்வளவு ஆவல் இராதே! பாறையிலிருந்து விழுந்ததுதான் விழுந்தாள்; தீபாவளிக்கு ஒரு வாரம் முன்னாடி விழலாமென்று பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது!'' என்று புலம்பினர்.

வேதசாலம் தம் கண்களை மூடியவாறு யோசனையில் ஆழ்ந்திருந்தார். விளம்பர தேவதையைப் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பது போல் இருந்தது. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு கண்களைத் திறந்தார்.

''எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றி விட்டது. அதன்படி செய்தால் நீங்கள் என்ன வசூல் எதிர்பார்த்தீர்களோ அதைப் போல் இரண்டு பங்கு கிடைக்கும். ஆனால் அதற்கு மூன்று லட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கும்'' என்றார் வேதசாலம்.

''சரி!'' என்று தாஸப்பா ஒரே வார்த்தையில் அந்தத் தொகையைச் செலவழிக்க ஒப்புக் கொண்டார். வேதசாலத்தின் திறமையில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை உண்டு.

''இரண்டு லட்சம் ரூபாய் விளம்பரச் செலவுக்கும்....''

''ஒரு லட்சம் உனக்கு!''

''ஆமாம்! அதற்கு நான் வருமான வரி கட்டும்படியாயிருக்கக் கூடாது.''

வேதசாலத்தின் இந்த ஏற்பாட்டுக்கும் படாதிபதி சம்மதித்து விட்டார்.

அன்றே அந்த விளம்பர நிபுணர் தமது பிரசார வேலையை மும்முரமாகத் தொடங்கி விட்டார். 'சாயா தேவி' என்ற பெயருடனேயே ஒரு புதிய பத்திரிகை உதயமாயிற்று.

அதில் அவள் குழந்தைப் பருவத்தில் பிடித்த புகைப்படங்கள், சிறுமியாயிருந்த படங்கள் முதலியன வெளியாயின. அந்தப் படங்கள் கிட்டத்தட்ட அவளது சாயலுள்ளவையாக இருந்தன. அவள் ஒரு மாஜி மகாராஜாவின் மகள் என்றும் சந்தேகப்படும்படியான கட்டுரைகள் வந்தன. அவளுக்கு யோகாசனங்கள் தலைகீழ்ப் பாடமென்றும், நள்ளிரவில் எழுந்திருந்து பூஜை செய்யும் வழக்கம் உண்டென்றும் தகவல்கள் வெளியாயின. பல தர்ம காரியங்களுக்குப் பெயர் வெளியிடாத ஒருவர் 'அநாமதேயம்' என்ற பெயரில் கொடை அளித்து வந்தவர் அவர்தான் என்றும்



கேவாபாக்ஸ்
3-ஸ்பீட் மூலம்

தத்ரூபமான
படங்களை
எடுக்கலாம்...

GEVABOX


இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

கேவாபாக்ஸ் காமிராவை உபயோகித்தால் நீங்கள் சிறந்த படங்களை உங்கள் முதல் ரோல் பிலிமிலேயே எடுக்கலாம். புதிதாகக் கற்றுக் கொள்பவர்களுக்கென விசேஷமாகச் செய்யப்பட்ட கேவாபாக்ஸ் 3 ஷட்டர் ஸ்பீட்களின் உதவியால், மங்கலான வெளிச்சத்திலும் அல்லது செயற்கை வெளிச்சத்திலும் எல்லா விவரங்களையும் தெளிவாகப் படமாக்கலாம். நேரம் கொடுத்துப் படம் எடுப்பதற்கேற்றவாறு செட்டிங் செய்வதற்கும் பிரத்தியேக வசதியுண்டு.

இதில் உள்ள விசேஷ அம்சங்கள்

* ப்ளாஷ் பொருத்தக்கூடியது
* எளிதில் பிலிம் இணைக்க முடியும்
* ஷட்டர் ஸ்பீட்கள்: 1/50 அன்று 1/100 செகண்டு "B" செட்டிங்
* கண்ணருகில் வைத்துப் பார்ப்பதற்கேற்ற வசதி யமைந்ததால் அகன்ற அல்லது செங்குத்தான படங்கள் எடுக்க உகந்தது
* நேர்த்தியான அமைப்பும் உறுதியான முழு உலோகத்தினால் தயாரிக்கப்பட்ட காமிரா
* 120 ரோல் பிலிமுக்கு ஏற்றது

விலை
ரூ. 38.00



GEVABOX எங்கும், எவருக்கும் ஏற்றது

எங்கள் டீலர்களிடம்
கேவாபாக்ஸ் காமிராவை
ஒரு முறை பாருங்கள்

ALLIED PHOTOGRAPHICS LIMITED
அலைட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்
கஸ்தூர் பில்டிங், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1

PSAPL 10/63 R

தெரிய வந்தது. அந்த விவரங்களை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை யல்லவா?

இப்படியெல்லாம் அந்த நட்சத்திரத்தைப் பற்றிப் புகழ்ச்சியாக எழுதி வந்த 'சாயா தேவி' என்ற பத்திரிகைக்குப் போட்டியாக 'மாயா தேவி' என்று ஒரு பத்திரிகை வெளி வந்தது. அதில் அவளைப் பற்றி என்னென்ன அவதூறான விஷயங்கள் எழுத்தில் வெளியிட முடியுமோ அத்தனையும் வெளிவந்தன. 'சாயா தேவி விசிறிகள் சங்கம்' என்று ஒன்று தோன்றி ஆயிரக் கணக்கான அங்கத்தினர்களைக் கொண்டதா யிருந்தது. அவள் பெயரால் ஏழெட்டு வாசகசாலைகள் ஏற்பட்டன. பஸ் நிற்கும் இடங்களில் 'சாயா தேவி ஞாபகார்த்தமாக' ஷெல்டர்கள் கட்டப்பட்டன. இவற்றை மந்திரிகளோ, நீதிபதிகளோ, பெரிய நட்சத்திரங்களோ திறந்து வைத்தார்கள்.

மொத்தத்தில் சாயா தேவியைப் பற்றிப் பொதுமக்களுக்கிருந்த மோகம் பன்மடங்கு அதிகரித்திருந்தது. பல விலைமாக் கொட்டகைக்காரர்கள் படத்து வசூலில் நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதம் கொடுக்கவும் நூற்றொரு நாள் ஓட்டவும் ஒப்புக்கொண்டனர். எல்லாம் விளம்பர நிபுணரின் முயற்சிகளின் பலன்.

வேதசாலம் நான்கைந்து மாத காலம் ஓய்வு ஒழிவின்றி வேலை செய்து வந்ததால் உடல் நலம் குன்றிப் போனார். வைத்தியர்கள் அவரை எங்கேயாவது மலை வாசம் செய்துவிட்டு வரும்படி வற்புறுத்தினார்கள். "அவள் எங்கே எங்கே?" என்ற படம் திரையிடப்படுவதற்கு இன்னும் இரண்டு வார காலம் இருந்ததால் அதற்குள் சில தினங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு வரலாமென்பதற்காக நீலகிரிக்குச் சென்றார். அங்கே ஹோட்டலில் தங்கினால் பலரைச் சந்திக்க நேருமென்று பயந்து, தமது நண்பருக்கு நண்பரான கோவிந்தன் என்பவருடன் அவரது பங்களாவில் தங்கியிருந்தார்.

அவர் கோவிந்தனிடம் தாம் சாயா தேவியைப் பற்றி விளம்பரம் செய்ததைக் கூறி வருவது வழக்கம். ஒரு நாள் அவர் "அந்தப் படம் சக்கைப் போடு போடப் போகிறது" என்று கூறிக் கொண்டிருந்தார்.

"சந்தேகமில்லாமல்!" என்று பதில் வந்தது. ஆனால் அப்படிச் சொல்லியது கோவிந்தன் அல்ல. அப்போதுதான் ஹாலுக்குள் நுழைந்து வந்த ஒரு ஸ்திரீ, சொன்னாள். அவள் அவர்கள் இருந்த இடத்தை நோக்கி நடந்து வந்தாள். அவள் நடப்பதோ ஒரு விதமாக நடனம் செய்வது போலிருந்தது. அவள் நடுத்தர உயரத்தினளாய், சற்றுப் பருமனான உடலுடனிருந்தாள். முகத்தைப் பார்த்தால் அவள் நடிகையாகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகிக்கும்படியா யிருந்தது.

அவளைக் கவனித்துக் கொண்டே இருந்த வேதசாலத்தின் முகத்தில் பீதி தோன்றியது. அந்தக் குரலை எப்போதோ, எங்கேயோ கேட்டது போலிருந்தது. அந்த முகமும் தமக்குப் பழக்கமான முகம் போலிருந்தது. அவர் சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்திருந்து "யார் நீ?" என்றார்.

அவள் கக்கட கடவென்று வாய் விட்டுச் சிரித்துக் கொண்டே இன்னும் அருகில் வந்தாள். வேதசாலம் விழித்த கண் விழித்தபடி அவளையே நோக்கிக் கொண்டிருந்தார்.

"நீயா? நீதானா? இருக்க முடியாது! நீ ஆவி!" ஒரு கத்தியைப் பிரித்து அவளைக் குத்துவதற்காகக் கையை ஓங்கினார்.

அந்தக் கையை, கோவிந்தனின் கைகள் பலமாகப் பிடித்துக் கொண்டன. "என்ன அண்ணே தமாஷ் செய்கிறீர்கள்? உங்க சாயா தேவியை அதற்குள்ளா மறந்துவிட்டீர்கள்?"

அவளைப் பற்றிய விவரங்களைக் கேள்விப்பட்டிருந்த கோவிந்தன் அவளைப் பார்த்து, 'உட்காரம்மா' என்றார். வேதசாலத்தையும் உட்காரச் செய்தார்.

அந்த நிபுணருக்குத் தைரியம் பிறந்தது. சாயா தேவியின் ஆவி அல்ல, அவளேதான் என்பதை உணர்ந்துகொண்டார்.

"நீ இத்தனை நாளாக எங்கே போயிருந்தாய்? என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

"அப்படிக் கேளு! நான் பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்தேன். எல்லாம் தப்பு. நான் ஜயசந்திரனுடன் பாறைப் பக்கம் போனது உண்மைதான். ஆனால் அவரது உறவினரோ, சிநேகிதரோ' ஒருத்தியும் கூட வந்தாள். என் கைப் பை அவளிடம் இருந்தது. வழியில் நான் ஒரு சிநேகிதரோடு பேசிக் கொண்டிருந்து விட்டு அப்படியே மைசூருக்குச் சென்று விட்டேன். பையில் இருந்த என்னுடைய சாமான்களைப் பார்த்து விட்டுப் பள்ளத்தாக்கில் விழுந்தது நான்தான் என்று முடிவுகட்டி விட்டார்கள்."

"நடந்ததை நீ ஏன் தெரிவிக்க வில்லை? உடனேயே ஊருக்கும் வரவில்லை?"

"நான் பத்திரிகைகளைப் பார்த்தபோது சம்பவம் நடந்து ஒரு வாரமாகி யிருக்கும். பொழுது விடிந்தால் பொழுது போனால் 'ஷூட்டிங், ஷூட்டிங்' என்று படப் பிடிப்பு வேலை பிராணனை வாங்கி விட்டது. கொஞ்ச நாள் நிம்மதியாக இருக்கலாமே என்று நினைத்தேன். எனக்கு ஏற்பட்டிருக்கும் 'மர்ம ராணி' என்ற பெயருக்கேற்பப் பிறகு திடீரென்று ஒரு நாள் நான் உயிரோடு இருப்பதைத் தெரிவிக்கலாம் என்று நினைத்தேன்."

"இந்த நாலைந்து மாதமும் எங்கிருந்தாய்?" என்று வேதசாலம் விசாரித்தார்.

"வட நாட்டில் பல நகரங்கள், க்ஷேத்திரங்களை யெல்லாம் பார்த்து விட்டு வந்தேன். இன்றைக்கே பத்திரிகைகளுக்கும் தாலப்பாவுக்கும் நான் உயிரோடு திரும்பி வந்து விட்டதைப் பற்றித் தந்தி அடித்து விடுகிறாயா?" என்று சாயா கேட்டாள்.

வேதசாலம் அவளையே கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர், "அதைப் பற்றித்தான் யோசனை செய்து கொண்டிருக்கிறேன். வா, தந்தி ஆபீசுக்குப் போய்விட்டு வரலாம்" என்று கூறிக் கோவிந்தனிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார். சாயா தேவியையும் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்.



அவர் திரும்பி வந்த போது இரவு பத்து

மணி இருக்கும். அவர் மட்டும்தான் வந்தார்.

''தந்திபடித்தாகி விட்டதா?'' என்று கோவிந்தன் விசாரித்தார்.

''தந்தியா?'' என்று வேதசாலம் பரிகசிக்கும் தொனியில் கேட்டார்.

''சாயாதேவி எங்கே?'' என்று கோவிந்தன் சிறிது கலவரத்துடன் விசாரித்தார்.

''அவள் தேவியா! திருடி. பேயும், பேயும் என்னையேஏமாற்றப்பார்த்தாளே!''

''அவள் கூறியது சரியாய்த்தானே இருந்தது? நம்பக் கூடியதாகத்தானே இருந்தது.''

''உங்களுக்கு இதெல்லாம் புதுசு. நான் எத்தனை நடிகைகளோடு பேசிப் பழகியிருக்கிறேன். அந்தச் சாயா தேவியின் பேருக்கும் புகழுக்கும் காரணம் நான்தானே! இங்கே வந்தவள் யாரோ ஒருத்தி! அவள் சொன்ன போதே எனக்குச் சந்தேகம் தோன்றிற்று. இருந்தாலும் ஆட்சேபிக்காமல் நம்புவது போல் பாசாங்கு செய்தேன். தந்தி ஆபீசுக்குப் போகும் வழியில்தானே போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அதன் பக்கம் போகும் போது, ''மரியாதையாக உண்மையைச் சொல்லி விடுகிறாயா? போலீஸில் ஒப்படைக்கட்டுமா?'' என்று கேட்டேன். அவள் நடுத் தெருவிலேயே என் காலில் விழுந்து விட்டாள். தன் பெயர் சாயா தேவிதான் என்றும், ஆனால் தான் அந்த நட்சத்திர மல்லவென்றும் ஒப்புக் கொண்டாள்.''

''என்னது?'' என்று கோவிந்தன் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''ஆமாம், 'அவள் எங்கே எங்கே?' என்கிற படம் வெளி வரப் போகிறதல்லவா? இந்தச் சமயம் பார்த்து இப்படி வேஷம் போட்டுப் பணம் பறிக்கலாம் என்று நினைத்தாளாம்.''

''தாங்கள் அவளை விரட்டி விட்டீர்களாக்கும்!''

''கையில் நூறு ரூபாய் பணம் கொடுத்து இனி மேல் நல்ல பெண்ணாக நடந்து கொள்ளும்படி புத்திமதி சொல்லி அனுப்பினேன்.''

''அப்புறம்?''

''அவள் அப் பாறைப் பக்கம் சென்றாள்.''

''எந்தப் பாறைப் பக்கம்?''

''அதுதான். உண்மையான சாயா தேவி விழுந்த பாறையாம். அவள் வேகமாகச் செல்வதைக் கவனித்துக் கொண்டேயிருந்தேன். அவள் கால்கள் தவறி.....''

''என்ன?''

''அவள் மனச்சாட்சி அவளை உறுத்தியிருக்க வேண்டும். அவள் கால் தவறி அதே பள்ளத்தாக்கில் விழுந்து விட்டாள் போல் இருக்கிறது'' என்றார் வேதசாலம்.

இதைக் கேட்ட கோவிந்தன் துடிதுடித்தார். ''போலீசுக்கு டெலிபோன் செய்ய வேண்டும்'' என்று கூறி எழுந்தார்.

''செய்ய வேண்டியதுதான். ஆனால் அவர்கள் வந்தால் கண்டபடியெல்லாம் கேள்விகள் கேட்பார்கள். அவள் யார், எங்கிருந்து வந்தாள். இந்த வீட்டுக்கு வருவானேன்? என்றெல்லாம் கேட்பார்கள்.''



''உண்மையைச் சொல்லி விடுகிறது!''

''அப்புறம் பட வசூல் குட்டிச்சுவராகும்.''

''நீங்கள்தான் அவள் சாயா தேவி அல்ல, வேறு யாரோ ஆள் மாறாட்டம் செய்கிறாள் என்றீர்களே.''

''இருந்தாலும் அவள்தான் அந்த நடிகை என்று சொன்னால் அதைப் பற்றிப் புரளிகள் கிளம்பத்தானே செய்யும்? தவிரவும் அவள் பார்ப்பதற்கு ஓரளவு சாயாதேவி மாதிரியும் இருந்தாள்.''

கோவிந்தனுக்கு இதெல்லாம் காதில் ஏறவில்லை. ''ஒரு வேளை கீழே விழுந்த பெண் உயிரோடு இருந்தாலும் இருக்கலாம்...போலீசுக்குத் தெரிவிக்க வேண்டியதுதான்'' என்று கூறி டெலிபோன் குழாயை எடுத்தார்.

''ஒரு பெண் ஒரு பாறை மீது கீழே விழுந்து விட்டது போல் தெரிகிறது. உடனே வரவும்' என்று கோவிந்தன் கூறித் தமது விலாசத்தையும் தெரிவித்தார்.

''மிஸ்டர், கோவிந்தன்! தங்களுக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய்ப் பணம் நாளைக்கே கொடுக்கிறேன். தாங்கள் அவளைப் பற்றிய விவரங்களைப் போலீசாரிடம் .....'' என்று வேதசாலம் கெஞ்ச ஆரம்பித்தார்.

''அப்படியானால் அவள் உண்மையான சாயா தேவிதானே! அவள் படம் வெளி வரும் சமயம் உயிருடன் இருந்தால் நல்லது தானே! படம் அமர்க்களமாக ஓடுமே!''

''ஓடும். ஆனால் நான் சிரமப்பட்டு விளம்பரம் செய்ததற்கு மதிப்பு இல்லாமற் போய் விடும். எல்லாப் பெருமையையும் அவள் அடித்துக் கொண்டு போய் விடுவாள். இப்போது படாதிபதிகள் நான் நீ என்று போட்டி போட்டு என்னைத் தங்களிடம் வேலை பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவள் நான் எனது விளம்பரத் திறமையால் சிருஷ்டித்த நட்சத்திரம் தானே? அவள் எனக்கு யமன்.....''

''படுபாவி! உன் பெருமைக்காகவே ஓர் உயிரைப் பலி கொடுத்தாயே?''

''அவள் கால் தவறி விழுந்து விட்டால் அதற்கு நான் என்ன செய்யட்டும்? கோவிந்தன்! ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுத்து விடுகிறேன். நீங்கள் மட்டும்....''

கோவிந்தன் தலையை ஆட்டிய போது, வேதசாலம் அவர் மீது பாய்ந்து தாக்கத் தயாராயிருந்தார். ஆனால் கோவிந்தன் இத்தகைய தாக்குதலை எதிர்பார்த்திருந்ததனால் அவனது இரண்டு கைகளையும் பிடித்து முதுகின் பின்புறம் திருப்பினார். அப்போது மோட்டார் வண்டிகள் வாசலில் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

கோவிந்தன் அவனைக் கீழே தள்ளி வீழ்த்தினார்.

''ஏய்! நீ விளம்பரத்தில் வெற்றி கிடைப்பதற்காகப் பெற்ற தாயைக்கூட கொன்று விடத் தயங்க மாட்டாய்!'' என்றார்.


''ஆமாம்! அதை உனக்கு யார் சொன்னது?'' என்று வேதசாலம் பெருமை ததும்பக் கேட்டான்.

போலீஸ்காரர்கள் அப்போது உள்ளே வந்தார்கள்.

அடுத்த இதழில் இன்னும் ஒரு மர்மக் கதை வெளியாகிறது

உங்கள் கேசத்தை அழகுபடுத்த நிரூபணமான பாமாலிவ் வழி





பாமாலிவ் பெர்ஃபியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்...

உங்கள் கேசத்திற்கு போஷாக்கு அளிக்கிறது. பாமாலிவ் உபயோகிப்பதால் நீண்ட, செழிப்பான கேசம் இயற்கையாக வளருகிறது. ரோஜா, லவண்டர் அல்லது மல்லிகை—இம்மூன்று வாசனைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.



பாமாலிவ் கோகோனட் ஆயில் ஷாம்பு...

உயர்தரமான தேங்காய் எண்ணெய்யுடன் தனிப்பட்டு தயாரிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற கலவை. இது அழுக்கு நீக்கம் செய்யும் ஷாம்பு என்பதுடன், ஒரு கூந்தல் அழகு சாதனமும் ஆகும். பாமாலிவ்வின் செழிப்பான நுரை கூந்தலுக்கு ஊட்டத்தைக் கொடுப்பதுடன் உங்கள் தலையையும் கூந்தலையும் ஆயதாக்கி பரிமள புத்துயிரூட்டுவதனால், புதிய ஆரோக்கியமான கேச வளர்ச்சி ஏற்படுகிறது.

நவநாகரீக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பியெடுப்பது பாமாலிவ்

அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

ராமகிருஷ்ணரது சீடர்களில் லாடுவுக்குத் தனி இடமுண்டு. அவன் சப்ரா என்ற மாவட்டத்தைச் சேர்ந்தவன். அவனுடைய வங்காளி மொழியே விசித்திரமாக இருக்கும். லாடுவுக்கு எழுத்தறிவும் கிடையாது. ஆனபடியால் அவன் பேசுவது எளிமையிலும் எளிமையாகக் குழந்தையின் மழலை எழிலுடன் இருக்கும். லாடுவுக்கு ராமகிருஷ்ணர் மீதிருந்த அன்புக்கு ஈடு இணை சொல்ல வேண்டுமானால் ராமகிருஷ்ணருக்கு அவன் மீதிருந்த அன்பைத்தான் சொல்ல வேண்டும். பகவானைக் குறித்து எப்படித் தவமோ, ஜபமோ புரியாமல், சேவை செய்தே பல எளியவர்கள் விமோசனம் பெற்றிருக்கிறார்களோ அப்படியே ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை புரிந்தே உயர்ந்தவன் லாடு. ''எஜமான் இதோ உங்கள் வேலைக்காரன்'' என்று அவன் கொச்சை மொழியில் சொல்லிக்கொண்டு அவருக்குக் குற்றேவல் புரியும் பணிவை மற்ற சீடர்களெல்லாம் ரசிப்பார்கள்.


ராமகிருஷ்ணரின் அந்திம தசையில் அவர், ''ஏது, இனிமேல் என்னால் இடத்தை விட்டே நகர முடியாது போலிருக்கிறதே! குழந்தைகாள், நீங்கள் தான் எனக்காக அருசி யில்லாமல், அசுத்தம் பாராமல் எல்லாம் செய்ய வேண்டியிருக்கும்! நான் என்ன செய்வேன்?'' என்று துயரத்துடன் கூறினார்.

லாடு உடனே, ''எஜமான், இதோ நான் உங்கள் தோட்டி யிருக்கிறேன்'' என்று கைகூப்பிக்கொண்டு தனக்கே உரிய உடைந்த வங்காளியில் கூறினான்.

கண்ணில் நீர் சேரும் அந்தத் தருணத்தில்கூட, லாடுவின் பச்சைக் குழந்தைத்தனமும், கொச்சை மொழியும் எல்லோரையும் சிரிக்க வைத்தது என்கிறார் 'ஸ்ரீராமகிருஷ்ண லீலா பிரஸங்கத்தை'த் தந்துள்ள ஸ்வாமி சாரதாநந்தர்.

லாடுவை ராமகிருஷ்ணர் பரம ஞானியாக மாற்றியதை ஓர் அற்புதமாகவே கருதினர் மற்ற சீடர்கள். இதனாலேயே அவர் ஸ்வாமி அத்புதாநந்தர் ஆனார். 'குருநாதர் இரும்பைப் பொன்னாக்கும் ஸ்பரிசவேதி. ஏன், அவர் அதற்கும் மேம்பட்டவர். ஸ்பரிசவேதியில் தங்கிய இரும்பு, தான் பொன்னான பின்பு வேறு உலோகங்களைப் பொன்னாக்கச் சக்தி பெறவில்லை. ஆனால் குருநாதரால் பொன்னான சீடனோ மற்றவர்களையும் பொன்னாக்குகிறான்' என்று ஜகத்குரு சங்கரர் பாடியிருக்கிறார். இப்படித் தாமும் பொன்னாகி, மற்றவர்களையும் பொன்னாக்கியவர்களில் லாடுவாகிய ஸ்வாமி அத்புதாநந்தர் ஒருவர்.

பார்க்கப் போனால் எளிமை நிறைந்த லாடுவை ஏன் இரும்பாகச் சொல்ல வேண்டும்? கல்லூரி மாணவர்களாகிய மற்ற சீடர்களைவிட அவரை ஏன் ஒருபடி தாழ்வாக எண்ண வேண்டும்? பட்டதாரிகள் எல்லாம் பாதம் பணிந்த ராமகிருஷ்ணர் எந்தக் கல்லூரியில் படித்தார்? ''எளியவர்களே பாக்கியசாலிகள்; ஏனெனில் தேவ சாம்ராஜ்யம் அவர்க



ளுக்கே உரியது'' என்று இயேசுநாதன் கூறியதற்கு விளக்கமல்லவா அவர்? இந்த முறையில் பார்த்தால் லாடு தான் அவரது இயற்கைச் சீடர் என்றே கூறலாம்.

பெயர் பொருத்தமாயிருக்க வேண்டுமென்பதற்காக லாடு அத்புதானந்தரானர். இயற்பெயரே சந்நியாச நாமமாகவும் பொருந்தும்படி வாழ்ந்த ஒரு சீடரும் ராமகிருஷ்ணருக்கு உண்டு. அவர்தான் நித்ய நிரஞ்ஜனர்; பிற்பாடு ஸ்வாமி நிரஞ்ஜனாநந்தர் எனப் பெயர் சூடிக் கொண்டவர்.

நிரஞ்ஜனன் ஏதோ உத்தியோகத்தில் அமர்ந்து விட்டான் என்று அறிந்த போது ராமகிருஷ்ணர் தவித்துப் போய் விட்டார். ''மற்ற மக்களுக்கு இதெல்லாம் சரி; ஆனால் இவ்விடத்துக்கு வர வேண்டியவர்கள் லௌகிகத் தொழிலில் ஈடுபடலாமோ?'' என்று வருந்தினார்.

''என் அன்னையின் வறுமைத் துயர் தாளாமலே வேலையில் அமர்ந்தேன்'' என்று கூறினான் நிரஞ்ஜனன்.

உடனே ராமகிருஷ்ணரது முகத்தில் மகிழ்ச்சி மலர்ச்சி கண்டது. ''அது தானே பார்த்தேன்! பணத்தாசை பிடித்து நிரஞ்ஜன் இப்படிச் செய்ய மாட்டான் என்று எனக்குத் தெரியும். அவன் அன்னைக்காக உழைத்தால் அவனை லௌகிகம் தொடாது. ஆமாம். அவனை எந்த அஞ்ஜனமும் (மாசு) தொடாது — அவன் நிர் அஞ்ஜனன் அல்லவா?'' என்றார்.

பிற்பாடு நிரஞ்ஜனன் அன்னையையும் மறந்துதான் துறவியானான்.

உலக நலனுக்காக ஓர் அணை கட்ட வேண்டுமெனில் அப்போது புனித ஸ்தலங்களைக் கூடச் சில சமயங்களில் மூழுகடிக்க நேரிடுகிறது. உலக நலனுக்காக ராமகிருஷ்ணர் தமது துறவி சிஷ்யர்களைப் பயிராக்கும்போது அவர்களுடைய தூய உறவுகளையெல்லாம்கூடத் துடைக்கத்தான் வேண்டியிருந்தது. ராமகிருஷ்ணரே சில சமயங்களில் வருத்தத்துடன் சொல்வார்: ''எத்தனையோ தாய்மார்களின் துயரத்துக்கு நான் காரணமாயிருந்திருக்கிறேன்'' என்று.

நிரஞ்ஜன் நல்ல பலசாலி. நெய்யைப் பெய்து கொண்டு வஞ்சனையில்லாமல் வியஞ்ஜனங்கள் சேர்த்துக் கொண்டு சாப்பிடுவான் நிரஞ்ஜன். ''இதோ பார் அப்பனே! வயசுப் பிள்ளை நீ இப்படிச் சாப்பிட்டாயானால் அப்புறம் இந்தப் பக்கத்துப் பெண்களையெல்லாம் காபந்து செய்ய வேண்டியதுதான்'' என்று ராமகிருஷ்ணர் கேலி செய்வார்;

"முணுக்" கென்றால் அவனுக்குக் கோபம் வந்து விடும். மற்ற சிஷ்யர்களுக்கே அவனிடம் சிறிது பயம்தான். ஒரு முறை அவன் கங்கையில் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து கொண்டிருந்த போது படகிலிருந்த சில பிரயாணிகள் ''என்ன மகாபட்ட ராமகிருஷ்ணர் வேண்டிக் கிடக்கிறது? அவரும்தான் வேளா வேளைக்கு நன்றாக ரஸகுல்லாவும், சந்தேஷும், சச்சடியுமாகச் சாப்பிட்டு வருகிறார்...'' என்றெல்லாம் தாறுமாறாகப் பேசி வந்தனர். நிரஞ்ஜனனுக்கு ஆத்திரம் தாளவில்லை. படகையே கவிழ்த்துவிடுமளவுக்குப் பெருஞ்சினம் மூண்டது. நல்ல வேளையாக அப்படி நேராமல் போனது கடவுள் செயல்தான்.

ராமகிருஷ்ணரின் காதுக்கு இவ்விஷயம் எட்டிற்று. ''கோபத்தைப் போல் வேறு பாபம் கிடையாது. உலகத்தவர் நாலு தினுசாகத்தான் பேசுவார்கள். அவர்களிடமெல்லாம் சண்டை பிடிப்பதென்று ஆரம்பித்தால் வாழ்க்கையில் வேறெதற்குமே பொழுதிருக்காது. இருந்தாலும் நிரஞ்ஜன், உனக்கு இத்தனை ஆத்திரம் உதவாது'' என்று அவனைக் கண்டித்தார்.


இவரே யோகீந்திரனை வேறு விதத்திலும் கண்டித்ததுண்டு. இதே போல் சிலர் ராமகிருஷ்ணரைப் பழித்தபோது யோகின் எதுவுமே விடை கூறாது மௌனமாயிருந்தான். இது அவருக்குத் தெரிந்தபோது ''யோகின், உன்னால் எப்படிப் பேசாமல் இருக்க முடிந்தது? குருவைப் பழிப்பவனை என்ன செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது, தெரியுமா?....'' என்று உஷ்ணமாகக் கேட்டார்.

நிரஞ்ஜனனுக்கு ஸத்துவம் தேவையாயிருந்தது. யோகினுக்கு ராஜஸம் தேவையாக இருந்தது. அவரவருக்குத் தகுந்த உபதேசத்தை அவரவருக்கு அளித்தார் ராமகிருஷ்ணர்.

ராமகிருஷ்ணர் சில சீடர்களுக்கு மந்திரோபதேசம் செய்திருக்கிறார். இன்ன மந்திரம் இன்னார் மனசில் பதியும் என்று தமது ஞானதிருஷ்டியால் கண்டு ''இது உன் மந்திரம்'' என்று கூறி அதனை உபதேசிப்பார் ராமகிருஷ்ணர். இவ்வாறு இந்தப் பாவனரால் மந்திரோபதேசம் பெற்ற பாக்கியசாலி ஸ்வாமி நிரஞ்ஜனாநந்தர்.

மகான்கள் ஞானதீட்சை அளிப்பதில் பல விதங்கள் உண்டு. வாக்கினால் தீக்ஷை அளிப்பார்கள்; ஒரே ஒரு

PARAMOUNT/AC-21


இதோ!
டினோபால்
புதிய டப்பி
நீங்கள் தான்
திறக்கலாம்!
Tinopal
டினோபால்—இப்பொழுது
கண்ணைக் கவரும் புதிய வண்ண டப்பியில்
எங்கும் கிடைக்கிறது.
இந்தப் புதிய அலுமினிய
டப்பியை நீங்கள் தான் திறக்கலாம்
என்னும் பிரத்தியேக முறையில்
அமைந்துள்ளது!
வெள்ளைத் துணிகளை மிக
வெண்மையாக்க ஒரு
சிறிதளவு டினோபால்
போதுமானது.
இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
சுஹ்ரித் கெய்கீ லிமிடெட், வடோதரா, பரோடா.
விற்பனை நிலையம்: சக்லேசர் பில்டிங், சர்ச்கேட், பம்பாய்-1. பி. ஆர்.

நோக்கினாலும் அளிப்பார்கள். அவர்களது ஒரு ஸ்பரிசமே ஞானானுபவத்தை அள்ளிக் கொடுப்பதும் உண்டு. ராமகிருஷ்ணரால் ஸ்பரிச தீக்ஷை பெறும் பாக்கியம் சிலருக்கே கிடைத்தது. இவ்வாறு அவரால் தீண்டப்பெற்று, உபநிஷதம் கூறுவது போல் இதய முடிச்சுக்களெல்லாம் அவிழ்ந்து, திவ்ய ரூபங்களைத் தரிசித்தவர் தாரக் கோஷால் என்ற சீடர். ராமகிருஷ்ணரின் அருமைச் சீடர்களில் ஒருவரான இவர் பிற்காலத்தில் சிவாநந்தர் என்ற துறவியானார்.

ராமகிருஷ்ணரிடம் வாய்மொழியான உபதேசம் பெற்று அதன்படி தியானம் புரிந்தான் காளி என்ற சீடன். தனது இஷ்ட தேவதை பல வடிவங்களில் தரிசனம் தருவதைக் கண்டு, அந்த அனுபவங்களைக் குருநாதரிடம் கூறுவான். ''ரொம்ப சரி. இனிமேல் இப்படித் தியானம் செய்'' என்று இன்னொரு வழியைச் சொல்லிக் கொடுப்பார் ராமகிருஷ்ணர். எல்லா திவ்விய உருவுகளும் ஒன்றிய ஓர் உருவினைத் தான் கண்டதாக ஒரு நாள் காளி கூறினான். ''பேஷ், பேஷ்! வைகுண்டதரிசனம் பெற்றுவிட்டாய்!'' என்றார் ராமகிருஷ்ணர். அதன் பின் காளியால் உருவம் படைத்த ஸகுண மூர்த்திகளைத் தியானம் செய்யவேமுடியவில்லை. எங்குமாக, எல்லாமாக உள்ள வஸ்துவைத்தான் அவனால் கிரகிக்க முடிந்தது. எளிதில் கிட்டும் பேறா இது? பக்தி மார்க்கத்தில் சென்ற காளி, வழிபாடு பெறும் தெய்வமும் வழிபடுகிற பக்தனும் வேறல்ல என்ற அபேத ஞானத்தை உணர்ந்து அபேதாநந்தரானார்.

ராமகிருஷ்ணரின் ஒவ்வொரு சீடரைப் பற்றியும் எழுதுவதும் படிப்பதும் புண்ணிய தீர்த்தத்தில் நீராடுவது போன்ற ஆனந்தத்தைத் தரும். இந்தத் தீர்த்தங்கள் எல்லாம் விழும் கடலில் இணைப்பதே இந்தத் தொடரின் நோக்கம். ஆனபடியால், தீர்த்த ஸ்நானத்தையெல்லாம் மிகவும் குறைத்துக் கொண்டு கதையை விட்ட இடத்தில் தொடங்க வேண்டியதுதான்.

எவ்வளவுதான் குறைத்துக் கொண்டாலும் சிலரைப் பற்றிக் குறிப்பிடாதிருக்க முடியவில்லை.

லாடு பணி விடை புரிந்தே ஞானத்தைச் சம்பாதித்துக் கொண்டானெனில் சசியோ பணிவிடை புரிவதற்காகவே ஞானத்தையும் கழற்றி வைத்தான்.



நீதிபதி: பிரதிவாதியை நீ அடித்ததற்காக உனக்கு ஐந்து ரூபாய் அபராதம்!
வாதி: இந்தாருங்கள், பத்து ரூபாய்!
நீதிபதி: உனக்கு ஐந்து ரூபாய்தானே அபராதம் விதித்தேன். எதற்கு இரட்டிப்பாகக் கட்டுகிறாய்?
வாதி: இருக்கட்டுங்க! அந்தப் பயலை இன்னொரு கை பார்த்து விடுகிறேன்.

ராமகிருஷ்ணர் மறைந்த பின், 'குருபாயிக்கள்' எனப்படும் சக சிஷ்யர்களெல்லாம் ஒன்று சேர்ந்து வசித்தபோது சசி அவர்களுக்குத் தாயாக இருந்ததைப் பின்னால் படிக்கப் போகிறோம். ராமகிருஷ்ண தர்மத்தை ஒரு வற்றாத செல்வமாக வழங்கும் வங்கியாகச் சென்னையில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் ஸ்தாபகரான ஸ்வாமி ராமகிருஷ்ணாநந்தாஜி மகராஜ்தான் இந்த சசி.

தந்தையின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ராமகிருஷ்ணரிடம் வந்து, அவரது அருள்வலைக்கு ஆட்பட்ட சாரதா பிற்காலத்தில் திரிகுணாதீதாநந்தர் ஆனார்.

சீடர்களில் வயசில் பெரியவராயினும் மூத்த கோபால் தமது உள்ளத் தூய்மை காரணமாக, பர்தா முறை அநுசரித்த சாரதையையும் சகஜமாகக் கண்டு பேச அநுமதி பெற்றிருந்தார். இவரே அத்வைதாநந்த ஸ்வாமியானார்.

'மூத்த' கோபாலைப் பற்றிச்சொன்னதால் இளைய கோபால் என்று ஒருவர் இருந்திருக்க வேண்டும் என ஊகிப்பீர்கள். இளைய கோபாலை 'ஹுத்கோ' கோபால் என்று அழைப்பார் ராமகிருஷ்ணர். இளைய கோபால் எப்படி வருகிறான், எப்படிப் போகிறான் என்பதே தெரியாமல் திடீர் திடீரென்று ஆவிர்பவித்து அதே போல அந்தர்தானமானதை ஒட்டியே 'ஹுத்கோ' என்ற விருது பெற்றான்.

ராமகிருஷ்ணருடனேயே தங்கியிராமல் அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்த ஹரியும், கங்காதரனும் பிற்காலத்தில் துரீயாநந்தரும் அகண்டாநந்தரும் ஆனார்கள்.

இந்த அற்புத சிஷ்யர்களைப் பற்றியும், இவர்களின் அற்புத குருவைப் பற்றியும் சொல்லும் ஒருவரை நாம் மறக்க முடியுமா? 'ஸ்ரீஸ்ரீ ராமகிருஷ்ண லீலா பிரஸங்கம்' என்ற திவ்விய சரித்திரத்தை நமக்குத் தந்துள்ள சாரதாநந்தாஜி ஸ்வாமியால்தான் இன்றும் நாம் ராமகிருஷ்ணருடன் வாழ முடிகிறது. சாரதாநந்தரின் பூர்வாசிரமப் பெயர் சரத் சந்திர சக்கரவர்த்தி என்பது. திடகாத்திர சரீரமும், நிஷ்ஷ்ய புத்தியும் கொண்ட சரத்சந்திரன் வகுப்பிலேயே முதல் மாணவனாக இருந்தான். படிப்பில் மட்டுமின்றி, பேச்சுப் போட்டிகளிலும் அவனுக்குத்தான் முதலிடம். சாதாரணமாக வாக்கு வன்மை, வாதத்திறன் இவை கண்டவத்தின் போதே சிறப்பாக வெளிப்படும். ஆனால் சரத்கால சந்திரன் போன்ற இனிய உள்ளம் படைத்த சரத்சந்திரன் யாரையும் எதையும் பற்றிக் காரசாரமாகப் பேசாமலே விரு விருப்புடன் உரையாற்றுவான்.

சேவை என்பது அவனுடைய உடலோடு பிறந்திருந்தது. தொந்துநோய் என்பதைக் கூடப் பாராமல் அண்டைப்புறத்தில் உள்ள நோயாளிகளுக்கு சுசுருஷை செய்வான் அவன். குழந்தையாயிருந்ததிலிருந்து இறையுணர்வு நிரம்பப் பெற்றவன் அவன். விளையாட்டே வாழ்க்கையா யிருந்த காலத்தில் தெய்வப் பதுமைகளை வைத்துப் பூஜைசெய்த அவன் பெரியவனான பின் வாழ்க்கையே ஒரு விளையாட்டு என்பதைப் புரிந்து கொண்டான். கல்லூரியில் சேர்ந்தபின் பிரம்ம சமாஜத்தினால் கவரப்பட்டு வாழ்க்கை விளையாட்டைப் பகுத்தறிவின் மூலமே விளங்கிக் கொள்ள முயன்றான். முடிய வில்லை. மனசு நொய்ந்து போனான்; நொந்து போனான். அப்போதுதான் பிறவி எடுக்கதன் பயனாக ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிக் கேள்வியுற்றான். தனது உறவினருகிய சசியை (பிறகு ராமகிருஷ்ணாநந்தானவர்)யும் அழைத்துக் கொண்டு தக்ஷிணேசுவரத்துக்கு வந்தான். காகிதப் பூவைச் சுற்றி வந்த வண்டு நறுமலரை அடைந்தது போல, ஆத்ம ஞானத்துக்காக பிரம்ம சமாஜத்தை நாடிய தனது தேவையை நிரப்பும் அநுபவத் தேனை உண்மையில் தேக்கி நின்றவர் இவரே என்று கண்டு கொண்டான். முதலில் குருவாரம் தோறும் குருவை வந்து தரிசித்தான். பிறகு நரேந்திர நாதனிடமிருந்து அவரின் மகிமையை முற்றிலும் புரிந்து கொண்டான். (நரேன் ராமகிருஷ்ணரை அடைந்து இப்போது இரண்டாண்டுகளாகி யிருந்தன.) இதன் விளைவாக அடிக்கடி ஆசாரியரை அடைந்து உபதேசம் பெற்று வந்தான்.

சரத்சந்திர சக்கரவர்த்தி மன நிலையில் சக்கரவர்த்தியாகவே இருந்தான். இன்ன தெய்வத்தைக் காண வேண்டும் என அவன் ஏங்கவில்லை. சகல ஜீவராசிகளையும் தெய்வமாகக் காண வேண்டும் என்றே அவன் விரும்பினான். இது தான் சகல சாதனைகளுக்கும் எல்லை நிலம் என்றும், இதனை எளிதில் எய்த முடியாது என்றும் கூறினார் ராமகிருஷ்ணர். ஆனால் அவன் பிடிவாதமாயிருந்தான். சாதாரண மன்னன் எனில் குறு நிலம் போன்ற சிறிய லட்சியங்களில் நிறைவு கண்டு விடலாம். இந்தச் சக்கரவர்த்தியோ ஆத்ம சாம்ராஜ்யமாக உலகம் முழுவதையுமே சேவையால் ஆள்வதற்கு விரும்பினான். "சரி, நரேந்திர நாதனுடன் நெருக்கமாகப் பழகி வா. உன் அபீஷ்டம் பூர்த்தியாகும்" என்றார் ராமகிருஷ்ணர்.

ராமகிருஷ்ண சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் சரத்சந்திரன் மருத்துவக் கல்லூரிப் படிப்புக்கு மங்களம் பாடி விட்டு, வீட்டாருக்குத் தெரியாமல் குருநாதருடனேயே இருந்து சுசுருஷை செய்து வந்தான். குருநாதர் மறைந்தபின் குருபாயிக்கள் வீடு வாசலைத் துறந்து தங்களுக்கென ஒரு மடத்தை அமைத்துக் கொண்டனர். அப்போது சரத்சந்திரன் வெளியேற முடியாதபடி அவனது தந்தை வீட்டின் ஓர் அறையில் அவனை வைத்துப் பூட்டி விட்டார். இதுவும் அவனுக்கு ஒரு நன்மையாகவே அமைந்தது. எந்தவித இடையூறும் இன்றி அமைதியாக நிஷ்டை புரிந்தான்: எனினும், துறவு ஆர்வம் விழுமி நின்ற ஒருவரை வீட்டில் அடைத்து வைப்பது காற்றைக் கூண்டில் பிடித்து வைப்பதற்குச் சமானமல்லவா? சரத் சந்திரர் குருபாயிக்களின் உதவியால் வெளியேறினார். சாரதாநந்தரானார்.

பிற்காலத்தில், மேல்நாடுகளில் வேதாந்தப் பிரசாரம் புரிந்து ஸ்வாமி விவேகாநந்தரின் பணியை உறுதிப்படுத்தினார் சாரதாநந்தர். அதன்பின் புனித சாரதாமணிதேவி நிர்யாணம் அடையும் வரை அவருக்கு ஊழியம் செய்து சாரதா சேவாநந்தராக இருந்தார். தமது பணிகளுக்கு மணி முடியாகக் குருநாதனின் சரிதாமுதத்தை வங்காளி


இத்தனை சுறுசுறுப்பாக நான்
என்றுமே இருந்ததில்லை!
சக்திக்கும்
வலிமைக்கும்
போர்ன்-வீடா
Cadbury's
BOURN-VITA
THE IDEAL
FOOD DRINK
MADE BY CADBURY'S
SPECIALISTS IN FOOD
DRINKS FOR 100 YEARS
BOURN-VITA
தயாரிப்பாளர்கள் Cadbury's


உங்கள் சோபை
பன்மடங்காகத்
திகழ்கிறது
பின்டெக்ஸ்
கைநெசவுப் புடவை
உடுக்கும்போது
பின்னியின்
மேற்பார்வையில் நெசவாளி அவர்களால் விற்பனையாவது
பொலிவுக்கும், புதுமைக்கும், பண்புமிக்க தேர் பின்டெக்ஸ் புடவை. நம்பிக்கைக்கு உகந்த, நயமிக்க பின்டெக்ஸ் கைநெசவுப் புடவை. பின்னியின் மேற்பார்வையில் தயாராகும் இச்சேலைகளில் சிறந்த நூலே பயன்படுகிறது. ஒரே சீரான நீள, அகலத்தில் தயாராகும் இவை கெட்டிச்சாயத்திற்கும், நீடித்த உழைப்புக்கும் புகழ்பெற்றவை.
FABRICS
உங்களுக்குத் தேவையான பின்டெக்ஸ் கைத்தறித் துணிகளை இந்த அடையாளம் காணும் அனுமதி பெற்ற பின்னி விற்பனையாளரிடமிருந்து வாங்குங்கள்.
பின்னி & கம்பெனி (மதருஸ்) லிமிடெட், மதருஸ்

மொழியில் விரிவாக ஐந்து பகுதிகளில் எழுதி வெளியிட்டார். அப்படியும் அது பூர்த்தியாகவில்லை. சாரதை, பிரம்மானந்தர் முதலியவர்கள் இந்த உலகை விட்டு ஏகியபின் சாரதாநந்தருக்குத் தமது மகா காவியம் உள்பட எதிலுமே ஈடுபாடில்லாமல் போயிற்று. ஸ்வாமி விவேகாநந்தரின் எல்லாச் சீடர்களையும் வரவழைத்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய உபதேசத்தை யெல்லாம் செய்தார். பல்லாண்டுகள் தூய சந்நியாச வாழ்க்கை வாழ்ந்து உலகில் தூய்மையைப் பரப்பிய திருப்தியுடன் தமது அறுபத்திரண்டாவது வயசில் ஆசாரியரையும், அன்னை சாரதையையும், அன்பர் விவேகாநந்தரையும் அடைந்தார்!

உள்ளத்தின் சமநிலை ஒருபோதும் பிறழாத ஸ்திதப்ரக்ஞர் அவர். ஒருமுறை அவர் ராவல்பிண்டியிலிருந்து ஸ்ரீ நகரத்துக்கு மலைப் பாதையில் சாரட்டுப் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது வண்டிக் குதிரை வெறிபிடித்தாற் போல் திடீரென்று கிடுகிடு பள்ளமொன்றில் இறங்கி விட்டது. அதிருஷ்டவசமாக, சரிவிலே முளைத்திருந்த ஒரு மரம் குறுக்கிட்டுக் குதிரையின் கதியைத் தடுத்தது. ஸ்வாமி சாரதாநாதர் சாவதானமாக வண்டியிலிருந்து இறங்கினார். அதே தருணத்தில் மலைமுகடொன்றில் தொத்திக் கொண்டிருந்த பெரும்பாறை ஒன்று எப்படியோ உருண்டு அந்த இடத்துக்கு நேராக விழுந்தது. சாரதாநந்தருக்கு ஒரு சில அடிகளே தள்ளி, குதிரையின்மீது அது விழுந்து அந்தப் பிராணி உயிரிழந்தது. தமது மனசை எப்போதும் பரவெளியில் நங்கூரம் பாய்ச்சியிருந்த சாரதாநந்தர் மிகவும் அமைதியாகக் குதிரையின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தனை புரிந்தார்.

''சரத் சந்திரனின் உள்ளம் கடலைப் போல் ஆழ்ந்தது; வானம் போல் விரிந்தது'' என்று விவேகாநந்தர் கூறுவார். ராமகிருஷ்ணரோ அவரை இயேசுவின் பிரதம சீடரில் ஒருவராகவே கருதினர்.

உலகுக்கு ஒளியூட்ட வென்றே பிறந்த தமது முக்கியமான சிஷ்யர்களைத்தான் ராமகிருஷ்ணர் துறவறத்தில் ஈடுபடுத்தினார். அவர்களுக்கு மட்டும்தான் குடும்பமும், உத்தியோகமும் கூடாது என்று விதித்தார். மற்றபடி, துறவறத்தின் ஒப்பற்ற தூய்மையை அவர் அடிக்கடி கூறி வந்த போதிலும், உலகினர் யாவருமே அப்படி ஆவார்கள் என எதிர்பார்க்கவில்லை; அப்படி ஆக வேண்டும் என்று நினைக்கவும் இல்லை. இல்லறத்தில் இருந்துகொண்டு பரகதிக்கு வழி தேடிக் கொள்ளும் உபாயங்களை அவர் உலகத்தவர்களுக்கு உபதேசித்து வந்தார். ராமகிருஷ்ணரிடம் ஒரு பிரம்மசாரி சிஷ்ய கோஷ்டிசேர்ந்தது போலவே கிருஹஸ்த சிஷ்ய கோஷ்டியும் சேர்ந்தது.

அவர் நிகழ்த்திய அற்புதம்

பதவியைத் துறக்கத் தீர்மானித்து விட்டதனால்தானோ என்னவோ டாக்டர் அடினர் (பக்கத்திலுள்ள படம்) கொஞ்சம் அதிகமாகவே துணிந்து பேசியிருக்கிறார். ருஷ்யாவுக்குக் கோதுமை முதலியன அனுப்பி பிரிட்டன் வியாபாரம் செய்வதை, தன்னைக் கொல்ல வேண்டிய கசாப்புக் கடைக்காரனைத் தானே தேர்ந்தெடுக்கும் கன்றுக் குட்டியுடன் ஒப்பிட்டுப் பேசினார் அடினர் சில தினங்களுக்கு முன். இப்போது அவரிடமிருந்து மேற்கு ஜெர்மானியப் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ள விருக்கும் டாக்டர் லுட்விக் எர்ஹார்ட் (பொருளடக்கப் பகுதியில் உள்ள படம்) இந்நாள் வரை மேற்கு ஜெர்மனியின் பொருளாதார மந்திரியாக விளங்கியவர். உலக யுத்தத்துக்குப் பின் வெறும் சாம்பல் குவியலாகவும் மண்மேடாகவும் கிடந்தது மேற்கு ஜெர்மனி. தனியாரின் தொழிலுரிமைக்குப் பூரண சுதந்திரம் அளித்தே அந்நாட்டை உருத்தெரியாத அளவுக்கு மாடமாளிகைகளும் எண்ணற்ற தொழிற்கூடங்களும் நிறைந்த நாடாக ஏதோ மாயா ஜாலம் போல் மாற்றி அமைத்தார் எர்ஹார்ட். பொருளாதார நிபுணர்களெல்லாம் இதனை எர்ஹார்ட் நிகழ்த்திய அற்புதம் எனக் கூறி வியக்கின்றனர்.



பிரதமர் பதவியை இவர் ஏற்றபோதிலும் அடினர் ஆளும் கட்சியான ஸி. டி. யூ. கட்சியின் தலைவராகப் பணியாற்றி வருவார். ஆகவே எர்ஹார்ட் அரசாங்கத்தில் அவருக்கு ஒரு பிடிப்பு இல்லாமல் போகாது!

மகா பாரதத்தில் இல்லறத்தானின் பெருமையை விளக்கும் போது அவன் தான் மற்ற மூன்று ஆசிரமத்தவர்களை யும் ரட்சிப்பவன் எனக் கூறப்படுகிறது. இவ்வகையில் ராமகிருஷ்ணரின் உணவு, உடை, இருக்கை முதலிய தேவைகளைக் கவனித்து அவருக்கு ஊழியம் செய்த கிருஹஸ்த சிஷ்யர்களுக்கு நமது விசேஷ மதிப்பு உரித்தாகிறது.

''ராமகிருஷ்ணருக்கு என்ன? நன்றாக வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று சிலர் கூறியதாக முன்பு படித்தோமல்லவா? இதில் தான் இந்த சந்நியாசியின் தனித் தன்மை இருந்தது. எப்படி மனைவியை அருகில் வைத்துக் கொண்டே அவர் துறவறம் காப்பாற்றினாரோ, அப்படியே உணவு, உடை முதலியவற்றையும் விலக்காமலே ஆத்ம சம்பத்தை வளர்த்துக் கொண்டார். சுருக்கமாகச் சொன்னால் அவர் மனிதனாகவே வாழ்ந்து, சாமானிய மனிதர்களுக்கு உரிய சூழலிலேயே வாழ்ந்து, பரதத்துவத்துக்கு விளக்கமாக இருக்க விரும்பினார். காட்டையோ குகையையோ தேடிச்சென்று அவர் தவம் இருந்திருக்கலாம். தமது யோக சக்தியால் உணவைப் பற்றியும், உடையைப் பற்றியும் சிந்தனையில்லாமல் தியானத்தில் இருந்திருக்கலாம். ஆனால் அவர் உலகோடு வாழ விரும்பினார். உலகினர், சூழலால் தங்கள் இயல்பு மாறி விடாது என்பதாகத் தங்களின் அகப் பெருமையில் நம்பிக்கை கொள்ளுமாறு அவர்களில் ஒருவராகவே வாழ்ந்தார்.

''அம்பிகே! என்னை வறட்டு ஞானியாக்கி விடாதே! என்னில் ஈரத்தை ஊறச் செய். நான் மக்களோடு பேசிச் சிரிக்கவும், உண்டு உடுத்திக் களிக்கவும் அருள் புரி'' என்றே அவர் பவதாரிணியைப் பிரார்த்தித்து வந்தார். தேவியும் தமது வேண்டுகோளுக்கிணங்கி, தாம் இவ்வுலகில் வாழ வசதியளிக்கவே நால்வரை அனுப்பினாளென அவர் கூறுவார்.

இவர்களில் மதுரா நாதர் முதல்வர் என்று நாம் சொல்ல வேண்டிய அவசியமே யில்லை. அவர் பதினாலாண்டுகளுக்கு ராமகிருஷ்ணரைக் கண்ணில் வைத்து இமையால் மூடிப் பராமரிக்கும் பாக்கியம் பெற்றிருந்தார். அவருக்குப் பின் ராமகிருஷ்ணரது தேவைகளை சம்பு சந்திர மல்லிக் கவனித்து வந்தார். கேசவ சந்திர சேனரும் மற்ற பிரம்மசாரிகளும் ராமகிருஷ்ணரை அடையும்வரை சம்பு சந்திரரே அவருக்குத் திரவிய உருவில் பணிவிடை புரிந்து வந்தார். இதன்பின் அவர் தேகத்தைத் துறக்கும் வரையில் சுமார் **ஆறு ஏழு ஆண்டுகளுக்கு** ராமகிருஷ்ணருக்கு மட்டுமின்றி, அவரது சீடர்களுக்கும் கைங்கரியம் செய்தவர்களில் முக்கியமான ஒருவர் சுரேந்திர நாத் மித்ரா என்ற சுரேஷ் பாபு. ராமகிருஷ்ணர் மறைந்தபின் குருபாயிக்கள் வரநகரத்தில் ஒன்றுகூடி வசிக்கவும் வசதி செய்து தந்தவர் இவரே. இவரது இல்லத்தில்தான் ராமகிருஷ்ணரை நரேந்திர நாத தத்தா முதல் முறையாகக் கண்டது. எனினும் சுரேஷ் பாபுவை ராமகிருஷ்ணர் தமது நாலு கிங்கரர்களில் ஒருவராகக் கருத வில்லை. 'அரை கிங்கரர் அவர்' என்றே கூறுவார். அப்படியானால் ராமகிருஷ்ணரின் கணக்குப்படி இன்னும் ஒன்றரை சேவார்த்திகள் மீதமிருக்கிறார்கள் அல்லவா? 'அவர்கள் யார் என்று நாம் எப்படிச் சொல்ல முடியும்?' என்று கேட்கும் சாரதாநந்தர் ஒருவாறு அநுமானம் செய்கிறார். ராமகிருஷ்ணரும், சீடரும் உண்ணவும், உடுக்கவும் சுரேந்திரநாதருடன் தமது பொருளைப் பயனுக்கிய பலராம் பாபுவைப் 'பாதி' கிங்கரராகக் கருதலாம். மீதமிருக்கும் ஒருவர்—அவர் இந்தியரே அல்ல! ஆணும் அல்ல. எங்கோ அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து, விவேகாநந்தரால் இந்தியராகி வங்காளத்துக்கு வந்து சேர்ந்த ஸ்ரீமதி ஸாரா புல் அம்மைதான் அந்த நாலாமவர். ராமகிருஷ்ணர் மறைந்தபின் அவருக்கு எப்படிக் கைங்கரியம் செய்ய முடியும் என யோசிக்கிறீர்களா? ஆனால் ராமகிருஷ்ணர் இன்றும் பேலூரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் வசிக்கவில்லையா? அந்த மடத்தை நிறுவித் தனது பொருளுக்குப் பொருள் பெற்றவளே ஸ்ரீமதி ஸாரா புல்.

மணிமோகன் மல்லிக், ராமசந்திர தத்தா ஆகியோரும் ராமகிருஷ்ணரது கிருஹஸ்த சிஷ்யர்களில் குறிப்பிட வேண்டியவர்கள்.

ராமகிருஷ்ணரது வாழ்க்கையை எழுத்தில் வடித்த சாரதா நந்தருக்கு எப்படி அவரது சீடர்களிடையே தனியிடம் உண்டோ அவ்வாறே அவரது மொழியமுதத்தை உள்ளபடி குறித்து வைத்துக்கொண்ட மஹேந்திரநாத குப்தாவுக்கும் விசேஷமான இடம் உண்டு. 'எம்' என்ற ஓர் எழுத்தில் ஒளிந்து கொண்டிருந்தவர் அவர். பள்ளித் தலைமை ஆசிரியரா யிருந்த குப்தா ராமகிருஷ்ணரை ஆசாரிய புருஷராக அடைந்து அவரது அருள் உரைகளை எல்லாம் தொகுத்து வழங்கியிருக்கிறார். இவர் பள்ளி ஆசிரியர் என்பதால் ராமகிருஷ்ணரே இவரை 'மாஸ்டர்' என்று தான் அழைப்பாராம்! (தொடரும்)

மாடல் UW-153

* ஆல் வேவ் A/C
* 3 பாண்டுகள், பியானோ கீ இணைக்கப்பட்டது.
* அழகிய நூதனமான குரல் கட்டுப்பாடு சுவிச்.


ரூ. 360.00

(எக்சைஸ் டூட்டி உள்பட - உள்ளூர் வரி தனி)

புதிய மாடல்

உவகை யளிப்பது

ஷார்ப் - ஜங்கார் ஒரு அதிசயிக்கத்தக்க நண்பன். பாகுபாடறிந்தவர்கள் விரும்பி வாங்குவது. உங்களுக்கு இன்றியமையாதது.



Sharp

JHANKAR

டிரேன்சிஸ்டர் ரேடியோக்கள் தயாரிப்பதில் தலைசிறந்தவர்கள்.
ரேடியோ டிவிஷன்
இன்டியன் பிளாஸ்டிக்ஸ் லிட்.,
பம்பாய்—67.

JHANKAR



ஹயாகவா எலக்ட்ரிக் கம்பெனி லிட்., ஜபான், தொழில் நுட்பக் கூட்டுறவோடு தயாரிக்கப்பட்டது.

உங்கள் அருகாமையிலுள்ள ஷார்ப்-ஜங்கார் டீலரை அணுகுங்கள்

மதராஸ், ஆந்திரா, கேரளா, மைசூர் பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள்

ஜெய் ஓபோன் கம்பெனி, 13, தங்கசாலைத் தெரு, மதராஸ்

பெண் பார்க்கும் பைரவர்

அனுசுயா

அன்று முக்தா வீட்டுக்கு அவள் சிநேகிதிகளான மஞ்சுளா, பாமா, உஷா முதலியவர்கள் வந்திருந்தார்கள்.

''புது தினுசாக மேக்கப் செய்துகொண்டால் போர்ன்விட்டா தாகம் எடுக்கும் போலிருக்கு'' என்று பாமா கூறி இரண்டு மூன்று தரம் விக்கினாள்.

''ஓஹோ! உன் 'மேக்-அப்' பற்றி விசாரிக்கவில்லை என்று கோபமா?'' என்று மஞ்சுளா கேட்டு அவள் முகத்தின் பக்கத்தில் போய் அதைக் கூர்ந்து கவனித்தாள்.

உஷா அவள் கன்னத்தில் ஓரிடத்தை ஒரு விரலால் அழித்துப் பார்த்தாள், மா, பசை ஏதாவது ஒட்டிக் கொள்கிறதோ என்று!

''எனக்குத் தவடை கொஞ்சம் பெரிசு. அதனாலே மரத் தட்டு முகம் என்றுகூடச் சொல்வார்கள். ஆனால் இப்போது கோழி முட்டை மாதிரி இல்லே?'' என்று பாமா கேட்டாள்.

''கோழிக்குக் கோபம் வரப் போகிறது!'' என்றாள் மஞ்சுளா.

''இந்த உருவம் உள்ளதாகக் காண்பிக்கிறதற்காக என்ன செய்தேன். தெரியுமா? தலையை ஒரு பக்கமாகத் தூக்கிவாரி விட்டுக் கொண்டிருக்கிறேன். காதுகளுக்கு மேலே கொஞ்சம் மயிர் வரும்படி இழுத்து விட்டிருக்கிறேன். காதுகளுக்குக் கீழ்ப் பக்கம் கன்னத்திலே பௌடரைக் கொஞ்சம் 'திக்'காகத் தேய்த்துத் தவடைப் பக்கம் இலேசாக இழுத்து விட்டிருக்கிறேன்'' என்று பாமா விவரம் கூறினாள்.

''ஐயோ, பாவம்! நாலு நாள் முன்னாடி உன்னைப் பார்த்தபோது நன்றாய்ப் பேசிக் கொண்டிருந்தாயே. இப்போது என்னென்னமோ சொல்கிறாயே?'' என்று அவளைப் பரிகசித்தாள் மஞ்சுளா.

''நேற்று என் அப்பாவின் சிநேகிதர் ஒருவருடைய பெண்ணை வரன் பார்க்கவந்திருந்தார்கள். அதற்காக என்னை அலங்காரம் செய்துவிடச் சொன்னார்கள்; போயிருந்தேன். இன்றைக்கு நானும் எனக்குச் செய்து கொண்டு பார்த்தேன்.''

''யாரு! கழுத்து கொக்கு மாதிரி இருக்குமே, அந்தப் பெண்ணா?'' என்று மஞ்சுளா கேட்டாள்.

''ஆமாம், அவளேதான். சுந்தரி என்று பெயர். உள்ளங் கழுத்தோடு இருக்கும்படியாக ஒரு நெக்லஸைப் போட்டேன். காலர் வைத்துத் தைத்த ஜாக்கெட்டைப் போட்டுக் கொள்ளச் சொன்னேன்.''

''என்ன நடந்திருக்கும் என்று நான் சொல்லட்டுமா?'' என்று உஷா ஆரம்பித்தாள். ''பெண்ணைப் பார்த்ததும் பிடித்துப் போயிருக்கும். கழுத்து மெல்லிசாக இல்லை, அது ஒன்றே போதும் என்று நினைத்திருப்பான். உடனே தன் அப்பா பக்கம் திரும்பி, 'ஏன் அப்பா என்றைக்குத் தாலி கட்டலாம்?' என்று கேட்டிருப்பான். இல்லையா, பாமா!''


''அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. வழக்கம் போல் 'நாங்கள் போய்க் கடிதம் போடுகிறோம்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தில் ஒரு தபால் கார்டு கிடந்தது. தவறிப் போய்க் கீழே விழுந்திருக்கிறது. அதில்,

'அநேக நமஸ்காரங்கள். தங்கள் குழந்தையை அன்று நாங்கள் பார்த்து விட்டு வந்தது ஞாபகமிருக்கும். பெண்ணை எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால்.........

தங்கள்,

என்று இருந்தது. கடையில் நாலு வரி எழுதும்படியாக இடம் காலியாயிருந்தது.''

''சரிதான். இது மாதிரி தயாராய்க் கடிதங்கள் எழுதி வைத்துக் கொண்டிருப்பார்கள் போலிருக்கிறது. காலியாய் இருக்குமிடத்தில் தங்கள் முடிவை எழுதிப் பூர்த்தி செய்து அனுப்பி விடுவார்கள் போலிருக்கிறது..... 'ஆனால் என் பிள்ளை இன்னும் நாலு வருஷங்களுக்குக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்கிறான்' 'தங்கள் பெண்ணைப் பார்த்து விட்டு வெளியில்



வந்துகொண்டிருந்தபோது சரியான சகுனம் ஆகவில்லை' என்று இது மாதிரி ஏதாவது எழுதி அனுப்பி விடுவார்கள்.''

''சில சமயம் பிள்ளைக்கு அக்காவோ, தங்கையோ பெண்ணைத் தனியே அழைத்துப் போய்ப் பேச்சுக் கொடுத்துப் பார்ப்பாள். அவள் பெண் எப்படிப் பட்டவள் என்று துப்புக் கண்டுபிடித்து விடுகிறாளாம், துப்பு!'' என்று பாமா சொன்னாள்.

''துப்பு என்றதும் ஞாபகம் வருகிறது. என் பெரியப்பா பெண்ணைப் பார்க்க வந்தார்கள். கூடப் பைரவரையும் அழைத்து வந்திருந்தார்களாம்....'' என்று மஞ்சுளா ஆரம்பித்தாள்.

''பைரவர் என்றால்?''

''நாய்!'' என்றாள் முக்தா.

''ஆமாம். அதுவும் பெண் பார்க்க வந்திருந்தவர்களுக்குப் பக்கத்தில் இருந்தது!''

''அதற்கும் டிபன் உண்டா?''

''ஓ! காப்பி கூடச் சாப்பிட்டது. வெற்றிலை பாக்குத்தான் போட்டுக்கொள்ளவில்லை. வந்திருந்தவர்கள் கிளம்பப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். அப்போது பிள்ளைக்கு அப்பா நாயைப் பார்த்து, 'என்ன டிக்கி, நீ பார்க்க வேண்டாமா!' என்றார். அது உடனே எழுந்து போய்ப் பெண்ணுக்கு எதிர்த்தாற்போல் நின்றுகொண்டு அவளைப் பார்த்தது. அவளைச் சுற்றிச் சுற்றி வந்து அவளை மோப்பம் பிடித்தது. பிறகு பிள்ளை பக்கம் திரும்பி அவனை ஏறிட்டுப் பார்த்து விட்டு மறுபடியும் பெண்ணைக் கவனித்தது. அது ஏதோ பெண்ணையும் பிள்ளையையும் ஒப்பிட்டுப் பார்ப்பது போலவே இருந்தது. பிறகு வாலைக் குழைத்துக்கொண்டு பெண்ணின் காலடியில் படுத்துக்கொண்டு அவள் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டது. உடனே பிள்ளைக்கு அப்பா, என் பெரியப்பாவைப் பார்த்து, 'எப்போது முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம்?' என்று கேட்டார்.''

மஞ்சுளா இந்த விவரங்களைச் சொல்லி முடித்து இரண்டு மூன்று நிமிஷங்களாகியும் மற்றவர்கள் பேசவில்லை. ''என்ன சங்கதி?'' என்று அவள் கேட்டாள்.

''ஒன்றுமில்லை. பாக்கிக் கதையையும் அளந்து விடேன்'' என்றாள் உஷா.

''நிஜமாகச் சொல்கிறேன். ஒரு நாயையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். திருடினவர்களையே கண்டு பிடித்துவிடும் அது ஒரு பெண் எப்படிப்பட்டவள் என்று கண்டுபிடித்து விடாதா?'' என்றாள் மஞ்சுளா.

''என் அண்ணா என்ன செய்தான் தெரியுமா? பெண்ணைப் பற்றியே அவன் இலட்சியம் செய்யவில்லை. அம்மாவிடம், 'எனக்குப் பெண்ணின் அப்பாவைப் பிடித்திருக்க வேண்டும். இல்லாத போனால் பெண் எவ்வளவு அழகாக இருந்தாலும் நான் சம்மதிக்க மாட்டேன்' என்று கண்டித்துக் கூறி விட்டான்.''

''மாமனார் பார்க்கிறதாமே! இது புதுத் தினுசா யிருக்கிறதே!''

''மாமனாராக வரக் கூடியவர் தனக்கு உதவி செய்பவராக இருக்க வேண்டும்; தன்னை முன்

ணுக்குக் கொண்டு வரக்கூடியவரா யிருக்க வேண்டும் என்றான். இப்போது அவனுக்கு வயது இருபத்தெட்டுகூட ஆகவில்லை. அவன் மாமனார் துணி மில்லில் அவன் 'பார்ட்டனர்', 'டைரக்டர்' எல்லாம்.''

''பெண்ணின் இயற்கை அழகைப் பார்க்க வேண்டுமென்றால், இப்படிப் 'பெண் பார்க்கிறது' என்று நாள், மணி, நிமிஷம் எல்லாம் குறிப்பிட்டுச் சொல்லி விட்டுப் போகக் கூடாது. சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று போய்ப் பார்க்கணும். இல்லை, பார்க்க வருகிறேன் என்று சொன்ன மணிக்குப் போகாமல், ஐந்து, ஆறு மணி நேரம் தாமதித்துப் போகணும். அப்போது பெண் மேக் அப் கலைந்து, உண்மை அழகு தெரிந்து விடும்!'' என்றாள் மஞ்சுளா.

''அம்புஜத்தைப் பார்க்கக் கல்கத்தாவிலிருந்து ஒரு பிள்ளை காலையில் வந்திருந்தான். பெண்ணைப் பார்த்தான். 'ஓ. கே. இல்லை' என்று இங்கிலீஷிலும் தமிழிலுமாகச் சொல்லி விட்டுச் சாயங்காலம் ப்ளேனிலேயே திரும்பிப் போய்விட்டான்'' என்றாள் உஷா.

''வந்து போகிற செலவையெல்லாம் பெண் வீட்டார்தானே கொடுத்திருப்பார்கள்?'' என்று முக்தா கேட்டாள்.

''பின்னே! கையை விட்டுச் செலவழித்துக் கொண்டு வரப் பைத்தியமா பிடித்திருக்கு! அப்புறம் விசாரித்ததில் விஷயம் புரிந்தது. அவன் பட்டணத்துக்குச் சொந்தக் காரியமாக வருவதாக இருந்தால் இது மாதிரி ஏதாவது பெண் பார்ப்பதாகச் சொல்லி ஏற்பாடு செய்வானாம்.''

''பெண் பார்ப்பது போல் பிள்ளை பார்ப்பது என்றிருந்தால் எப்படி இருக்கும்! ஒரு பெண் நன்றாகப் படித்தவள்; நாகரிகப் பழக்க வழக்கங்கள் தெரிந்தவள். அவளை வந்து ஒருத்தன் ஒரு ஐந்து நிமிஷம் பார்த்து விட்டுப் போகிறதாம். உடனே பிடிக்கவில்லை என்று சொல்லி விடுகிறதாம். இத்தனைக்கும் அவன் அவளைவிடப் பரீட்சையில் குறைந்த மார்க்குகள் வாங்கி யிருப்பான். சாதாரணமாக ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகிறதற்குள்ளே இருபது முப்பது பேராவது வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். இத்தனை பேரும் பிடிக்கவில்லை என்று சொன்னால் அந்தப் பெண்ணுக்கு மனசு எப்படி இருக்கும்? பெண்ணாயிருக்கிறதனாலே பொறுத்துக் கொண்டிருக்கிறாள். இதே மாதிரிப் பையன்களைப் பெண்கள் போய்ப் பார்த்து விட்டுப் பிடிக்க வில்லை என்று சொல்லட்டும்; அவனுக்குப் பைத்தியம் பிடித்துப் போய்விடும்'' என்று முக்தா கோபத்துடன் சொன்னாள்.


ஒரு சிறுமி : பெண் பார்க்க வரபோது அக்கா நிறையச் சரிகை போட்ட புடவை கட்டிக் கொள்கிறாள். நிறைய நிறைய நகை போட்டுக் கொள்ளுகிறாள். எதற்காக?

மற்றொரு சிறுமி : நிறையச் சரிகை போட்ட புடவை, நிறைய நிறைய நகை வாங்கிக் கொடுக்கிறவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறதற்காக!



பெங்களூர், சாம்ராஜபேட்டையில் 1-9-63 அன்று மேஜர் திரு வி. சுந்தரேசன் அவர்களின் புதல்வி சௌ. **சீதா**வின் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. மணமகன் திரு **டி. ரங்கநாதன்** சௌ. சீதாவின் பொற்கரம் பற்றும் பாக்கியம் பெற்றவர். திரு வி. தியாகராஜன் அவர்களின் புதல்வரான அவர் பம்பாய் ஐ. ஐ. டி. கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். புது மணத் தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்திருந்தன. மணமக்கள் நீடூழி வாழவேண்டும் என்று திருமணத்துக்கு விஜயம் செய்த பிரமுகர்கள் அனைவரும் ஆசீர்வதித்தனர்.

வாழ்க சீதா - ரங்கநாதன்!



பொன் விலங்கு

மணிவண்ணன்

நாற்பத்தொன்றாவது அத்தியாயம்

பூபதி எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லிவிட்டுப் போயிருந்தும் விமான நிலையத்திலிருந்து திரும்பும்போது சத்தியமூர்த்தி கண்ணாயிரத்தோடு அவர் கொண்டு வந்திருந்த ஜமீன்தாரின் 'காடிலாக்' காரில் திரும்பவில்லை. சற்று முன் அதே விமான நிலையத்தின் கூடத்தில் வழியனுப்ப வந்திருந்தவர்களோடு நின்று கொண்டிருக்கும் போதே கூட்டத்தில் பலர் நடுவே அவனை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல் யாரிடமோ பேசுகிற பாவனையில் அவனைத் தாக்கிப் பேசிக் கொண்டிருந்தார் கண்ணாயிரம்.

''அதுலே பாருங்க...எவ்வளவுதான் சலுகை கொடுத்துப் பெருந்தன்மையா நடத்தினாலும் இந்தத் தமிழ் வாத்தியார்ப் பசங்க... கெட்ட அயோக்கியனுகளா யிருக்காங்க... ஒருத்தனுக்காவது தெய்வ பக்தி இருக்கிறதில்லே... நல்லெண்ணமும் கிடையாது. படிக்கிற பையன்களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடுகிறான்கள்'' என்று சத்தியமூர்த்தியின் காதில் கேட்கிறாற் போலவே இரைந்து சொல்லி யிருந்தார் கண்ணாயிரம். பூபதி அப்போது வேறு யாரோ தம்மை வழியனுப்ப வந்திருந்த நாலைந்து பேரோடு பேசிக் கொண்டிருந்தார். பூபதியை வழியனுப்ப வந்திருந்த சத்தியமூர்த்திக்குக் கண்ணாயிரத்தின் இந்த உளறலைக் கேட்டு மனம் குமுறியது. 'குமரப்பன் அப்போது அங்கே இருந்திருந்தால் ''ஷட் அப் மிஸ்டர் கண்ணாயிரம்! யூ டோண்ட் டிஸர்வ் டு ஸ்பீக் எபௌட் ஸச் ஸேக்ரட் திங்ஸ்....'' என்று கண்ணாயிரத்தின் மேல் புலியாய்ப் பாய்ந்து அவரைக் குதறியிருப்பான். எதிர்த்து வாதாடுவதற்குக் கூடத் தகுதியில்லாதவரிடம் விவாதித்துப் பயனில்லை என்று தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டான் சத்தியமூர்த்தி. கண்ணாயிரமும் அவனிடம் நேருக்கு நேர் நின்று எதிர்த்துப் பேசத் தைரியமில்லாத கோழையாக யாரிடமோ பேசுகிறாற் போலத்தான் பேசித் தாக்கி யிருந்தார். இந்த உலகத்தில் தெய்வ பக்தியையும் நல்லெண்ணத்தையும் கட்டிக் காப்பாற்றுவதற்குத் தாம் ஒருவரே பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டிருப்பது போல் கண்ணாயிரம் பேசியது சத்தியமூர்த்திக்குப் பிடிக்கவில்லை. தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களை விடப் பெரிய நாஸ்திகர்கள் மனிதப் பண்பிலும், ஒழுக்கத்திலும் நம்பிக்கை இல்லாதவர்கள் தான். மனிதப் பண்பையும் சகல விதமான ஒழுக்க நேர்மைகளையும் நம்பாமல் தெய்வத்தை மட்டும் நம்புவதாகச் சொல்லித் தற்காப்புச் செய்து கொள்கிற போலிப் பக்தியால் உலகத்துக்கு நியாயமான பயன் ஒன்றுமில்லை. ஆனால் கண்ணாயிரமும் ஜமீன்தாரும் இப்படிப்பட்ட போலிப் பக்தியினாலேயே இந்த உலகில் தங்களைப் பெரிய மனிதர்களாக நிரூபித்துக் கொள்ள முடிகிறது.

கண்ணாயிரத்தின் கார் புறப்பட்டுச் சென்ற பின் விமான நிலைய எல்லையை

விட்டு வெளியே நடந்தபோது இவ்வளவு சிந்தனைகளும் மனத்தில் அலைபாயச் சென்று கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. விமான நிலையத்துக்கு வரும்போது பூபதியும் அவன் மகள் பாரதியும் உடன் வரக் கண்ணாயிரம் ஓட்டிக் கொண்டு வந்த அதே காரை விமான நிலையத்திலிருந்து திரும்பிச் செல்லும்போது கண்ணாயிரம் உடன் வரப் பாரதி ஓட்டிக் கொண்டு சென்றதையும் சத்தியமூர்த்தி கவனித்தான். 'பெரிய மனிதர்களில்' பெரும்பாலோர் தங்களோடு ஒத்த அளவு அல்லது அதிக அளவு 'ஸ்டேட்டஸ்' உள்ளவர்களிடம் என்னென்ன குணக் குறைவுகள் இருந்தாலும் அவற்றைக் கண்டு கொள்ளாததுபோல் மன்னித்துவிட்டுப் பழகுவதும், அதே சமயத்தில் தங்களோடு ஒத்த அளவு 'ஸ்டேட்டஸ்' இல்லாதவர்களிடம் மிக மிகச் சிறந்த குண நலன்கள் இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமலே அலட்சியமாயிருப்பதுமாக வாழ்ந்து கொண்டிருப்பதைப் பற்றி அவன் பலமுறை மனம் கொதித்துச் சிந்தித்திருக்கிறான். அவன் சந்தித்த பெரிய மனிதர்களில் பூபதி ஒரு விதிவிலக்காக இருந்தார். குண நலன்கள் யாரிடமிருந்தாலும் பாராட்டுகிற அவரது பெருந்தன்மையை அவன் விரும்பினான். 'ஷி வாக்ஸ் இன் ப்யூட்டி' ஆங்கிலக் கவிதையை அவன் வகுப்பில் நடத்திய தினத்தன்று அவனுக்கே தெரியாமல் வகுப்புக்கு வெளியே நின்று கடைசிவரை கேட்டுக் கொண்டிருந்து விட்டு வகுப்பு முடிந்து அவன் வெளியே வந்ததும் மனப்பூர்வமாகப் பாராட்டினார் அவர். ஆனால் அவரிடமும் ஜமீன்தார், கண்ணாயிரம் போன்றவர்களை மன்னித்துப் புகழ்ந்து மதிக்கிற குணம் இருக்கிறது என்பதை நேற்றும் இன்றும் நடந்திருந்த நிகழ்ச்சிகளால் சத்தியமூர்த்தி புரிந்து கொண்டிருந்தான். நல்லவர்களைப் புகழாவிட்டாலும் பரவாயில்லை. அப்படிப் புகழாதவர்களை மன்னிக்கலாம். கெட்டவர்களை அநாவசியமாகத் தூக்கி வைத்து மதித்துப் புகழ்கிறவர்களை மன்னிக்கவே முடியாதென்று தோன்றியது.



மதுரையிலிருந்து விமான நிலையத்தை ஒட்டிச் செல்லும் பிரதான சாலை அருப்புக் கோட்டைக்குப் போவது. சத்தியமூர்த்தி விமான நிலைய எல்லைக்குள்ளிருந்து இந்தப் பிரதான சாலைக்கு வந்ததும் அருப்புக் கோட்டையிலிருந்து மதுரைக்குத் திரும்புகிற வெளியூர் பஸ் ஒன்று வந்து கொண்டிருந்தது. கையை நீட்டி அந்த பஸ்ஸில் இடம் பிடித்து நகருக்குள் வந்து சேர்ந்தான் அவன். எதற்கும் கலங்காத அவன் மனம் காரணமின்றியோ அல்லது இன்னதென்று நிர்ணயித்துச் சொல்ல முடியாத பல காரணங்களாலோ குழம்பியிருந்தது. நகருக்குள் நுழைந்து பஸ் நிலையத்துக்குப் போவதற்கு முன்பாகத் தெற்கு வெளி வீதியிலேயே இறங்கிப் பாண்டிய வேளாளர் தெரு வழியே நடந்தான் அவன். பாண்டிய வேளாளர் தெருவும் பெருமாள் கோவில் தெருவும் சந்திக்கிற இடத்தில் கூடலழகப் பெருமாள் கோவில் தேர்

தகரக் கூடாரமிட்டு மூடப்பட்டு நின்று கொண்டிருந்தது. தேர் ஓடாத காலங்களில் நிலையில் நிற்கும்போது மூன்று புறமும் தகர அடைப்புக்களின் மேல் சினிமா விளம்பரச் சுவரொட்டிகளும், மல் யுத்த விளம்பரங்களும் ஒட்டப்பட்டிருப்பது அந்த இடத்துமரபு. நடந்து வந்து கொண்டிருந்த சத்தியமூர்த்தி தற்செயலாக நிமிர்ந்து பார்த்தபோது தேர் அடைப்பின் மேல் தன்னுடைய கவனத்தைக் கவரக் கூடிய விளம்பரம் ஒன்றைக் கண்டான். மதுரை நகரப் பெருமக்கள் மேன்மை தங்கிய மஞ்சள்பட்டி ஜமீன்தாருக்கு ஐம்பதாண்டுகள் நிறைந்து விட்டதற்காகப் பொன்விழாக் கொண்டாடிக் கௌரவிக்க விருப்பதை அறிவிக்கும் விளம்பரம் அங்கே ஒட்டப்பட்டிருந்தது. கையில் பசையுள்ள பெரும் புள்ளிகள் சிலர் தாங்களே பணத்தைக் கொடுத்து இப்படிப்பட்ட விழாக்களுக்கு ஏற்பாடு செய்து கொள்வதாகச் சத்தியமூர்த்தி கேள்விப்பட்டிருந்தான். குடிப் பழக்கத்தைப் போலவோ, சூதாட்டத்தைப் போலவோ புகழும் சிலருக்குத் தவிர்க்க முடியாத தேவையாக இருக்கிறதென்பது பொது வாழ்வைக் கூர்ந்து கவனித்ததிலிருந்து அவன் தெரிந்து கொண்ட உண்மை! இதில் பெரிய ஆச்சரியம் என்னவென்றால் பூபதி டில்லியிலிருந்து மதுரைக்குத் திரும்புகிற தினத்தன்று அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கையில் பசையுள்ளவர்கள் புகழையும், பெருமையையும் கூட மிகவும் மலிவான விலைக்கு வாங்க முடிகிறதென்று நினைத்தான் அவன். மனம் ஒரு நிலை கொள்ளாமல் ஒரு நோக்கமில்லாமல் எங்காவது சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும்போல் தவித்தது. சத்தியமூர்த்தி மீனாட்சியம்மன் கோவிலுக்குப் போனான். கோவிலில் தரிசனத்தை முடித்துக் கொண்டு வடக்குக் கோபுர வாசல் வழியாக அவன் வெளியேறியபோது இரவு ஏழு மணிக்கு மேலிருக்கும். அப்புறமும் உடனே வீட்டுக்குப் போக வேண்டுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. வடக்குக் கோபுர வாசலில் வெற்றிலை பாக்குக் கடையை முற்றுகை யிட்டிருந்த வித்துவான் பொன்னுச்சாமி பிள்ளைத் தெருப் பாட்டு வாத்தியார் சத்தியமூர்த்தியைப் பார்த்து விட்டார்.

"அடேடே! ஐயாவைப் பார்த்து மாதக் கணக்காகி விட்டதே! மல்லிகைப் பந்தலில் காலேஜ் வாத்தியாரா யிருப்பதாகச் சொன்னாங்க.... ரொம்பச் சந்தோஷம்...எங்கேயாவது நல்லா யிருக்க வேண்டியதுதானே?" என்று பேசிக் கொண்டே அவனோடு கூட நடந்து விட்டார் பாட்டு வாத்தியார். நல்ல இசை வேளாளர் பரம்பரையில் வந்தவராகிய இந்தப் பாட்டு வாத்தியார் எப்போது சந்தித்தாலும் அதிகமாக வழ வழவென்று பேசுவார் என்ற ஒன்றைத் தவிரச் சத்தியமூர்த்திக்கு இவரை மிகவும் பிடிக்கும். அரை மணி நேரம் சந்தித்துப் பேசினால் கூடத் தஞ்சாவூர்க் கோவிந்த தீட்சிதர் எழுதிய 'சங்கீத சுதாநிதி'யிலிருந்து வித்துவான் பொன்னுச்சாமி பிள்ளை இயற்றிய 'பூர்விக சங்கீத உண்மை' என்ற அபூர்வ நூல் வரை எல்லாவற்றைப் பற்றியும் சொல்லிவிட வேண்டுமென்று சுறுசுறுப்பாகத் தொடங்கி விடுவார். ஒவ்வொரு கலையிலும் அதிர்ஷ்டம் எட்டிப் பார்க்காத துரதிர்ஷ்டம் பிடித்த மேதைகள் இப்படிப் பலர் இருப்பார்கள். இந்தப் பாட்டு வாத்தியாரும் அத்தகைய பலரில் ஒருவராகத்தான் இருந்தார். இவரைப்போல் அவ்வளவு ஞானமில்லாதவர்கள், இவரிடமே அரைகுறையாகப் படித்து விட்டுப் போனவர்கள், எல்லாம் 'சீனியர்' வித்துவான்களாகிக் காரை விட்டுக் கீழிறங்காமல் சுற்றிக் கொண்டிருக்கிற இதே மோசக்கார உலகத்தில் கடந்த இருபது வருடங்களாக முன்னேற முடியாமல் இந்தத் தெரு முனையில் உள்ள வெற்றிலை பாக்குக் கடையிலேயே இவர் தயங்கி நின்றுவிட்டார். அதிர்ஷ்டத்துக்கும் இவருக்கும் இடையேயுள்ள தூரம் அல்லது இவருக்கும் அதிர்ஷ்டத்துக்கும் இடையே உள்ள பகைமை அதிகமாகி விட்டது. கோயிலிலிருந்து வெளியேறி வந்திருந்த சத்தியமூர்த்தியும் இரண்டு நாட்களாகத் தன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்த ஒரு சந்தேகத்தை இந்தப் பாட்டு வாத்தியாரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடிவு செய்தான். பாட்டு வாத்தியாருடன் பேசிக் கொண்டே நடந்த சத்தியமூர்த்தி மேற்காவணி மூல வீதி வழியாக டவுன் ஹால் ரோடுக்கு வந்து அங்கு ஒரு ஹோட்டலில் நுழைந்து வாத்தியாரும் தானுமாகக் காப்பி குடித்த பின் காற்றாட உலாவிக் கொண்டே பேசுவதற்காக இரயில்வே மேற் பாலத்துக்குச் சென்றான். வாத்தியாரும் 'தோடியை' இராஜரத்தினம் பிள்ளை கையாண்ட லாகவத்தை வியந்த படி கூறிக்கொண்டே உடன் வந்தார்.

ஒரு பக்கம் இரயில் நிலையமும் மற்றொரு பக்கம் பஸ் நிலையமுமாக நடுவே

அமைந்த இந்தப் பாலத்தில் நின்று இருளும் ஒளியும் கலக்கிற சாயங்கால வேளையில் நகரத்தையும் சுற்றுப்புறங்களையும் பார்ப்பது சுவை மிகுந்ததோர் அநுபவமாயிருப்பதைச் சத்தியமூர்த்தி பலமுறை உணர்ந்திருக்கிறான். இந்த இரயில்வே மேற் பாலத்தில் நின்று மதுரையையும், நகரின் சுற்றுப்புறங்களையும் பார்க்கும் பல சமயங்களில் கல்லூரி நாட்களில் 'மைனர் போயம்ஸ்'ல் படித்திருந்த 'வில்லியம் வேட்ஸ்வொர்த்'தின் கவிதை ஒன்று அவனுக்கு ஞாபகம் வருவதுண்டு. அந்தக் கவிதையில் வெஸ்ட் மின்ஸ்டர் பாலத்திலிருந்து இலண்டன் நகரம் தெரிகிற கோலத்தை உள்ளமுருகச் சொல்லியிருக்கிறான் 'வேட்ஸ் வொர்த். 'அபான் வெஸ்ட் மின்ஸ்டர் பிரிட்ஜ்' என்ற அந்தக் கவிதை, '**எர்த் ஹேஸ் நாட் எனிதிங் டு ஷோ மோர் ஃபேர்**' என்று கம்பீரமாகத் தொடங்கும். 'உலகத்தில் இதைவிட அழகான காட்சி வேறொன்று இருக்க முடியாது. இந்த இடத்தில் நின்று இங்கிருந்து தெரியும் காட்சிகளை ஆர அமர இரசிக்கத் தெரியாமல் வேகமாக நடந்து போகிறவர்கள் எவ்வளவு மந்தமானவர்களாயிருக்க வேண்டும்?' என்று வெஸ்ட் மின்ஸ்டர் பாலத்திலிருந்து வில்லியம் வேட்ஸ்வொர்த் என்னும் ஆங்கிலச் சொல்லழகன் மனம் நிறைந்த மகிழ்ச்சியினால் ஆச்சரியப்பட்டுக் கூவினாற்போல மதுரையின் இந்த இரயில்வே மேற் பாலத்தில் நின்றுகொண்டு கோபுரங்களும் கட்டிடங்களும், மரங்களின் பசுமையுமாகத் தெரிகிற நகரின் மொத்தமான தோற்றத்தைப் பார்த்து, மகிழ்ந்து வியந்து கூவ வேண்டுமென்று பலமுறை எண்ணியிருக்கிறான் சத்தியமூர்த்தி. இன்றோ அவனும் பாட்டு வாத்தியாரும் இந்தப் பாலத்தின் மேல் வந்து நிற்கும்போது இதன் சாயங்கால அழகையும் காட்சிகளையும் பார்க்க முடியாமல் நன்றாக இருட்டிப் போய்விட்டது. கம்பம், தேனி என்று வெளியூர்களிலிருந்து நகருக்குத் திரும்புகிற பஸ்கள் ஒவ்வொன்றாக அடுத்தடுத்துப் பாலத்தின்மேல் வந்து கொண்டிருந்தன. கீழே இரயில்வே லயனில் 'ஷண்டிங்' என்ஜின் ஒன்று இங்கும் அங்குமாகப் புகை கக்கியபடி 'விஸில்' ஓசையோடு போய் வந்து கொண்டிருந்தது.

பாட்டு வாத்தியாரும் சத்தியமூர்த்தியும் பாலத்தின் இரும்புக் கிராதியில் சாய்ந்தபடி பேசிக்கொண்டிருந்தார்கள்.

காலையிலிருந்து — இன்னும் நன்றாகச் சொல்லப் போனால் முந்திய தினம் குமரப்பன் இரயிலேறிப் போனதிலிருந்து தன் மனத்தை உறுத்திக்கொண்டிருந்த ஒரு விஷயத்தை — மோகினியின் தெருவுக்குப் பக்கத்துத் தெருக்காரராகிய அந்தப் பாட்டு வாத்தியாரிடம் அந்தரங்கமாக விசாரித்தான் அவன்.

'குடியிருக்கிற வீடு வாசல் எல்லாம் ஜமீன்தார் செலவிலே அனுபவிக்கிறவங்க வேறே எப்படி இருக்க முடியும்? அவங்க பரம்பரையா ஜமீன் குடும்பத்துக்குப் பழக்கம்' என்று முதல் நாள் தன் தந்தை மோகினியைப் பற்றித் தன்னிடம் கூறியிருந்ததையும் குமரப்பன் இரயில் நிலையத்தில் எச்சரித்ததையும் அதற்குத் தொடர்பாக இன்று காலை ஆஸ்பத்திரியில் வஸந்தசேனை — சாருதத்தன் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தபோது ஜமீன்தாரின் கார் வந்துவிட்ட ஓசையைக் கேட்டுத் தன் எதிரிலேயே மோகினி பயந்து மிரண்டதையும் நினைத்துச் சத்தியமூர்த்தி மனம் குழம்பிப் போயிருந்தான். ஜமீன்தாரையும் கண்ணாயிரத்தையும் அவள் வெறுக்கிறாள் என்பதற்காக அவளைப் பாராட்டிய அதே சத்தியமூர்த்தியால் அவர்களுக்காக அவள் பயப்படவும் செய்கிறாள் என்பதைச் சிறிதுகூடப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஜமீன்தாருக்கு அவள் பயப்படுகிற பயத்துக்கு என்ன அர்த்தம் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல்தான் மனக் குழப்பம் அடைந்திருந்தான் அவன். பழைய நல்ல முறை மனிதராகிய இந்தப் பாட்டு வாத்தியாரை விசாரித்தால் ஏதாவது சில விவரங்கள் தெரியலாமென்று தான் இப்போது அதைப் பற்றி அவன் அவரை விசாரித்திருந்தான். சங்கீத விநாயகர் கோவில் தெருவில் மோகினி குடியிருக்கிற வீடு ஜமீன் வீடுதான் என்ற உண்மையைப் பாட்டு வாத்தியார் அழுத்தமாக வற்புறுத்திச் சொன்னார். மோகினியின் தாயான முத்தழகம்மாளைப் பற்றியும் அவர் அவ்வளவாகப் பெருமைப் படுத்திச்

பொன் விளக்கு

தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களை விடப் பெரிய நாஸ்திகர்கள் மனிதப் பண்பிலும், ஒழுக்கத்திலும் நம்பிக்கை இல்லாதவர்கள்தான்.

சொல்லவில்லை. அதே சமயத்தில் மோகினியைப் பற்றி மட்டும் மிக உயர்வாகச் சொன்னார். கவிஞர் ஒருவரைக் காதலித்து அந்தக் காதல் நிறைவேறாததனால் சிறிய வயதிலேயே நிராசையோடு இறந்து போன மோகினியின் பெரிய பாட்டி 'மதுரவல்லி'யைப் பற்றியும் பெருமையாகச் சொன்னார். இந்தப் பெரிய பாட்டியைப் பற்றி மோகினியே தன்னிடம் ஒரு நாள் சிறப்பித்துச் சொல்லியிருந்தது இப்போது சத்தியமூர்த்திக்கு ஞாபகம் வந்தது.

''இந்தப் பெண் மோகினி சின்ன வயசிலிருந்தே நெருப்பாய் வளர்ந்தவள் ஐயா! யாரையும் பக்கத்திலே நெருங்க விட்டதில்லை. அவள் முகத்தைப் பார்த்து மகா லட்சுமி மாதிரி இருக்கிறதிலிருந்தே இதை நீங்கள் தெரிஞ்சுக்கலாமே! இந்த விநாடி வரை நடத்தையிலே அப்பழுக்குச் சொல்லமுடியாது. இந்தப் பொண்ணை எவனாவது தாறுமாறாகப் பேசினால், அவன் நாக்கு அழுகிப் போயிடும்.... ஆனால் குழந்தைப் பொண்ணு.... கள்ளங் கபடு தெரியாத மனசு.... அம்மா இருக்கிறப்பவே இந்தப் பெண் அவளை எதிர்த்துச் சண்டை போடும்... இப்போ அந்த அம்மாவும் கண்ணை மூடிப்பிட்டா. இனிமேல் இந்த ஜமீன்தாரும் கண்ணாயிரமும் என்ன பாடுபடுத்தி வைக்கப் போறாங்களோ?.... இவ ரொம்ப அழகாயிருக்கிறதினாலேயும், நாட்டியத்திலே பேர் வாங்கியிருக்கிறதினாலேயும்.... ஜமீன்தார் விடாமல் சுற்றிக் கொண்டிருக்கிறானென்று கேள்வி....! பாவம்! மோகினி இந்தமாதிரி வீட்டிலே பொறக்கற பொண்ணே இல்லை. எங்காவது நல்ல குடும்பத்திலே வீட்டுக்கு இலட்சுமியாகப் பிறந்திருக்க வேண்டிய பெண். இங்கே பிறந்து கஷ்டப்படணும்னு தலையிலே எழுதியிருக்கிறான்...'' என்று மோகினியைப் பற்றிச் சொல்லி அலுத்துக் கொண்டார் பாட்டு வாத்தியார். இதைக் கேட்டுச் சத்தியமூர்த்தி நெட்டுயிர்த்தான். தனக்கும், மோகினிக்கும், என்ன சம்பந்தம் என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் பொதுவாக விசாரிப்பது போல்தான் இந்த விவரங்களைப் பாட்டு வாத்தியாரிடம் விசாரித்திருந்தான் அவன். எல்லாவற்றையும் சொல்லி முடித்த பின் பாட்டு வாத்தியாரும் எதற்காகவோ பயந்து நடுங்கியதைக் கண்டுதான் சத்தியமூர்த்தி ஆச்சரியப்பட்டான்.



சீனு: நான் ஒரு தடவை இருபது அடி உயரமுள்ள ஏணியிலிருந்து கீழே விழுந்திருக்கிறேன்.

ராமு: அப்படியானால் ரொம்பக் காயம் பட்டிருக்குமே!

சீனு: ஒன்றுமில்லை. அப்போது நான் ஏணியின் முதல் படியில் இருந்தேன்.

''நமக்கேன் ஐயா இந்த வம்பு? பகலில் பக்கம் பார்த்துப் பேசு.. இராத்திரி அதுவும் பேசாதே...... என்று சொல்லியிருக்கிறாப் போல இந்த இடத்திலே இருட்டுக்குக் கூடக் காது கேட்கும். எவனாவது ஜமீன்தாருக்கோ, கண்ணாயிரத்துக்கோ வேண்டிய ஆட்கள் கேட்டுக் கொண்டிருந்து போய்ச் சொல்லி விட்டால் தலைக்கே ஆபத்து.''

''வாத்தியாரே! உங்களைப் போன்றவர்கள் இப்படிப் பயந்து பயந்துதான் இந்த உலகத்தைப் பாழாக்கி விட்டார்கள்'' என்றான் சத்தியமூர்த்தி.

''நான் இருக்கிற இருப்புக்குப் பயப்படாமல் வேறென்ன செய்ய முடியும் ஐயா?'' என்று கேட்டு விட்டு வறட்சியாகச் சிரித்தார் பாட்டு வாத்தியார். இந்த வாத்தியாரின் பயத்தைப் போலவே மோகினியின் பயமும் காரணமற்றதாகத்தான் தோன்றியது அவனுக்கு. இவர்களெல்லாம் இப்படிப் பயந்து கொண்டேயிருந்தால் 'மஞ்சள்பட்டி ஜமீன்தார் இன்னும் எட்டுக் கலரில் போஸ்டர் அடித்து ஒட்டி விளம்பரம் பண்ணித் தமக்கு ஏன் பொன் விழாக் கொண்டாடிக் கொள்ள மாட்டார்?' என்று எண்ணி மனம் கொதித்து வருந்தினான் அவன். பாட்டு வாத்தியாரும் அவனும் பாலத்தை விட்டு இறங்கி வீடு திரும்பும்போது இரவு ஒன்பதரை மணிக்கு மேலே ஆகியிருந்தது. மறு



பிரசங்கி: நான் சொல்ல விரும்பும் விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அவகாசமோ பத்து நிமிஷம் தான். எங்கேயிருந்து ஆரம்பிப்பதென்று தெரியவில்லை.

கூட்டத்தில் ஒருவர்: ஒன்பதாவது நிமிஷத்திலிருந்து ஆரம்பியுங்களேன்!

நாள் சரசுவதி பூசை. அதற்கு அடுத்த நாள் விஜயதசமி. 'இன்னும் சிறிது நேரத்தில் சென்னையிலிருந்து இன்றிரவு விமானத்தில் பூபதி டில்லிக்குப் புறப்பட்டு விடுவார்' என்பது சத்தியமூர்த்திக்கு ஞாபகம் வந்தது. அவர் மதுரையிலிருந்து புறப்படுவதற்கு முன்பு தன்னிடம் சொல்லி விட்டுப் போயிருந்தபடி விடுமுறை முடிவதற்கு ஓரிரு தினங்கள் முன்பாகவே மல்லிகைப் பந்தலுக்குத் திரும்பிப் போய் ஸ்தாபகர் தின விழாவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் அவன். நாளைக்கும் நாளன்றைக்கும் மதுரையில் இருந்து விட்டு அடுத்த நாள் மல்லிகைப் பந்தலுக்குப் புறப்படவேண்டியதுதான் என்றும் தனக்குள் தீர்மானித்துக் கொண்டிருந்தான். அன்றிரவும் அவன் நெடுநேரம் கண் விழித்துக் கல்லூரிப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த வேண்டியிருந்தது.

''நான் தவறாமல் இப்படிக் கண் விழிக்கிறாயே! உடம்பு என்னத்துக்கு ஆகும்? பொழுதோடு படுத்துக் கொண்டு காலையில் எழுந்து திருத்தக் கூடாதோ?'' என்று பன்னிரண்டு மணிக்கு அம்மா வந்து அவனைக் கோபித்துக் கடிந்து கொண்டிருந்தாள். மறு நாள் காலையிலும், அவனால் மோகினியைத் தேடி ஆஸ்பத்திரிக்குப் போகாமல் இருக்க முடியவில்லை. தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடியாத அத்தனை பெரிய ஆவலை அவள் அவனிடம் உண்டாக்கியிருந்தாள். முதல் நாள் தான் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்த போது கூந்தலுக்குப் பூவில்லாமல் அவள் வெறுங் கூந்தலை அள்ளி முடிந்து கொண்டிருந்த நிகழ்ச்சி நினைவு வரவே ஞாபகமாக இன்று சிமாசி வீதிப் பூக்கடைக்குப் போய் நல்ல மல்லிகைப் பூவாக நாலு முழம் வாங்கிக் கொண்ட பின் புறப்பட்டிருந்தான் சத்தியமூர்த்தி. நேற்றுப் போல் மோகினியிடம் பேசிக் கொண்டிருக்கும் போது பூபதி கண்ணாயிரம், பாரதி — இவர்களெல்லாம் 'இன்றைக்கும் ஆஸ்பத்திரிக்குத் தேடிக் கொண்டு வந்தால் என்ன செய்வது?' என்று சிந்தித்து அப்படி அவர்கள் வந்தாலும் தான் பாதியிலேயே அங்கிருந்து புறப்படுவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டிருந்தான் அவன். தான் கொண்டு போகிற பூவை மோகினியின் கூந்தலில் தானே சூட்டிவிட்டு அவளிடம் என்னென்ன பேச வேண்டும், எப்படி நயமாகப் பேசவேண்டும் என்றெல்லாம் நினைத்தபடியே போய்க் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி.

''தன் கணவன் சகல சௌபாக்கியங்களோடும் நன்றாயிருக்கிறான் என்பதை அவனுடைய கிருகலட்சுமியான மனைவி பூவும், மஞ்சளும், குங்குமமுமாகப் பொலிந்து தோன்றுவதன் மூலமாக உலகுக்கு நிரூபிக்கிறாள்! தன்னுடைய வாழ்வில் மங்கலங்கள் நிரம்பியிருக்கின்றன என்பதை உலகத்துக்கு மிக நாகரிகமாகச் சொல்லும் சின்னங்களாக ஒரு குடும்பப் பெண்ணுக்குப் பூவும், மஞ்சளும், குங்குமமும் இந்த நாட்டில் வாய்த்திருக்கின்றன...'' என்று பூவைச் சூட்டி விட்டு அவளிடம் சொல்ல வேண்டும் என்பதாகத் தோன்றியது. அதற்கு அவள் தன்னிடம் என்ன பதில் சொல்வாள் என்பதையும் அவன் நினைத்துப் பார்த்தான்: ''அப்படியானால் உங்களை நினைத்து நீங்கள் எனக்குக் கணவராகக் கிடைத்திருக்கிற சௌபாக்கியத்தை ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக நான் இனி மேல் நான் தவறாமல் பூச்சூடி மையிட்டுத் திலகமணிந்து மங்கலமாக விளங்குவேன்'' என்று அவள் புன்னகையோடு மறுமொழி கூறுவாள் என்றும் கற்பனை செய்யத் தோன்றியது அவனுக்கு. ஆனால் ஆஸ்பத்திரி எல்லையை அடைகிறவரைதான் இந்தக் கற்பனையெல்லாம் அவன் மனத்தில் நிகழ்ந்தது. ஆஸ்பத்திரிக்குள் போய் ஸ்பெஷல் வார்டில் நுழைந்தபோதோ அங்கு மோகினியே இல்லையென்ற உண்மை பெரிய ஏமாற்றமாக அவனை எதிர் கொண்டது.

(தொடரும்)



இலவசம்
1 டின்
மாம்பழ ரசம்!
ஏதாவது 2 ரக
கிஸான் சரக்குகள்
வாங்குபவர்களுக்கு மட்டும்
ஏதாவது இரண்டு ரக கிஸான் சரக்குகள் வாங்கி ஒரு டின் மாம்பழ ரசம் (மாங்கோ நெக்டார்) இலவசமாய்ப் பெறுங்கள். கிஸான் ஸ்க்வாஷ்கள், கிரஷ்கள், ஸிரப்கள், ஜாம்கள், ஜெல்லி, மார்மலேட், டின் செய்த பழ வகைகள், பழ ரசங்கள், தக்காளி வகைகள்.
இந்த இலவச திட்டம் சென்னை, கேரள ராஜ்யங்களிலும், பாண்டிச்சேரி, மங்களூர் முதலிய இடங்களிலும். 1963 அக்டோபர் 7 முதல் நவம்பர் 9 வரை, அமுலில் இருக்கும்.
கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்

துவராபதி மணிவண்ணன்

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார். திவ்ய கவி என்று அழைக்கப்படும் பெருமை வாய்ந்தவர். அவரது நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி மிக்க சுவையுடைய வெண்பாக்களைக் கொண்டது. அதில் ஒரு பாட்டு;

'திறம் திறமாய்த் தாம் துய்க்கும்
    தீஞ்சுவையை நாடி
அறம் திறம்பிப் பாதகர் ஓர்
    ஐவர் — நறுந் துளவ
மா துவரையோனே !
    மனம் துணையாக் கொண்டு
என்னைக் காதுவர் ஐயோ !
    மெய் கலந்து....'

என்று துவாரகா நாதனை கண்ணனிடம் முறையிடுகிறார். ஆம். சிறப்புடைய துவாரகையிலுள்ள எம்பெருமானைக் கூவியழைத்து



'' ஐயனே! எனது ஐம்பொறிகளாகிய பகைவர் என் மனத்தைக் கெடுத்து விதம் விதமாக அனுபவிக்கும் இன்பத்தை நான் விரும்பும்படி வருத்துகிறார்களே என்னே. இக்கொடுமையினின்று காக்க மாட்டாயா ?'' என்று ஏங்கியிருக்கிறார்

இந்தத் துவாரகை குஜராத் நாட்டின் மேலைக் கடற்கரையின் ஓரத்திலுள்ளது. இந்திய நாட்டின் வடகோடியில் ஒரு பத்ரி நாராயணனும், கிழக்கே பூரியில் ஒரு ஜகந்நாதனும் நாட்டைக் காப்பது போல் மேல் கோடியில் ஒரு துவாரகா நாதனும் இருந்து மக்களைக் காத்து வருகிறான்.

துவாரகைக்குச் செல்ல நல்ல ரோடு வசதி இல்லை. ஏதோ ஜீப் கார் இருந்தால்தான் அங்குள்ள ரோட்டில் முயன்று பார்க்கலாம். ஆனால் அகமதாபாத்திலிருந்து ராஜ்கோட் ஜாம்நகர் வழியாக நல்ல ரயில்பாதை இருக்கிறது. இரவு பத்து மணிக்கு ராஜ்காட்டில் ரயில் ஏறினால் மறு நாள் காலை எட்டு மணிக்கெல்லாம் துவாரகை போய்ச் சேர்ந்து விடலாம்.

ரயிலை விட்டு இறங்கியதும் பெண்கள் பலர் ஓடி வந்து, உங்கள் பொருள்களைக் கேட்பர். என்ன இவர்கள் கண்ணன் நாட்டில் உள்ள கோபியரோ; இந்தக் கோபியரை நாடியா கண்ணன் அன்று ஓடினன் என்று எண்ணுவோம். அங்குள்ளவர்களை விசாரித்தால் அவர்கள் அங்குள்ள போர்ட்டர்கள் என்று தெரியும்.

வசுதேவர் தேவகி மைந்தனாகப் பிறந்த கண்ணன் கோகுலத்தில் யசோதையின் மகனாக வளர்கிறான். தன் மாமனான கம்சனைக் கொல்கிறான். கம்சனின் மனைவியரான அஸ்தியும் பிரஸ்தியும் இதனால் கோபம் கொண்டு தங்கள் தந்தையாகிய ஜராசந்தனைக் கண்ணனுக்கு எதிராகக் கிளப்பிவிடுகிறார்கள். ஜராசந்தனும் மதுரா நகரின் மேல் பதினேழு தடவைகள் படையெடுத்து, அத்தனை படையெடுப்பிலும் தோல்வியே அடைகிறான். கடைசியாகப் பதினெட்டாவது தடவையாகப் போருக்கு வரும்போது கண்ணன் படையைச் சேர்ந்த யாதவர்கள் மிகவும் களைத்திருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் மது அருந்தி ஒருவரோடொருவர் சண்டை போட்டு நலிந்தும் இருந்திருக்கிறார்கள். ஆதலால் ஜராசந்தன் மதுரையைக் கைப்பற்றிக் கொள்ளுகிறான். போர் நிலைமை தங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதை அறிந்த கண்ணன் பலராமனுடனும் எஞ்சியிருந்த யாதவர்களுடனும் மேற்கே பிரயாணம் ஆகி ரைவதகூட பர்வதத்துக்கு வந்து. அங்கு துவாரகையை நிர்மாணித்து அங்கிருந்து அரசு புரிந்திருக்கிறான். இப்படித்தான் கண்ணன் கோயில் கொண்டுள்ள துவாரகை உருவாகியிருக்கிறது. கோமதி கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்திருக்கிறது. அங்குதான் பிரபலமான கண்ணன் கோயில் இருக்கிறது. கோயிலுக்குச் செல்லு முன் கோமதி கடலுடன் சங்கமமாகும் இடம் சென்று நீராட வேண்டும் என்பது நியதி. இந்தக் கோமதி சங்கமத்திலே பன்னிரண்டு துறைகள் இருக்கின்றன. கோமதியின் துறையிலும் ஜீவபாகுண்டத்திலும் ஸ்நானம் செய்த பின்னரே கோயிலை நோக்கி நடக்கவேணும்.

கோமதி நதியிலிருந்து ஐம்பத்தாறு படிகள் ஏறி வந்தால் கண்ணன் கோயிலை அடையலாம். இங்குள்ள கண்ணனை ரண்சோட்ராய் என்றும் அழைக்கிறார்கள். கோயிலை ஜகத் மந்திர் என்கிறார்கள். இக் கோயில் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. கோயிலின் முக்கிய பகுதி ஐந்து மாடங்கள் உடையதாக இருக்கிறது. தரையிலிருந்து ஐந்தாவது மாடம் நூறு அடி உயரத்தில் இருக்கிறது. இதன்மேலுள்ள 'டோமை' அறுபது தூண்கள் தாங்கி நிற்கின்றன. கோயிலை ஒரு விமானம் அழகு செய்கிறது. விமானத்தின் சிகரம் 175 அடி உயரம் இருக்கிறது. அதன் மேலின் ஒரு நீண்ட கழியில் ஒரு வெள்ளைக் கொடி

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

பறந்து கொண்டிருக்கிறது. கருவறையில் கிருஷ்ண பரமாத்மா நான்கு திருக் கரங்களோடு வெள்ளி மஞ்சத்தின் மீது நின்று கொண்டிருக்கிறார். மேற்கு நோக்கிய கோலம்; அவர் மூன்றடி உயரமே உள்ளவர். நல்ல கரிய மேனியர். வடிவம் அழகுடையதாக இல்லை என்றாலும் நிறைய நவரத்தினங்களால் அலங்கரித்திருக்கின்றனர். அவருக்கு எதிரே சுமார் ஐம்பதடி தூரத்தில் கண்ணனின் தாயான தேவகிக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. கண்ணன் கோயிலுக்குத் துவஜ ஸ்தம்பம் கிடையாது. கண்ணன் திருவடிகளில் நாமே துளசியிட்டு அருச்சிக்கலாம். கட்டணம் கட்டினால் நமக்காகவே ஒரு திருமஞ்சனமும் செய்து வைப்பார்கள். சர்வாலங்கார பூஷிதனை கண்ணனுக்குத் தினசரி பதினொரு தடவை நைவேத்தியத்துடன் பூஜை நடக்கிறது. முக்கியமான நைவேத்தியம் வெண்ணெய்தான்.

இக்கோயிலின் மேல் அடுக்கில்தான் அம்பாஜி என்னும் பிராட்டியின் வடிவம் இருக்கிறது. சபாமண்டபத்தில் பலராமருக்கு ஒரு சந்நிதி இருக்கிறது. இன்னும் பிரத்யும்னன், அனிருத்தன் என்னும் கண்ணன் குடும்பத்தினர் அனைவருமே இங்கு எழுந்தருளியிருக்கிறார்கள்.

கண்ணன் கோயிலின் ஐந்து விழாக்களைப் பிரதானமாகக் கொண்டாடுகிறார்கள். கண்ணனது ஜன்மாஷ்டமி, தீபாவளி, ஆம்கட் என்னும் குஜராத்திய புது வருஷம், ரத யாத்திரை, ஹோலி என்பவைகளே அந்த விழாக்கள். இக்கோயிலை ஆதியில் கண்ணனுடைய பேரன் வஜ்ரநாபன் என்பவனே மயன் உதவியால் கட்டினான் என்பது கர்ண பரம்பரைக் கதை.

இக்கோயிலில் உள்ள துவாரகா நாதர் சிறந்த வரப்பிரசாதியாயிருக்கிறார். தம்மைக் காணும் ஆவல் கொண்ட பக்தன் ஒருவனுக்காக மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டு இருநூறு மைல் தூரத்தில் உள்ள தாக்கோருக்குச் சென்று அப்பக்தன் இல்லத்திலேயே தங்கியிருந்திருக்கிறார். பரோடாவில் நரசிம்ம மேத்தா என்று ஒரு கவிஞர் இருந்திருக்கிறார். அவர் சிறந்த பக்தரும்கூட. பரோடாவில் உள்ள ஒரு வர்த்தகர். துவாரகை செல்ல விரும்பி, துவாரகையில் உள்ள ஒருவருக்கு உண்டி (Bank draft) கேட்டிருக்கிறார். அங்குள்ள சிலர் ஏளனமாக வர்த்தகரை நரசிம்ம மேத்தாவிடம் அனுப்பியிருக்கிறார்கள். நரசிம்ம மேத்தாவும் சாமல்ஷா என்னும் ஒருவருக்கு உண்டி எழுதிக் கொடுத்திருக்கிறார். உண்மையில் சாமல்ஷா என்ற நபர் ஒருவருமே துவாரகையில் இல்லைதான். என்றாலும் பக்தன் நரசிம்மமேத்தா கொடுத்த உண்டியலைக் கௌரவிக்கத் துவாரகா நாதனே சாமல்ஷா வடிவில் வந்து உண்டியைப்பெற்று வந்த வர்த்தகருக்குப் பணம் கொடுத்திருக்கிறான். தமிழ் நாட்டில் வைணவ மத ஸ்தாபகரான ராமானுஜர் கி. பி. 1050ல் துவாரகைக்கு வந்திருக்கிறார். அங்கு பாஞ்சராத்திர முறைப்படி பூஜைகளை ஏற்பாடு செய்திருக்கிறார். இன்னும் கி. பி. 1240ல் மத்வாச்சாரியர் துவாரகைக்கு எழுந்தருளியிருக்கிறார். ஞானேசுவரர், வல்லபாச்சாரியார், சைதன்யர், மீராபாய் முதலிய பக்தகோடிகள் பலர் துவாரகைக்கு வந்து துவாரகா நாதனை வணங்கியிருக்கிறார்கள் என்று வரலாறு கூறுகிறது. ஆதிசங்கரர் ஸ்தாபித்த மடங்களில் ஒன்று துவாரகையில் உண்டு. கண்ணன் கோயிலுக்குள்ளேயே சாரதா பீடம் ஒன்றும் இருக்கிறது. சங்கராச்சாரியார் பரம்பரையில் வந்த ஆசாரியார்கள் இங்கு இருந்து வருகிறார்கள்.

துவாரகையில் கண்ணனே பிரதான தெய்வம் என்றாலும் சிவனுக்கும் அங்கு ஒரு கோயில் இல்லாமல் இல்லை. ஊர் ஒதுக்குப் புறத்தில் சித்தேசுவரர் கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. இந்த ஊரிலேயே நான் கண்ட ஒரே மரம், ஓர் ஆலமரம்தான். இக்கோயில் வாயிலில் நிற்கிறது.


இந்தத் துவாரகையை மாத்திரம் பார்த்துவிட்டுத் திரும்பினால் நமது யாத்திரை பூர்த்தியானதாகாது. கோமதி நதிக்கரையிலுள்ள இத்துவாரகையிலிருந்து இருபதுமைல் தூரத்தில் பேட் துவாரகை என்று ஓர் இடம் இருக்கிறது. செல்லும் வழியில் கோபி தீர்த்த கட்டம் — வேறு இருக்கிறது. இங்கு கோபிநாதருடைய கோயிலும் மகா பிரபுஜியின் கூடமும், சாட்சி கோபாலனுடைய கோயிலும் இருக்கின்றன. இங்கு கிடைக்கும் மண் சந்தனம் போலவே இருக்கிறது; இந்தச் சந்தனத்தை எடுத்து நெற்றியிலும் மார்பிலும் அணிந்து கொண்டே பேட் துவாரகை செல்லலாம்.

பேட் துவாரகை என்றால், தீவாயிருக்கும் துவாரகை என்றுதான் அர்த்தம். இங்கு செல்ல ஸ்டீம் லாஞ்சுகளும் சாதாரணப் படகுகளும் இருக்கின்றன. துவாரகையைத் தலைநகராக வைத்துக் கொண்டு கண்ணன் அரசாண்ட போது, தானும் தன் குடும்பமும் தங்க இந்தத் தீவை வைத்துக் கொண்டிருந்தான் என்பர். அதற்கேற்ப அங்கே கிருஷ்ணனின் வீடு, ருக்மிணி வீடு, சத்தியபாமையின் அந்தப்புரம், ராதை வீடு என்று தனித் தனி பகுதிகள் இருக்கின்றன. அங்கங்கே வசித்தவர்கள் சிலைகளையும் பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்து வணங்கி வந்திருக்கிறார்கள். பூசைகளும் ஒழுங்காய் நடக்கின்றன.

இவற்றைவிடத் தமிழர்களாகிய நமக்கெல்லாம் துவாரகை, ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருப்பதிகளில் ஒன்று என்பதே மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் என்னும் நால்வரும் துவாரகா நாதனைப் பாடியிருக்கின்றனர். இவர்கள் பாடிய பாடல்களில் எல்லாம் சிறப்பான பாடல் நம்மாழ்வார் துவாராபதி மன்னனைப் பாடிய பாடலே.

அன்னை என் செய்யில் என்?
  ஊரென் சொல்லில் என்? தோழிமீர்
என்னை இனி உமக்கு ஆசையில்லை,
  அகப்பட்டேன்
முன்னை அமரர் முதல்வன்
  வண் துவராபதி
மன்னன் மணிவண்ணன்
  வாசுதேவன் வலையுளே.


வலி!
வலி!
வலி!
வலி!
வலி!
வலி!
மூட்டு வலி, கீல் வாதம், கடின உழைப்பு, இதர வலிகள்..
வலி
எதுவாயினும்
நிவாரணம்
பெற
ஸ்லோன்ஸ் லினிமெண்ட்
"எந்த வலிக்கும் ஏற்ற மருந்து
ஸ்லோன்ஸ் பாமையும் உபயோகிக்கலாம். சிறிது தடவினால் போதும். இதமான அதன் வெப்பம் உடனடி ஙிவாரணம் தருவதை உணரலாம்.
SLOAN'S LINIMENT
KILLS PAIN
கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது.)



ஏதும் புதுமையேயில்லை! அவன் சொன்னதிலும் சரி, அவர்கள் சிரித்ததிலும் சரி, எல்லாம் பழகிப்போய் விட்டது. இங்கே எல்லோருக்குமே பைத்தியம்! அவன் எது சொன்னாலும் சிரிக்கிறார்கள். ஏன், பதில் சொல்வதற்கு எழுந்து நின்றாலுமே அவர்கள் சிரிக்கிறார்கள்.

இந்தத் தடவை நல்லசிவம் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டார்.

''என்னடா சொன்னாய்...?''

அவனுக்கு இப்போது பதில்சொல்ல ஓடவில்லை. சொன்னால் எல்லோரும் பொத்துக் கொண்டு சிரிக்கப் போகிறார்கள். என் பதில் சொல்லவேண்டும்?

நல்லசிவம் தலையை ஆட்டிக்கொண்டார். நல்ல வழுக்கைத் தலை! சன்னலின் உருவம் அப்படியே அவர் மண்டையில் தெரிகிறது. மழுமழுவென்று எண்ணெய்த் தோல்! கல் எறிந்தால் தலையில் 'ணங்' என்று சத்தம் கேட்கும். செய்து பார்க்கலாமா? அப்போது 'அட பாவி' என்று அவர் கோணல் வாயை இன்னும் கோணிக்கொண்டு குதித்தாரானால்.... அதை நினைக்கவே சிரிப்பு வருகிறது.

''ஏறுடா பெஞ்சு மேலே!''

அவன் ஏறிக் கொண்டான்.

நல்லசிவம் 'செயப்படு பொருளை' விளக்கிக் கொண்டிருந்தார். கரும் பலகையில், 'கோவிந்தன் பாலை அருந்தினான்' என்று கொட்டை கொட்டையாக அவர் தலை அவ்வளவு பெரிதாக எழுதியிருந்தார். பிரம்பை எடுத்து ஒவ்வொரு வார்த்தையிலும் நீட்டி விவரித்துக் கொண்டிருந்தார்.

இந்த வகுப்பிலுள்ள பிள்ளைகள் தான் அவர் பேசுவதை எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்? எவ்வளவு ரசிக்கிறார்கள்? சுத்தப் பைத்தியங்கள்!

மணி அடித்துவிட்டது. சிறுவர்கள் பள்ளி வாயிலிலிருந்து சிதறி வெளிப் பறந்தார்கள்.

அவன் பெஞ்சியிலிருந்து கீழே இறங்கி நடந்தான்.

இலந்தைக் குளம் மண்கரை! இருபுறமும் ஒரே முள் மரங்கள்! பாளம் பாளமாய்ப் பிளந்தது. அவனுக்கு அது ராஜபாட்டை. —கிராமத்துக்கு இங்கிருந்து இரண்டு மைல். கிராமத்துப் பிள்ளைகள் தூரத்தில் போய்க் கொண்டிருந்தார்கள். அவன் வருகிறானா என்று திரும்பிப் பார்த்தவாறு போய்க் கொண்டிருந்தார்கள்.

''டேய் துரைக்குட்டி உம்மணா மூஞ்சி!'' என்று அவர்கள் கத்துவது கேட்டது.

அவன் அதைப் பொருட்படுத்தவேயில்லை. மெதுவாக அவன் எழுந்தால் போதும்! அவர்கள் கதிகலங்க வேகமாக ஓடிவிடுவார்கள். பயங்காளிகள்!

உண்மையில் அவன் யாரிடமும் பேசுவது கிடையாது. விழிகளை விரித்து, பார்வையால் குடித்துவிடுவது போல் எதையும் பார்ப்பான். எதையும் கூர்ந்துகேட்பான். அவ்வப்போது மனத்தில் தீர்மானங்களை வடித்துக் கொள்வது போல் தலையைச் சிறிது ஆட்டிக்கொள்ளுவான். ''துரைக்குட்டியா? அது முசுடு!''

அவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். தொலைவில் கமலு நடந்து வருவது தெரிந்தது. கழுத்தில் தொங்கத் தொங்கப் பை! பாவாடை அடிக்கடி தடுக்குகிறது. இடது கையை வீசி ஆட்டிக்கொண்டே வருகிறாள். அருகில் வரும் வரையில் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

''துரைக்குட்டி! நாழியாயிடுத்துடா! இந்தக் கேம்ஸ் டீச்சர் விடமாட்டேன்னு சொல்லி விட்டாரடா!''

''அவன் முகத்தை நாளைக்குத் திருப்பிடறேன்; சனி!''

அவன் தன் டைக்குள் கையை விட்டான். உள்ளிருந்து ஒரு மயில் இறகை எடுத்துக் காண்பித்தான். கமலத்துக்கு விழியெல்லாம் விரிந்து விட்டது.

''அச்சச்சோ! என்ன அழகுடா!'' என்று கையை நீட்டி வாங்கிக் கொண்டாள். பிறகு அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்தாள்.

''புத்தகத்திலே வைச்சுக்கறேன்! குட்டி போடட்டும்! உனக்கு ஒண்ணு தரேன்!''

''அது குட்டி போடாதுடா, துரைக்குட்டி!''

''க்கும்! போடீ! பொய் சொல்லறே!''

''ஐயோ! அது குட்டி போடாதுடா!''

கமலு பெரியவள். எட்டாவது வகுப்பில் படிக்கிறாள். அவள் சொல்வதெல்லாம் நிஜமாகத்தான் இருக்க வேண்டும். கமலு கெட்டிக்காரியும்கூட! அவளுக்கு உலகத்திலே எல்லாம் தெரியும். அவள் சொன்னால் ஒத்துக்கொள்ள வேண்டியதுதான்!

கிராமத்தை நோக்கி நடக்கிறார்கள். கமலு ஒருத்திதான் அவனுக்குச் சேக்காளி. அவன் அம்மாவுக்குக்கூட கமலுவின் அம்மாதான் சேக்காளி. இரண்டு பேரும் சேர்ந்தால் விடிய விடியப் பேசுவார்கள்.

''ஏண்டா! மத்தியானம் டிபன் கொண்டு வரவில்லையா?''

''ஏன்? அம்மா ஒன்றும் கொடுக்கவில்லை.''

''அட பாவி! பட்டினியா கிடந்தாய்?''

''இல்லை! தோப்பிலே கொடுக்காப்புளிக் காய் எறிஞ்சு சாப்பிட்டேன்.''

இருவரும் மௌனமானார்கள். ஊர் தென்பட்டதும் அவன் நடை பின்னவிட்டது.

''ஏண்டா, தயங்கறே?''

''எனக்கு வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை கமலு! அம்மா திட்டுறு!''

''திட்டினால் திட்டிவிட்டுப் போகட்டும். எங்கம்மா என்னைத் திட்டவில்லையா?''

தெருவில் நுழைவதற்கு முன்னால் எதிரே தரகர் முத்துசாமி தென்பட்டார். ''ஏன்க ச.....ச..... கமலு.....ஊ....'' அவர் ஒவ்வொரு வார்த்தையையும் இழுத்து இழுத்துத் தான் பேசுவார். வாய் காதுவரை கிழிந்திருக்கும். வாயெல்லாம் பொய்ப் பல். கண் குழம்பிப் போய் வெளிறி யிருக்கும். தலை முழுதும் நரை.

ஆளுக்கொரு மிட்டாய் கொடுத்தார். அவர் மடி நிறைய மிட்டாய்கள்! எப்போதும் அதைத்தான் சாப்பிடுவாராம்! சாதமே சாப்பிட மாட்டாராம்!

இதில்கூட ஒரு விசேஷம்! கமலு கூட இருந்தால்தான் இந்த மாமா மிட்டாய் எடுத்துக் கொடுக்கிறார். அவன் மாத்திரம் தென்பட்டால் அவர் கவனியாதது போல் போய் விடுகிறார். என்ன இருந்தாலும் இந்தக் கமலு எதிலுமே அதிர்ஷ்டக்காரிதான்!

கமலு பிரிந்து போய் விட்டாள். அவன் வீட்டுக்கு வந்தான். உள்ளே அம்மா திட்டிக் கொண்டிருந்தாள். எப்போதும் அவள் திட்டிக் கொண்டுதான் இருப்பாள். அவள் திட்டுக்களைக் கேட்டுக் கொள்ள மொத்தம் நான்கு அக்காக்கள் இருந்தார்கள். இப்போது ஒரு கைக் குழந்தையும் சேர்ந்து கொண்டு விட்டது. வசவுகளில் பாரபட்சமே கிடையாது.

நடையில் பையைத் தூக்கி யெறிந்தான். வெளியே திண்ணையில் முட்டுகளைக் கட்டி உட்கார்ந்து விட்டான். விரைவில் இருளாகி விட்டது. அரை நிலா தெருவில் கனிந்து கொண்டது. வெளியே பிள்ளைகளின் இரைச்சல் கேட்கத் தொடங்கி விட்டது. அவன் வயிறு கிள்ளி விட்டது.

சமையலறையில் நுழைந்தான். அலுமினியத் தட்டு! இதில் அரைத் தட்டுச் சோறு. மூன்று கவளம் கூட வராது. எலுமிச்சை ஊறுகாய்! ஒரே விழுங்கில் விழுங்கிவிட்டான். காணாது போலிருந்தது. ஆனால் இன்னும் கேட்கக் கூடாது. ''மற்றவர்களுக்கு வேண்டாமா?'' என்று அம்மா நொடித்து விடுவாள்.

மறு தினம் விடுமுறை. காலையிலேயே அவன் திண்ணையில் வந்து உட்கார்ந்து விட்டான். அவன் மனத்தில் பிரமை தோன்றி விட்டது. பெரிய மலை தெரிகிறது. அங்கங்கே கருங்கற் பாறைகள்! எல்லாவற்றை

யும் வெடி வைத்துப் பிளக்கிறார்கள். ஜல்லிக் கற்கள் 'கலகல'வென்று அவன் மீது புரண்டு விழுகின்றன.

ஜல்லிக் கற்களின் கலகலப்பு வகுப்பின் சிரிப்பாக மாறி விடுகிறது. எல்லாப் பிள்ளைகளும் சிரிக்கிறார்கள். அவன் பெஞ்சு மீது நின்று கொண்டிருக்கிறான். தமிழ் வாத்தியார் செய்யுட் பொருளை விளக்கிக் கொண்டிருக்கிறார்.


''காப்பிக்கொட்டேய்...'' வாசலில் சாயபு வருகிறார். இச்சாமி வீட்டில் வாங்குகிறார்கள். அப்புறம் எதிரே ராமசுப்பன் வீடு, கணக்குப் பிள்ளை மாமா, ஆழ்வார் மாமா, எல்லார் வீட்டிலும் வாங்குகிறார்கள். ராமசுப்பன் வீட்டில் அண்டா நிறையக் காப்பி போடுவார்களாம். எல்லோரும் தண்ணீருக்குப் பதில் காப்பிதான் குடிப்பார்களாம். அதனால்தான் எல்லார் உடம்பும் பருத்து வருகிறதாம்.

எத்தனை தரம் அவர்கள் வீட்டுவாசல் வழியே நடந்தாகி விட்டது. அழிக் கம்பிகளுக்கிடையே ராமசுப்ப மாமா கணக்கு நோட்டைப் பிரித்து வைத்திருப்பது தெரியும். சுற்றிவரப் பத்து ரூபாய், ஐந்து ரூபாய், ஒரு ரூபாய் நோட்டுக்கள் வைத்திருப்பார். எட்டணா, நாலணா, பத்து பைசா எல்லாம் உயர உயரமாக அடுக்கி யிருப்பார். ''நம்ப அப்பாவும் இப்படி அடுக்கிக் கணக்குப் பார்க்கக் கூடாதா?'' என்று எத்தனை தரம் அவன் நினைத்திருக்கிறான்.

ஊரிலே தெருவிலே போகும் அத்தனை பேரும் ராமசுப்ப மாமாவுக்குக் கும்பிடு போட்டுப் போகிறார்கள். பால்காரன், தயிர்க்காரி, வண்டிக்காரன், காய்கறிக்காரன் எல்லாருமே 'நம்ப அப்பாவை, 'போ சாமி'ன்னு உதறி விட்டுப் போகிறார்கள். அப்பாவுக்கும் போக்கு இல்லை. அவர்களிடம் பல்லிளிக்கிறார். குழைகிறார். உடம்பிலே தெம்பே கிடையாது. ஊசி போலிருக்கிறார். காலையிலே சாதம் பிசைந்து சாப்பிட்டு விட்டு வீட்டை விட்டுப் போனதோடு சரி! டவுனில் ஒரு மருந்துக் கடையில் கணக்கு எழுதுகிறாராம். கடையில், இப்படித்தான் இந்த ராமசுப்ப மாமாவைப் போல், அவரைச் சுற்றி வரப் பணம், காசு மிதக்குமாம். அதில் கொஞ்சமாவது வீட்டுக்குக் கொண்டுவரத் துப்பு இருக்கிறதா?

திண்ணையை விட்டு இறங்கித் தெருவில் நடந்து போகிறான். தெருப் பையன்கள் ஆட்





டத்தை நிறுத்தி விட்டு அவனை வெறித்துப் பார்க்கிறார்கள். பையன் களைப் பொருட்படுத்தாமல் எங்கேயோ வெறித்த பார்வையாய்ப் பார்த்துக் கொண்டே போகிறான்.

ஆற்றங் கரை நடுப்பாறையில் துணிகளை அவிழ்த்து வைக்கிறான். ''தொம்''மென்று நீரில் குதிக்கிறான். ஒன்று. இரண்டு என்று எண்ணிக் கொண்டே ஐம்பது 'முங்கு' முங்குகிறான். அலைகள் அடுக்கடுக்காய் எழுந்து, ஆற்று நீரே கொந்தளிக்கிறது. அவன் உடம்பில் ஒரு குளுமை பரவுகிறது. உள்ளமெல்லாம் குளிர்வதுபோல் இருக்கிறது. கோபம் மிதமாகிறது.

''துரைக் குட்டீ......''

அவன் திரும்பிப் பார்த்தான். கரையில் கமலு நின்று கொண்டிருந்தாள். அவள் குளித்து விட்டிருந்தாள். தலையை விரித்து முதுகு முழுதும் பரப்பியிருந்தாள்.

''இதோ வந்து விட்டேன்.''

அவன் கரையேறினான். மேலெல்லாம் துடைத்துக் கொண்டான். கமலுவின் காதோர இழைகள் காற்றில் நிழல் வரிகளாக ஆடிக் கொண்டிருந்தன. ஈரத்துண்டை மேலாக்கு போல் போட்டிருந்தாள்.

இருவரும் புறப்பட்டார்கள். கழுதைக் காய்ச்சி மாமரத்தின் அருகில் போயிருப்பார்கள். ''டே, டே, டே டேய், குளிச்சாச்சா?'' என்று கேட்டுக்கொண்டே முத்துசாமி வந்து விட்டார். பொய்ப் பல்லைக் காண்பித்துக் கொண்டு வாய் கிழியச் சிரிக்கிறார்.

''நல்லா குளிச்சயோடீ, கமலு? உடம்பெல்லாம் நல்லா தேய்ச்சுக் குளிச்சாயா?''

அவர் வாய் காதுவரை நீண்டுவிட்டது. கமலுவை உற்றுப் பார்த்தார். கமலு பதில் சொல்லாமல் வெட்கத்தோடு நகர்ந்தாள்.

''இந்த மாமாவைப் பார்த்தியாடா?''

''பார்த்தேன். மடியிலே பணப்பை தொங்குறது....''

''நான் அதைச் சொல்லலைடா!''

''பின்னே எதைச் சொன்னே....?''

அவன் பதில் பேச வில்லை. அவனைச் சற்று நேரம் உற்றுப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து விட்டாள்.

வீட்டுக்கு வந்து விட்டான். உள்ளே அவன் அம்மாவோடு கமலுவின் அம்மா பேசிக் கொண்டிருந்தாள். இடையிடையே பேச்சில் 'எப்போது விடியும், மாமி? எப்போது விடியும்?'' என்று அடிக்கடி கேட்டுக் கொள்கிறாள். கமலுவின் அப்பாவுக்கு ஒரு துணிக் கடையில் வேலையாம். சம்பளம் வருகிற போதுதான் நிச்சயமாம். மொத்தம் ஐந்து ஜீவன்கள் இதில் வாழ வேண்டுமாம்.

கமலுவின் தாய் போகும்வரை அவன் காத்திருக்கிறான். பிறகு சாப்பாட்டுக்கு உள்ளே நுழைந்து விடுகிறான்.

அன்று பள்ளிக்கூடம் போனான். வகுப்பில் உட்கார்ந்ததுமே ''துரைக் குட்டீ! எழுந்திருடா!'' என்றார் ஆசிரியர்.

இந்த அழைப்பை அவன் எப்போதும் எதிர்பார்த்ததுதான். எழுந்திருந்தான். கணக்கு வாத்தியார் அவனருகில் வந்தார். ''நீ வீட்டுக் கணக்குப் போட்டாயா?'' என்று காதை இழுத்துப் பலாச்சுளையைப் பிய்ப்பது போல் பிய்த்துக் கொண்டிருந்தார்.

மௌனம்.

அவர் கணக்கு நோட்டைப் பிரித்துப் பார்த்தார். அவன் கணக்கு ஒன்றுமே போடவில்லை. அவனை இழுத்து மேஜையருகில் கொண்டு போனார். பிரம்பை உருவினார். பளாச்சென்று ஓங்கி இழுத்தார்.

எல்லோரது முகங்களிலும் சந்தோஷம் தெரிகிறது. அவன் அடிபட்டால் அவர்கள் நன்றாக ரசிக்கிறார்கள்.

மாலையில் கமலுவுடன் வரும்போதும் அதே மௌனம். வீட்டுக்குள் பையை எறிந்து விட்டுத் திண்ணையில் முழங் கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

கமலு சீக்கிரமே சாப்பிட்டு விட்டு வந்து விட்டாள்.

''உன்னைக் கணக்கு வாத்தியார் அடித்தாராடா ?''

மௌனம்.

''சொல்லேண்டா!''

அவன் வலது கையை விரித்தான். கை கன்னிப் போய் மூன்று வரிகள் ரத்தக் கட்டிகளாகத் தோய்ந்திருந்தன.

''ஐயோ!'' கமலு பதைப்பது தெரிந்தது. ''எப்படிடா பொறுத்துக்கொண்டு நிற்கிறே? ஒத்தடம் போட்டுக்கோடா!''

அவன் அம்மா வெளிவந்து கொண்டிருந்தாள். ''மாமி, உங்க துரைக் குட்டியைக் கணக்கு வாத்தியார் நல்லா அடிச்சுட்டார்.''

அவள் ஒரு கணம் நின்று அவனை விறைத்துப்பார்த்தாள்.

''இவன் ஏதாவது விஷமம் பண்ணியிருப்பான்..... நல்லா பிச்சு வாங்கக் கூடாதோ? கண் இரண்டைத் தவிர உரிச்சு எடுத்துடணும்!'' என்று கூறிப் போய் விட்டாள்.

அவன் பார்வை அப்படியே நகருங்காமல் இருந்தது. இப்போது கல் ஆறு நகர்ந்து வருகிறது. மீன்களெல்லாம் பயந்து போய்த் துள்ளிக் குதிக்கின்றன. நண்டுகளும், பாம்புகளும் கரையேறி ஓடுகின்றன.

இதற்குள் கமலு ஒரு சிறிய துணியில் தேங்காய் எண்ணெயை நனைத்து எடுத்து வந்து விட்டாள். மெதுவாக அடிபட்ட இடத்தில் விரலி விட்டு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அவனுக்குச் சிறிது குளுமை பரவுவது போல் தோன்றியது. கமலுவைப் பார்த்தான். கமலு முகத்தில் பெரிய அம்மா ஆகி விட்டது போல் தோற்றம் கூடி விட்டது.

வீட்டுத் திண்ணையில் அப்படியே படுத்துக் கொண்டான். உள்ளே அம்மாவின் 'அர்ச்சனை' ஒவ்வொன்றாக விழுகிறது.

ஒருத்திதான் விலக்கு! அது கமலுதான்! அவள்தான் அவனிடம் இரக்கம் காட்டுகிறாள். அவள் பெரியவள்! கெட்டிக்காரி சமர்த்து!....

அன்று பள்ளிக்கூடம் போகும்போது மனமே சரியில்லை. நினைவுகள் அடிக்கடி உருவாகிக் கொண்டிருந்தன. கல் ஆறு 'ஜோரா'வென்று பேரிரைச்சலுடன் வந்துகொண்டிருந்தது.

மாலையில் இலந்தைக் குளத்தின் ஒற்றையடிப் பாதை! கமலுவும் அவனும் நடந்து கொண்டிருந்தார்கள்.

''இந்தத் தமிழ் வாத்தியாரைப் பார்த்தாயாடா?''

''என்ன சொன்னார்?''

''செய்யுளிலே ''மீன் விழியாய்!'' ன்னு வந்தது. அதுக்கு அவர் என் கண்ணைக் காட்டி 'இதுதான் மீன் விழி'ன்னு சொன்னார்டா! பசங்களெல்லாம் கேலி பண்றாங்க!''

''யாரெல்லாம் கேலி பண்ணினாங்க?''

''கடலைமுத்து, சீனு, சங்கரன்!''

''எல்லாரையும் ஒரு கை நான் பார்க்கிறேன். இந்தத் தமிழ் வாத்தியார் முகத்தை

நிமிஷக் கதைகள்

ஒரு முறை சீன அரசர் ஒருவர் இந்தியாவின் பாதுஷாவாக விளங்கிய ஔரங்கசீப்புக்குக் கண்ணாடி ஒன்றை அன்புக் காணிக்கையாக அனுப்பினார். ஔரங்கசேப் தமது மகள் ஜேபுன்னிஸாவுக்கு அதைப் பரிசாக அளித்தார். அது ஜேபுன்னிஸாவுக்குப் பிடித்த பொருளாகி விட்டது. அவள் அதை அருமையாகப் போற்றிப் பாதுகாத்து வைத்துக் கொண்டாள்.



ஒரு நாள் தன் அடிமை ஒருத்தியை ஏவி அதை எடுத்து வருமாறு சொன்னாள். தற்செயலாகக் கைதவறிக் கீழே விழுந்து அது உடைந்து விட்டது. இன்று இளவரசியிடம் நல்ல வசவு வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியது தான் என்ற பயத்துடன் வந்த பணிப்பெண், கையைப் பிசைந்து கொண்டு, ''அந்தச் சீனக் கண்ணாடி உடைந்து போய்விட்டது!'' என்றாள்.

இளவரசி சிறிதும் கோபித்துக் கொள்ளாமல், ''நல்லதாகப் போயிற்று. வருத்தப் படாதே! தற்புகழ்ச்சிக்கு அணிகலனாக விளங்கிய அது தொலைந்ததில் சந்தோஷப்படு!'' என்று கூறினாள்.

ஃ ஃ ஃ

பண்டித மதன்மோகன் மாளவியாவுக்கு ஒரு முறை நல்ல ஜுரம். 104—105 டிகிரிகூடப் போய் விட்டது. குடும்பத்தினர் அவருக்கு அருகிலேயே இருக்க விரும்பினர். ஆனால் மாளவியா அதற்குச் சிறிதும் சம்மதிக்க வில்லை. கடைசியில் ஒரு பணியாளை அவர் அருகில் இருக்கச் சொல்லி விட்டுத் தங்கள் அறைக்குப் போய் விட்டனர்.

இரவு ஒரு மணி சுமாருக்கு மாளவியாவுக்கு 'பாத்ரூம்' போய் வரவேண்டும் என்று தோன்றியது. வாசற்படியில் தலையை வைத்து வேலைக்காரன் படுத்துக் கொண்டிருந்தான். அசதி மிகுதியினால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அவனைத் தாண்டிப்போவது சரியாய்ப் படவில்லை அவருக்கு. அவன் படுத்திருந்த வழியே போனால் 'பாத்ரூம்' வெகு அருகில் இருந்தது. அவனை எழுப்ப விரும்பாத மாளவியா இன்னொரு புறத்துக் கதவைத் திறந்து கொண்டு அரை மைல் நடந்து சென்று பாத்ரூமை அடைந்தார். ஒலி கேட்டு விழித்துக்கொண்ட அவர் பின்னை கோவிந்த மாளவியா தந்தையிடம் சென்று, ''என்ன காரியம் அப்பா செய்கிறீர்கள்? நாங்கள் எதற்காக இருக்கிறோம்? வேலைக்காரனை எதற்காகப் போட்டிருக்கிறோம்?'' என்று கேட்டார்.



மாளவியா சாந்தமாகச் சொன்ன பதில் இது தான்: ''வேலைக்காரன் பாவம், பகல் முழுதும் வேலை செய்து செய்து களைத்துப் போய்த் தூங்கியிருக்கிறான். அவனை எப்படி எழுப்புவது? அவனும் மனிதன்தானே?''

கூடைக்கடறேன்! ரொம்பத் துள்ளாட்டம் போடுகிறாய்!'' அவன் மனம் கொதித்துப் பொங்கிக் கொண்டிருந்தது.

தினமும் மாலையில் கமலுவுக்குக் கடைசி பீரியட் தான் தமிழ் வகுப்பு. பள்ளி விட்டதும் அவன் ஓடிப்போய் அவள் வகுப்பைக் கவனிக்க ஆரம்பித்தான். பிள்ளைகள் அவன் வெளியில் நிற்பதைக் கண்டு வெல வெலத்து வருவது தெரிந்தது. கமலுவை ஒருவரும் அவன் முன் கேலி செய்யவில்லை.

அன்று வகுப்பு விட்டதும் நேராகக் கமலுவின் வகுப்புக்குச் சென்றான். அங்கே அந்த வகுப்பில், மணி அடித்த பிறகும், இன்னும் பிள்ளைகள் வெளிவரவில்லை. மெள்ள வகுப்பறைப் பக்கம் சென்றான். உள்ளே ஒரே சிரிப்பும், ஆரவாரமும் எழுந்து கொண்டிருந்தன. கமலுவின் கன்னத்தைத் தமிழ் வாத்தியார் திருகிக் கொண்டிருந்தார். கமலு வெட்கப்பட்டுத் திமிறிக் கொண்டிருந்தாள். வாத்தியார், அவள் கையை விடாமல் பிடித்து வைத்திருந்தார். வகுப்பு முழுதும் 'ஓ' வென்று சிரித்துக் கொண்டிருந்தது.

''ஹோ !''

இது அந்தக் கல் ஆற்றின் பேரிரைச்சல் போல் இருந்தது. அவனுக்கு ஆத்திரம் பொங்கி விட்டது. அவன் மீது கல் ஆறு பாய்வது போல் பிரமை தோன்றி விட்டது. உணர்வுகளெல்லாம் கொழித்து ஆர்த்து விட்டன. உடல் வெட வெட வெனத் துடிக்க ஆரம்பித்து விட்டது.

சட்டென்று திரும்பிப் பார்த்தான். கீழே, அருகில், கட்டட வேலைக்காக ஜல்லிக்கற்களைக் குவித்து வைத்திருந்தார்கள். அதைப் பார்க்கும் போதே ஆத்திரம் குபீரெனப் பொங்கி விட்டது. கல் ஆறு அவன் காலடியில் வந்து விட்டது போல் நினைவு தோன்றி விட்டது.

உடன் குனிந்தான். இரண்டு கற்களை எடுத்தான். ''தமிழ் வாத்தியார் ஒழிக!'' என்று கூறி வகுப்புக்குள் 'விண்'ணென்று இரைய வீசியெறிந்தான். வாத்தியார் கமலுவின் கையை விட்டார்.

''டேய், ராஸ்கல்!''

அவரைப் போக விடவில்லை. அவன் மீண்டும் கல்லை எறிய ஆரம்பித்தான். வாத்தியார் துள்ளிப் பதுங்கினார். குனிவதும், பொறுக்குவதும், எறிவதுமாக இருந்தான். ஆத்திரத்தின் வேகம் அவனை ஆட்கொண்டு விட்டது.

''டேய்! துரைக் குட்டிக்கு வெறி புடிச்சுட்டதுபோய்!''

அவன் அயரவில்லை. எறிந்து கொண்டேயிருந்தான். ஜல்லிக் கல்லெல்லாம் காலியாகியும் விட்டது. பியூன்கள் ஓடி வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

எல்லோரும் அவனை அடிப்பதுதான் தெரிந்தது. முதுகைப் பிளந்து விட்டார்கள். சட்டை கிழிந்து விட்டது. அவன் தலையைக் குனிந்து முதுகைக் காட்டிய வண்ணமேயிருந்தான். நிமிரவேயில்லை!

இருளாகி விட்டது. அவன் முனகிக் கொண்டே தள்ளாடியவாறு வீடு நோக்கி நடந்தான். வீட்டை அடைவதே வெகு பிரயாசையாகி விட்டது. திண்ணையிலேறிப் புரண்டு விட்டான். முதுகெல்லாம் வலி பிளந்து கொண்டிருந்தது. தன்னையே தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

''ஜுரமா?''

அப்புறம் எல்லாமே கனவுகளாகத் தோன்றின. அம்மா விளக்குடன் வருவது, பேசுவது, பிறகு அப்பா வந்து பார்ப்பது எல்லாமே தெரிகின்றன. அவன் வாயில் ஏதோ கஷாயத்தை விடுவது மாத்திரம் உணர்கிறான்.

மூன்று வாரங்கள் போனதே தெரியவில்லை. காய்ச்சல் வறுத்தெடுத்து விட்டுப் போய் விட்டது. மெள்ள நடமாட முடிகிறது. உடம்பில் நோவு குறைந்திருக்கிறது.

அன்று பள்ளிக்கூடம் போவதற்கு அவன் விரும்பினான். பையைத் தூக்கித் தோளில் மாட்டிக் கொண்டு புறப்பட்டான். கமலுவை அழைக்க வேண்டும் என்று தோன்றியது. அவள் வீட்டு வாசலில் போய் நின்றான்.

''கமலு......!''

அவள் வெளியே வந்தாள். இது யார்? கமலுதானா? அவளை வியப்போடு பார்த்தான். அவளை இந்தப் பெரிய தோற்றத்தில் காண்பிப்பது எது? இப்போது முதன் முதலாக அவள் அணிந்திருக்கும் தாவணியா ?

அவன் வியப்பு நீங்க வில்லை. அவள் அவனைப் பார்த்ததும் இரக்கத்தோடு சிரித்தாள்.

''ஸ்கூலுக்கு வரயா, கமலு?''

''ஸ்கூலுக்கு இனிமேல் போக மாட்டேன். வெளியிலேயும் அதிகம் வரமாட்டேன்!''

''ஏன் கமலு?''

அவள் பதில் பேச வில்லை. மெள்ள அவள் உதடுகளில் சிறிய புன்னகை தோன்றி விட்டது. அவனை மீண்டும் இரக்கத்தோடு பார்த்தாள். பிறகு தலையைக் குனிந்துகொண்டாள்.

அவன் புறப்பட்டான்.

வகுப்பில் போய் உட்கார்ந்தான். பையன்கள் ஒருவரும் பேச வில்லை. கணக்கு வாத்தியார் வந்தார். அவனைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

சிறிது நேரத்தில் ஒரு பியூன் அவனிடம் வந்தான். ''ஹெட்மாஸ்டர் கூப்பிடுகிறார்'' என்று அவனை அழைத்துப் போனான்.

அவர் அறையுள் நுழைந்த போதே ஒரு சிறு படபடப்பு ஏற்பட்டது. தலைமை ஆசிரியர் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''நீதானே துரைக் குட்டி?''

அவன் தலையசைத்தான்.

''நீ அன்றைக்கு ஏன் இப்படி நடந்து கொண்டாய்?''

மௌனம்.

''ஏன் எல்லோர்மீதும் கல்லை எறிந்தாய்?''

பதில் இல்லை.

''ஏன் எறிந்தாய், சொல்! உன்னால் மூன்று பேர்களுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது! இது தெரியுமா, உனக்கு?'' அவர் கர்ஜித்து விட்டு எழுந்தார்.

அவனுக்குப் பதில் சொல்ல ஓடவில்லை. ஒருகணம், தன் முன்னால் பாய்ந்து வரும் கல் ஆற்றைப் பற்றி அவரிடம் கூறி விடலாமா என்று தோன்றியது. அவனது பிரமை, அதில் அவனுக்கு ஏற்பட்டுள்ள நெருங்கிய ஈடுபாடு, அந்தக் கல் ஆறு பாய்ந்து வரும் தோற்றம், எல்லாவற்றையும் அவர் கேட்டால் சிரிக்க மாட்டாரா?

அவர் கோபம் அதிகரித்து விட்டது.

இடுப்புப் பக்கவலி கோவிந்தனை வேலை செய்ய வொட்டாமல் தடுத்தது...



ஸாரிடான் ரோஷ்'

வலியைப் போக்குகிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சியூட்டுகிறது

ஸாரிடான் துரிதமாக, நிச்சயமாக, கெடுதல் எதுவுமின்றி, வலியைப் போக்குகிறது. உடல்வலி, தலைவலி, பல்வலி, ஜுரம் வரும்போதிருப் பது. சாதாரண உடல் கோளாறுகள் இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு 1 வில்லை; குழந்தைகளுக்கு விருக்கு ½ வில்லை வரை.

ரோஷ்' தயாரிப்பு

ஹோல் டிஸ்ட்ரிபூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்



ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 நயா பைசா

JWT. VT.-4796

''நீ போகலாம்! நாளையிலிருந்து நீ ஸ்கூலுக்கு வரவேண்டாம்!''

மெள்ள வெளியே நடக்கிறான். துணிப்பை அவன் தோளைச் சுற்றித் தழுவிக் கொள்கிறது.

ஊர்த் தெருவில் நுழைகிறான். அவன் வீட்டு வாசலில் ஒரு கை வண்டி புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் குடம், தவலை, விளக்கு அலமாரி முதலியவை தென்படுகின்றன. அந்த வண்டியை எல்லாரும் வேடிக்கை பார்ப்பது தெரிகிறது. ''ஜப்தி'', ''ஏலம் போட்டு விட்டார்கள்'' என்று இரண்டொரு வார்த்தைகள் தெருவில் போவோர் பேசுவதிலிருந்து கேட்கிறது.

வீட்டுக்குள் நுழைகிறான். அப்பா ரேழியில் அமர்ந்திருக்கிறார். அம்மா, கண்ணீர் வடிய, பாவுள் நிலையருகில் நிற்கிறாள். அவனை ஒருவரும் கவனித்ததாகத் தெரியவில்லை. வீடு வெறிச்சிட்டிருக்கிறது.

இரண்டு தினங்கள் ஓடி விடுகின்றன. வீடு முழுதும் நிசப்தம் நிறைந்திருக்கிறது. ஒருவர்க்கொருவர் ஒன்றும் பேசுவதில்லை.

மூன்றாம் நாள் அவனை அப்பா அழைக்கிறார். தன்னுடன் டவுனுக்கு அழைத்துப் போகிறார். டவுனில் ஒரு சைக்கிள் கடைமுன் நிற்கிறார்.

''மூர்த்தி சார்! இவன்தான் நம்ப பையன். வைத்துக் கொள்ளுங்கள்! சேட்டை, இட்டை பண்ணினால் உரித்துவிடுங்கள்!'' என்கிறார்.

அவன் அவரை விட்டு விலகி, சைக்கிள் கடையுள் நுழைகிறான். அப்பா உடன் போய் விடுகிறார்.

காலை ஆறு மணியிலிருந்து இரவு பத்து வரை இங்குதான் வேலை. இங்கேதான் சாப்பாடு, படுக்கை எல்லாம்! அப்பா மாத்திரம் மாதா மாதம் கடைக்காரரிடம் பதினைந்து ரூபாய் வாங்கிப் போய்விடுகிறார்.

முதல் முதலில் எல்லாம் குஷிப்பதாக இருந்தது. சைக்கிளைத் துடைப்பது, நட்டுக்களைக் கழற்றுவது, பஞ்சர் ஒட்டுவது.... இப்போது அலுத்துப் போய் விட்டது.

கமலுவின் நினைவு அடிக்கடி வருகிறது. அவள் எங்கேயோ இருந்து கொண்டு அவனைக் கவனித்து வருகிறாள் என்ற நினைவே அவனுக்கு உயிர் தரிக்கச் செய்கிறது.

ஒரு நாள் சைக்கிள் டைனமோ ஒன்றைக் கீழே போட்டு உடைத்து விட்டான். கடைக்காரர் கோபமாக இறங்கி வந்தார். ''இப்படியாடா செய்வது மடையா?'' என்றவாறே கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டார். அவன் உடன் கன்னத்தைப் பொத்திக் கொண்டான்.

சாயங்காலம் வரை அந்த உணர்வுகள் சிவ்வென்றிருந்தன. மனத்தில் மீண்டும் ஒரு வெல வெலப்பு உண்டாகி விட்டது. இங்கே கமலு இருந்தால்.... ''வலிக்கிறதாடா ?'' என்று அவள் மெதுவாகக் குழைந்து கேட்கும் கேள்வியே அவனது வலியை எடுத்து விடும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. கடையை மத்தியானம்தான் திறப்பார்கள். அவன் ஊருக்குப் புறப்பட்டு விட்டான். கமலுவை எப்படியாவது பார்த்தே தீர வேண்டும் என்ற உறுதி தோன்றி விட்டது.

ஊரில் வீட்டை அடைந்ததும் அம்மா அவனை விசாரிக்கவில்லை. ''ஏண்டா! வேலையை விட்டு எதற்குடா வந்தாய்?'' என்றுதான் கேட்டாள். ''லீவு அம்மா !'' என்றான் அவன். நேராகக் கமலுவின் வீட்டுக்குச் சென்றான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. கதவு அடைத்திருந்தது. வெறுமையுடன் திரும்பினான்.

''அம்மா, கமலு எங்கேம்மா?''

அம்மா பதில் சொல்லவில்லை.

''கமலு எங்கேம்மா?''

''டவுனிலே ஜவுளி எடுக்கப் போயிருக்கிறாள் !''

''ஜவுளியா?''

அம்மா பதில் பேசவில்லை. கமலுவுக்கு ஜவுளி எடுக்க ஏது பணம்?

மத்தியானம் சைக்கிள் கடைக்குத் திரும்பி விட்டான். கடை வாயிலில் முதலாளி நின்று கொண்டிருந்தார். ''சுற்றிவிட்டா வருகிறாய்? போடா, கழுதை!'' என்று இரைந்தார்.

நாட்கள் ஓடுகின்றன. மாதங்களும் விரைகின்றன. வர வர வேலை கடினமாகிறது. பள்ளிக்கூடம் போவதை விட வேலை செய்வது மிகவும் கடினம் என்றாகி விடுகிறது. இந்தத் துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன ? தமிழ் வாத்தியார் இலக்கணத்தை ஏன் அவன்மீது திணிக்கிறார்? கடை முதலாளி ஏன் வேலையைத் திணிக்கிறார்? மனிதர்கள் ஏன் தமிழ் வாத்தியாராகவும், சைக்கிள் கடை முதலாளியாகவும் பிறக்கிறார்கள்? கமலு

> ஆண்டவனைப் பற்றி அறிவுக்குப் பொருந்திய விளக்கம் வேண்டும் என்கிறார்கள். ஆனால் எப்படி அறிவால் விளக்க முடியும்? அவன் நம்மைப் போல் புத்தியும் பகுத்தறிவும் படைத்தவன் அல்லவே! நமக்கு அபாரமான புத்தியையும், பகுத்தறிவையும் தந்து முட்டாளாக்குகிறவனல்லவா அவன்?
>
> — ஸ்வாமி விவேகானந்தர்

மாதிரி பிறக்கக் கூடாதா?.... அவன் மனக் கண் முன் கமலு தோன்றி விடுகிறாள். உடன் நெஞ்சம் நெகிழ்ந்து விடுகிறது.

"ஜல், ஜல்" என்று இரட்டைக் காளை வண்டி ஒன்று விரைந்து வருகிறது. 'டிங் டாங்' என்று இசையாய் அதன் அபார மணி அடிக்கிறது. மயில்கள் பறந்து வருகின்றன. அதைப் பார்த்தவாறு நிற்கிறான்.

வண்டி கடந்து போகிறது. சற்றுத் தூரம் போனவுடன் நின்று விடுகிறது. வண்டிக்காரன் இறங்கி ஓடி வருகிறான்.

"உங்களை எஜமானி அம்மா பார்க்கணும் என்கிறாங்க!"

அவன் விழித்தான்.

"என்னையா?"

"உங்களைத்தான்..."

முகத்தைத் துடைத்துக் கொண்டு நடக்கிறான். வண்டியை அணுகி உள்ளே பார்க்கிறான் அவன்.

உள்ளே யார் இருக்கிறது! பல கணங்கள் யோசித்து நிற்கிறான். ஜரிகைப் புடவையும், நகைகளும் மினுமினுக்கும் ஒரு பெண்மணி தென்படுகிறாள். அவளது உடலும் முகமும் ஜொலிக்கின்றன.

"நான்தான் துரைக்குட்டி!"

"கமலுவா?"

"ஆமாம்!"

அவன் அதிசயப்பட்டு நிற்கிறான். அவன் நாக் குழறியது.

"இதெல்லாம் உனக்கு ஏது கமலு...?"

அவள் சற்றுத் தயங்கினாள்.

"எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதடா!"

அவன் கண்கள் ஆச்சரியத்தில் மலர்ந்தன.

"அப்படியானால் நீ பழைய கமலு இல்லை! புதுக் கமலு! இனிமேல் சந்தோஷமாக இருப்பாய்!"

அவள் அவனை இரக்கத்தோடு நோக்கினாள். அவள் கண்களில் நீர் பளபளத்தது.

"நான் யாரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன் என்று நினைத்தாய்?"

"யார் சொல்லேன்?"

அவள் குரல் விக்கியது. நெஞ்சம் அழுத்தது.

"அந்தத் தரகர் மாமாவை..."

இப்போது அவன் கண்கள் ஆனந்தத்தில் பளபளத்தன. தரகர் முத்துசாமி என்றதும் அவர் வீட்டில் நிறைந்திருக்கும் பணக் குவியல்கள் நினைவில் வந்துவிட்டன.

"அப்படியானால் தினம் பிட்டாயாகச் சாப்பிடுவாய்! பழமாகச் சாப்பிடுவாய்! காப்பியும் பொங்கலுமாக....."

அதற்குள் அவள் கண்களிலிருந்து நீர் கலகலவெனக் கொட்ட ஆரம்பித்தது. அவன் துணுக்குற்றான்.

"எனக்காகவா அழுகிறாய் கமலு? நான் சமாளித்துக் கொள்வேன்....."

"நான் எனக்காக அழுகிறேன்..." அவள் விம்மினாள். பிறகு குலுங்கி அழுதாள்.

"பைத்தியம்!" என்றான் அவன். கமலுவின் அழுகை ஓயவில்லை.

"கமலு!" அவன் அழைத்தான். அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவள் அவன் கையில் ஐந்து ரூபாய் நோட்டை வைத்தாள். வண்டி புறப்பட்டது. அவன் பிரமித்து நின்றான். சில கணங்கள் செய்வது தெரியவில்லை. ஆனால் மறுகணம் அவனுள் ஒரு தீவிரம் எழுந்து விட்டது. 'இந்தக் கமலுவும் அவர்களுடன் சேர்ந்து விட்டாள். பார்த்தாயா?"

ஐந்து ரூபாய் நோட்டை வெறுப்போடு பார்த்தான். "இனி அவளும் உன் பங்கிலிருந்து விடுபட்டாள். நீதான் தனி!" என்று மனம் கூவியது.

"கமலு...."

உரக்கக் கத்திக் கொண்டு அவன் ஓடினான். இரைக்க இரைக்க ஓடி வண்டியைப் பிடித்து விட்டான். "இந்தா இது எனக்கு வேண்டாம்...." உள்ளே ஐந்து ரூபாய் நோட்டை விசி எறிந்தான். பிறகு வேகமாகக் கடையை நோக்கி ஓடினான்.

கடை வாயிலில் உட்கார்ந்தான். முகத்தின் மேல் கைவைத்தான். முதன் முதலாக அழுகை எங்கிருந்தோ திடீரென்று வந்தது. கண்கள் நீரைக் கொட்டின. அவனுக்கிருந்த சிறு தைரியமும் உடைந்து ஓடிவிட்டது.

விக்கி வெகு நேரம் அழுதான். இருட்டி விட்டது. வானில் நிலா! வீதியில் விளக்கு! அவனைச் சுற்றி அவனது நிழல்கள்.

இரவு முதலாளி வந்தார். "ஸார்! ஆற்றிலே கல் நிறைய மிதந்து வருகிறது!" என்றான்.

'என்னடா?"

"ஆமாம் ஸார், கல் ஆறு புரண்டு வருகிறது."

இப்போதும் அவன் அதே கடையில் வேலை பார்க்கிறான். மௌனமாய், அசுர வெறியின் வேலைகளைச் செய்து வருகிறான். இடையிடையில் "கல் ஆறு புரண்டு வருகிறது" என்கிறான். அடிக்கடி அவ்வாறு கூறுகிறான். எல்லோரும் சிரிக்கிறார்கள். இதைக் கேட்கவே சிலர் வேண்டுமென்று வருகிறார்கள்.

அவனை உலகம் புரிந்து கொள்ளவில்லை. அவனும் உலகைப் புரிந்து கொள்ளவில்லை!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4592
Registered as a Newspaper in Ceylon



வெளுக்கும் துணிகளெல்லாம் வெண்மை மயம், துப்புரவான தூய்மை மயம்: வெல்வது ஸர்ப் சலவையின் எல்லைமீறிய வல்லமை. கரைகடந்த நுரைவளம். கேட்பானேன். சிற்றுடை, சேலை முதல் சிறுவரின் ஆடை வரை... எதற்கும் நிகரிலாத வெண்மை, சிகரமான தூய்மை. கைப்பட வீட்டிலே துணிவெளுக்க ஒரே வழி: கைகண்ட ஸர்ப்.

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

U. 36-143 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு